மகரிஷி தேவேந்திரநாத தாகூர்

நாராயண் செள்துரி

இந்திய

T
923.654
T 129 C

T 129 C

மகரிஷி தேவேந்திரநாத தாகூர் (1817—1905) வங்க மொழியில் படைத்த இலக்கியக் கொடைகள், அவர் தம்முடைய சமய நம்பிக்கைகளை நன்கு தெரிந்தெடுத்த மொழியிலும், ஒரு முறையான அமைப்பிலும் வெளிப்படுத்த முனைந்த போது தற்செயலாக நிகழ்ந்தவை ஆகும். அவர் ராம்மோகன் மரபின் நேரடி வாரிசு ஆவார். காலவரிசைப்படி அவர், ராஜாராம்மோகன் ராய் வாழ்ந்த காலத்தையும், அவரைத் தொடர்ந்து பின்னால் தோன்றிய சமயத்தலைவர் கூட்டம் வாழ்ந்த காலத்தையும் இணைக்கும் தொடர்பாக இருந்தார் அவருடைய இலக்கியப் படைப்புகளை மதிப்பீடு செய்யும் முயற்சி, அவருடைய ஆன்மீகப் பயணங்களைப் பற்றி அறிவதில் நம்மைச் செலுத்தும், அவருடைய படைப்புகளில் மிகமிகச் சிறந்தது என்று எல்லாரும் ஏற்றுக் கொண்டது அவருடைய 'சுயசரிதை' ஆகும். அவருடைய இன்னொரு புகழ்பெற்ற நூலான 'பிரம்மோதர்ம விளக்கம்' தன் பெயராலேயே அதன் உட்கருத்தைத் தெளிவாக்கும். உபநிஷத்துக்களிலும் மற்ற சம்ஸ்கிருத நூல்களிலும் காணப்படும், பழங்காலத்து முனிவர்கள் கூறியுள்ள என்றுமுள சில நித்திய உண்மைகளை இந்த வாழ்க்கையிலேயே அடைய வேண்டும் என்பதே அவருடைய தேட்டமாகும். எனவே அவருடைய இலக்கியம் அந்தத் தேட்டத்தின் கதையைத் திருப்பிச் சொல்லுவது போல அடிப்படையில் அமைந்து விட்டது.

அவருடைய உரைநடைப் படைப்புகள்—சீரான வடிவமைப்பு, நடையின் நடுநிலை, அழகு, வெளிப்பாட்டில் கம்பீரம் எல்லாவற்றுக்கு மேலாக இயற்கை வனப்பில் ஆழ்ந்த புலன் காட்சி ஆகியவற்றைக் கொண்டு அற்புதமாக அமைந்துள்ளன.

வங்காள உரைநடை தோன்றி வளர்ந்த துவக்க கால கட்டத்தில் அதைப் படைத்த ராம்மோகன், ஈஸ்வர சந்திரர், அட்சயகுமார டட்டா ஆகியோருடன் சேர்ந்து தேவேந்திரநாதரையும் ஒரு முதன்மைச் சிற்பி எனலாம்.

தேவேந்திரநாதரின் வாழ்க்கை மற்றும் அவருடைய தொண்டு பற்றிய இந்தச் சிறு நூலில் நாராயண் சௌதுரி அவருடைய சமய ஆளுமையைப் பின்புலமாகக் கொண்டு அவருடைய இலக்கியக் கொடைகளை மிகத் திறமையாக வெளிப்படுத்தி இருக்கிறார்.

மேலட்டை வடிவம் : **சத்யஜித்ரே**

உருவப் படம் விஸ்வ பாரதியைச் சார்ந்த சுபிமல் லஹிரி **அவர்களின்** ஒத்துழைப்புடன்.

SAHITYA AKADEMI

REVISED PRICE RS. 15.00

இந்திய இலக்கியச் சிற்பிகள்

மகரிஷி தேவேந்திரநாத தாகூர்

ஆங்கில மூலம் :

நாராயண் சௌதுரி

தமிழாக்கம்

கா. மீனாட்சிசுந்தரம்

சாகித்திய அக்காதெமி
புது தில்லி

MAHARSHI DEVENDRANATH TAGORE—Tamil translation by K. Meenakshisundaram of Narayan Chaudhuri's English monograph. Sahitya Akademi, New Delhi, 1980.

SAHITYA AKADEMI
REVISED PRICE RS. 15.00

T
923.654
T 129 C

© Sahitya Akademi New Delhi.

First Edition : 1980

Library IIAS, Shimla
T 923.654 T 129 C
00117387

..pies can be had from :

SAHITYA AKADEMI

Rabindra Bhavan, New Delhi—110001

REGIONAL OFFICES

Madras—600018 Calcutta—700029 Bombay—400014

117387
14/12/04
SHIMLA

Published by Sahitya Akademi, New Delhi and Printed at
Tax & Company Law Press, Madras-24

பொருளடக்கம்

பக்கம்

1.	முன்னுரை	5
2.	பிறப்பும் இளமை வாழ்வும்	9
3.	தர்மத்தின் வழியில்	18
4.	நெருக்கடி	29
5.	புதியதொரு பேரொளி	38
6.	இடைவேளை	47
7.	பிரம்ம சமாஜ இயக்கத்தில் பிளவு	56
8.	இறுதி நாட்கள்	61
9.	இலக்கிய மதிப்பீடு	66
	மஹரிஷி வாழ்வில் சில முக்கிய நாட்களும், நிகழ்ச்சிகளும்	75
	துணை நூல்கள்	79

1. முன்னுரை

மகரிஷி தேவேந்திரநாத தாகூர் ஒரு சமயக் குரவராகவே முதன்மை நிலையில் தோன்றுகிறார். அவருடைய வாழ்வும் வழியும் மூச்சும் சமயமே ஆகும். அவர் சமயத் தலைவராய் அதை முன் நடத்திச் சென்றவராவார். அவர் வங்க மொழியில் சமய நம்பிக்கைகளைத் தெரிந்தெடுத்த நடையிலும் குறிப்பிட்ட முறையிலும் வெளிப் படுத்திய நூல்கள் தற்செயலாக நல்ல இலக்கியங்களாக அமைந்து விட்டன. இவரைப்போலத் தெய்வப்பித்துக்கு ஆட்பட்டவர்களை, ஓரிருவருக்கு மேல் 19-ஆம் நூற்றாண்டு வங்கச் சமய வரலாற்றில் காண இயலாது.

நம் நாட்டில் ஆங்கிலேயர் ஆட்சி தோன்றியதன் விளைவாக வங்காளம் முழுதும் ஒரு புத்தெழுச்சி பரவியது. அதன் ஒரு பகுதி யாய்ச் சமயச் சீர்திருத்தம் மலர்ந்தது. அந்த மலர்ச்சியில் தேவேந்திர நாதருக்கும் பங்கு உண்டு. மேற்கத்திய நாகரிகத் தாக்கங்களில் நல்லனவும் இருந்தன; கெட்டனவும் இருந்தன. அவற்றை ஏற்றுக்கொண்ட முதல் இந்திய மாநிலம் வங்கமே ஆகும். இந்தப் பண்பாட்டுக் கலப்பால் ஏற்பட்ட நல்லனவற்றுள் ஒன்று சமய மறுமலர்ச்சி. ராஜாராம் மோகன் ராய், சமயம், சமூகம், கல்வி போன்ற துறைகளில் பல முனைகளிலும் பல புதிய முயற்சிகளை மேற் கொண்ட முன்னோடியாவார். மகரிஷி தேவேந்திரநாத தாகூர், ராம் மோகன் மரபில், நேரடி வாரிசும் ஆவார். ராம்மோகன் முடிக் காமல் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர்ந்து ஆற்ற வேண்டிய பொறுப்பு இவருக்கு ஏற்பட்டது. ராஜாராமையும், பிற்காலத்தில் தோன்றிய சமயத் தலைவர் கூட்டத்தையும் இணைக்கும் பாலமாய் அவர் இருந்தார். மகரிஷியின் பணிகள் பலவகைப்பட்டன; எனினும் அவருடைய திறமை, கவனம் இவற்றின் பெரும்பகுதி சமயத்திற்கு மட்டுமே பயன்பட்டது.

ஆகவே, தேவேந்திர நாதரின் இலக்கியப் பணிகளை மதிப்பீடு செய்யவேண்டுமாயின், சமயத்துறையில் அவர் ஆற்றிய பணிகளைப் பின்புலமாக வைத்தே நாம் மதிப்பிடவேண்டும். இரண்டையும் தனித்தனியாய் மதிப்பிட முடியாது. இலக்கியப் பணி பற்றிய மதிப்பீடு நம்மையறியாமல் அவருடைய சமயப் பணிகளுக்கே நம்மை

இழுத்துச் செல்லும். இரண்டும் ஒன்றுடொன்று இணைந்தவை. தேவேந்திர நாதர் எழுதியனவும் பேசியனவும் சமய அனுபவங்களை விளக்க முயன்றதே ஆகும். இந்த அனுபவங்கள் இறைவனுடன் இணைய அவர் மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாய் எழுந்த ஆன்மீக முரண்களையும் போராட்டங்களையும் கொண்ட மனவாழ்வில் ஏற்பட்டவை. அவருடைய படைப்புக்களில் அவர் 'சுயசரிதை'யே மிகச் சிறந்தது. இதுகூட, இறையருளில் மூழ்கித் திளைத்த பக்தனாய் அவரை ஆட்படுத்திய ஆழ்ந்த வேட்கைகளையும், உள்தூண்டல் களையும் ஒளிவுமறைவின்றி வெளிப்படுத்த அவர் மேற்கொண்ட முயற்சியே எனலாம்.

அவருடைய இன்னொரு சிறந்த நூல் 'பிரம்மோ தர்மத்தைப் பற்றிய விளக்கம்' என்பது. அது தன் தலைப்பிலேயே தன் தன்மையைக் காட்டுவது. இந்நூல், 1861-'62-ஆம் ஆண்டுகளில் பிரம்மசமாஜத்தின் நிர்வாக அமைச்சராயிருந்து அவர் ஆற்றிய சொற்பொழிவுகளின் தொகுப்பே ஆகும். இதில் 37 சொற்பொழிவு கள் உள்ளன. இதற்கு முன்பு அவர் 'பிரம்மோ தர்மம்' என்ற ஒரு புகழ்பெற்ற நூலை வெளியிட்டார். இது, இந்தியாவின் தொன்மையான சாஸ்திரங்களில் உள்ள கருத்துக்களில் மிகத் தூய்மையானவற்றையும், விழுமியவற்றையும் கொண்ட சிறந்த உண்மைக் கருவூலம். இந்தப் 'பிரம்மோ தர்ம'த்தில் உள்ள சுலோகங்களில் மிக நுட்பமான பொருள் கொண்ட சிலவற்றின் முக்கியத்துவத்தை விரித்துரைத்து அவர் ஆற்றிய சொற்பொழிவுகள் தாம் 'பிரம்மோ தர்மத்தைப் பற்றிய விளக்கம்' என்னும் நூலில் உள்ளவை.

இவருடைய மற்ற நூல்களும் ஏறக்குறைய இத்தகைய நோக்கத்தையும் முயற்சியையும் கொண்டதாய் உள்ளன. அவை தக்க இடங்களில் குறிப்பிடப்பெறும்.

இவ்வாறாகத் தேவேந்திரநாதரை ஒரு இலக்கியவாதியாய்க் கருதி அவருடைய தனித்தன்மையையும் இயல்புகளையும் மதிப்பிடும் முயற்சி, தெய்வீக ஒளியையும் சத்தியத்தையும் வாழ்வில் நாடிச் சென்ற ஒரு மெய்யான பக்தர் தம் சமயப் பயணத்தில் பெற்ற பல வெற்றிகளின் மதிப்பீடாகவே அமைகிறது. சத்தியத்தைத் தேடிய அவருடைய இந்த வேட்கை, பன்னெடுங்காலத்திற்கு முன்பிருந்தே உபநிஷத்துகளிலும் பிற சமஸ்கிருத நூல்களிலும் காணப்படும் முனிவர்களின் நித்திய மெய்ம்மைகளை இந்த வாழ்க்கையிலேயே அடைய முயன்ற ஞான முயற்சியாகும். அவருடைய இலக்கியம் அத்தகைய வேட்கையைத் திரும்பச் சொல்லும் கதைபோலவே அடிப்படையில் அமைந்தது. தொன்றுதொட்டு வரும் பாரதத்தின்

ஞான உள்வீச்சு, தேவேந்திர நாதரின் எழுத்துக்கள் மூலம் புதிய வடிவும் புதியநடையும் பெற்றுத் தானுகவே தன்னை வெளிப் படுத்திக் கொண்டது.

அனைத்தையும் வாரி விழுங்கும் செந்தீயைப் போல, சமயம் தேவேந்திரரின் நெஞ்சம் முழுதும் பரவி அவருடைய தனித்தகை மையையும் விழுங்கிவிட்டது எனின், அவரைத் தலையாய சமயவாதி என்று கூறுவதை விடுத்து அவருடைய இலக்கியத் திறனில் நாட்டஞ் செலுத்துவதற்கு என்ன தேவை இருக்கிறது? இந்திய இலக்கிய வளத்துக்கு ஏதேனும் ஒரு வகையில் தொண்டுபுரிந்த புகழ் பெற்ற எழுத்தாளர் கூட்டத்தில் ஒருவராய் இவரையும் கருதித் தனியாய் மதிப்பிடவேண்டிய தேவை ஏன் எழுந்தது? எழுத் தாளர் என்ற முறையில் அவருடைய தெளிவான தனித் தன்மை எங்குள்ளது? இந்த வினுக்களுக்கு விடை பின்வருமாறு அமையும்.

தேவேந்திரநாதர் அடிப்படையிலும் முதன்மையாகவும் சமயத் தலைவர்தாம். எனினும் அழகுணர்ச்சியற்ற, வாழ்வில் பொருள்கள் மீது நாட்டமற்ற துறவியல்ல. கல்கத்தாவில், செல்வமிக்க உயர் குடும்பத்தில் பிறந்தவர் அவர். அந்தக் குடும்பம் வங்காளத்துப் பண்பாட்டு வாழ்வில் ஏற்பட்ட எல்லாவகை முன்னேற்ற இயக்கங் களிலும் முன்னணியில் நின்ற பெருமையுடையது. தவிர, அது பரம் பரையாய்க் கலைமீது பற்றுக்கொண்டது. ஆடம்பரமும் கம்பீரமும் மிக்க செல்வச் சூழ்நிலையில் தேவேந்திரர் பிறந்து வளர்ந்தார். தம் இளமைக் காலத்தில் அவர் இறையுணர்வில் மூழ்கி நின்றதும், அதற்கு மேலாய் மண்ணுலகத்தின் பங்கினைத் துறக்கவேண்டும் என்ற உந்தலை அவர் பெற்றதும் வியப்புக்குரியன. அவருடைய தந்தையார் இளவரசர் துவாரகநாத தாகூர் அக்காலத்தில் கல்கத்தாவில் வாழ்ந்த பெருஞ் செல்வர்களில் ஒருவர்; எல்லா முன்னேற்ற இயக் கங்களிலும் பரிவுகொண்ட உயர்குடிப் பண்பாளர். ராஜாராம் மோகன் ராயின் உற்ற நண்பர்; நிறையப் பொருட்செலவு செய்வதில் பெயர் பெற்றவர். இவருக்கு மகனுகப் பிறந்த தேவேந்திரர் வாழ்க் கையின் பல வண்ணங்களையும் வளத்தையும், மிக அருகிலிருந்து கண்டார். அவர் அதன் மையமாகவே இருந்தார். இத்தனையிருந் தும் செல்வமிக்க வாழ்க்கையிலிருந்து அவர் மெள்ள மெள்ள விலகிக் கொண்டார். தியானத்திலும் வழிபாட்டிலும் மனத்தைச் செலுத்த முனைந்தார்; மண்ணுலகப் பொறுப்புகளும், வீட்டுப் பொறுப்புகளும் அருமல் புறத்தில் அவருடன் இருந்தன. ஆனுல் இறைவனேடு தம் வாழ்வை நடத்தியவராய், இறைவனேடு இரண்டறக் கலக்கும் முயற்சியில் இடைவிடாது ஈடுபட்டவராய் அகத்தில் ஆழ்ந்து விட்டார்.

அவருடைய ஆன்மீக வேட்கை எத்தகையதாயிருந்தாலும் அழகு, வடிவம் ஆகியவை பற்றிய கலையுணர்ச்சி குடும்பப் பாரம்பரிய மாய்த் தேவேந்திரரைப் பெரிதும் ஈர்த்தது. தம் திறன் முழுவதை யும் உரைநடைச் செம்மைக்காக அவர் செலவிட்டுள்ளமை, அவர் எழுத்துக்களை ஆழ ஊன்றிப் படித்தால் தெரிய வரும். இடை யிடையே வரும் பாசுரங்களையும் பாடல்களையும் தவிர, அவருடைய நடையில் செப்பமும் சீர்மையும் உண்டு; கருத்து வெளிப்பாட்டில் கம்பீரமும் அழகும் உண்டு; எல்லாவற்றுக்கும் மேலாக இயற்கை அழகுகளில் அவர் புலனுணர்வு ஆழ்ந்து நின்றது. அவருடைய சுயசரிதையில் உள்ள பலபகுதிகள் இப்படி அமைந்தவை. அவற்றில் சிறப்பாக இருப்பன அந்நூலின் பிற்பகுதியிலுள்ள குறிப்புக்கள். அமைதியையும் தனிமையையும் தேடி இடைப்பருவ ஆண்டுகளில் இமயமலைக்குச் சென்று வந்த அனுபவங்களை அவர் விவரிக்கும் இப் பகுதி, இயற்கை அன்னைமீது அவர் கொண்டிருந்த மாறாக் காதலுக் கும், அதற்கு அழகிய வடிவம் தரும் அவருடைய திறமைக்கும் சிறந்த சான்றுகள் ஆகும். 'பத்ராவளி' என்ற தொகுப்பில் காணப்படும் அவருடைய சில கடிதங்களும் இக்கருத்திற்கு அரண் ஊட்டுவதாய் அமைகின்றன. அவருடைய புதல்வர்களில் மிகச் சிறந்தவர் உலகப் புகழ் பெற்ற கவிஞரான ரவீந்திரநாத தாகூர். ரவீந்திரர் படைப்பாற்றலில் பல பரிமாணங்களைப் பெற்றிருந்தார். அவர் தம்முடைய வாழ்க்கை முழுவதையும் கூர்ந்த இயற்கை உணர்விலும், இயற்கை அழகை வெளிப்படுத்தும் முயற்சியிலும் செலவிட்டமை அடிப்படை ஏதுமின்றி ஏற்பட்டதன்று; அவருடைய கவிதைகளில் காணப்படும் அனுபூதிநிலை தொன்று தொட்டுவரும் குடும்ப மரபின் ஊற்றுக்களே என்பதை ஆய்வோர் அறியலாம்.

ராம் மோகன்ராய், ஈசுவரசந்திர வித்யாசாகர், அட்சய குமார தத்தர், பூதேவ முகர்ஜி ஆகிய இவர்களுடன் சேர்ந்து தேவேந்திர நாதரையும் வங்காள உரைநடையை ஆக்கிய முதன்மைப் படைப் பாளிகளில் ஒருவர் என்றே கருதவேண்டும். அவருடைய உரை நடை இலக்கியக் கொடை பற்றி விரிவாகவே ஆராயவேண்டும். 19-ஆம் நூற்றுண்டின் முற்பகுதியில் வங்கத்தில் தோன்றித் தம் முடைய பலமுனைப்பட்ட ஆளுமை வீச்சால் வங்கச் சமூகத்தை வளப்படுத்திய, தனித்தன்மை கொண்ட இந்த மனிதரின் வாழ்வுக் கோலங்களை அங்கங்கே சுட்டி அவருடைய இலக்கியப் பணியை ஆராய முயல்வதே பின்வரும் பகுதிகளின் நோக்கம்.

2. பிறப்பும் இளமை வாழ்வும்

மகரிஷி தேவேந்திர நாத தாகூர் 1817-ஆம் ஆண்டு மே 15-ஆம் நாள் கல்கத்தாவில் பிறந்தார். 19-ஆம் நூற்றுண்டில் வங்காளத்தில் இருந்த செல்வக் குடும்பங்களில் ஒன்று 'ஜொரன்கோ தாகூர்' குடும்பம். அந்தக் குடும்பம் அக்காலத்தில் சமூக, சமய, பண்பாட்டு முன்னேற்றச் சீர்திருத்த இயக்கங்களோடு தொடர்பு கொண்டு அவற்றைப் பெரிதும் ஆதரித்தது; கலை, சமயத் துறைகளில் மகரிஷி தேவேந்திரர், ரவீந்திரநாதர், அபனேந்திரர் போன்ற பல தலை மக்களை ஈன்று வங்கத்திற்கு அளித்த பெருமையும் உடையது. மூத்த மகனுன தேவேந்திரருக்குக் கிரீந்திரநாதர், நாகேந்திரநாதர் என்று இரண்டுதம்பிகள் இருந்தார்கள். மற்றும் இரு சகோதரர்கள் சிறு வயதிலேயே இறந்துவிட்டனர்.

தாகூர் குடும்பத்தினர், பொதுவாகப் பெருநிலக்கிழார்கள். அவர்களுக்குச் சொந்தமான பெருநிலங்கள் வங்காளத்திலும் பிற இடங்களிலுமிருந்தன. தேவேந்திரரின் தந்தையார் துவாரகநாதர் எல்லா வகையிலும் ஒரு தனித்தன்மை பெற்று விளங்கியவர்; செயலார்வமும் ஊக்கமும் மிக்கவர். அவர் மற்ற பெருநிலக் கிழார் களைப் போலத் தம் குடி மக்கள் தரும் வரிப்பணத்தை வைத்து வாழ் வதில் மன நிறைவு கொள்ளவோ, நகரத்துப் பலவிதக் களியாட்டங் களில் மூழ்கிப் பொழுதை வீணுகக் கழிக்கவோ விரும்பவில்லை. அவர் கிழக்கிந்தியக் கம்பெனியில் பணியாற்றச் சேர்ந்தார். அவரு டைய செயலாற்றலும் மதிநுட்பமும் கம்பெனியில் ஒரு பொறுப்புள்ள அலுவலராய் அவரை உயர்த்தின. 24-பர்காஞு மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியாளரின் கீழ் ஒரு நிர்வாக அலுவலராகவும், உப்பு முகவராகவும் பணியாற்றினுர். அங்கேயே தொடர்ந்திருந்திருந்தால் இன்னும் பெரிய பதவிகளுக்கு அவர் உயர்ந்திருக்க முடியும். ஆனுல் பணியாற்றுவதில் அவருக்கிருந்த பேரார்வமும் முனைப்பும் பிறரைச் சார்ந்து நிற்கும் ஒரு அடிமை போலிருக்க அவரை விடவில்லை. ஆருண்டுகளுக்குப் பின் பணியிலிருந்து விலகினுர். சில பங்குதாரர் களைச் சேர்த்துக்கொண்டு 'கார், தாகூர் அண்(டு) கம்பெனி' என்ற பெயரில் தனியாக ஒரு வாணிபம் தொடங்கினுர். பல இடங்களில் பட்டு உற்பத்தி நிறுவனங்களை ஏற்படுத்தினுர்; சர்க்கரை ஆலை களைத் துவக்கினுர்; ராணிகஞ்ச் பகுதியில் நிலக்கரிச் சுரங்கங்களை

வாங்கினார். உப்பு, வெடியுப்பு, கரி ஆகியவற்றில் வணிக முதலீடு செய்தார். இவ்வாறாகப் பல வகைகளில் பெருமளவு செல்வத்தை அவர் திரட்டினார். வங்கத்தில் மட்டுமன்றி ஒரிசா போன்ற தொலை வான இடங்களிலும் புதிய புதிய ஜமீன்தாரி நிலங்களை வாங்கினார். அவர் பாங்குத் துறையிலும் ஈடுபட்டார். அவர் தோற்றுவித்த 'யூனியன் பாங்க்' தான் கல்கத்தாவில் வங்காளியர் நிர்வாகத்தில் நடத்தப்பட்ட முதல் வங்கி ஆகும்.

எனினும், இவையெல்லாம் அவருடைய அருஞ்செயல்களில் ஒரு பகுதியே ஆகும். தம்முடைய செல்வத்தாலும், கல்கத்தா நகரில் தமக்கிருந்த உயர்நிலையாலும் தாம் பெற்றிருந்த சமூகச் செல்வாக்கு முழுதையும் நல்ல வழியில் துவாரகநாதர் பயன்படுத்தினார். எத்தனையோ அறக்கொடைகளை நிறுவினார்; நற்பணிகளுக்குப் பேரள வில் உதவினார். ராஜாராம் மோகன்ராயின் நண்பராகவும், அவரைப் பின்பற்றுபவராகவும், பரிவுணர்வு நிரம்பப் பெற்றவராயும் இருந்த தால், வங்கச் சமூகம் நன்மை அடையும் என்று கருதி ராஜாராம் மோகன்ராய் துவக்கிய சமூக, சமயச் சீர்திருத்தப்பணி எதுவாயினும் அதற்கு நிறையப் பொருளை வாரி வழங்கினார். 'உடன் கட்டை ஏறல்' எனும் கொடிய பழக்கத்தை ஒழித்ததில், வங்கத்தில் ஆங்கிலக் கல்வி முறையைப் புகுத்தியதில், உள்நாட்டு மொழி அச்சகங் களின் உரிமைகளை நிலைநிறுத்தியதில், வேதாந்தக் கொள்கைகளின் தாம் நிறுவிய 'பிரம்ம சபை'யை நடத்தியதில்—இவைபோன்ற பல முன்னேற்றச் சீர்திருத்தங்களில் ராம்மோகன்ராய்க்குத் துவாரகநாத ரின் கலப்படமற்ற ஆதரவு குறைவின்றிக் கிடைத்தது. சுருங்கச் சொன்னால், துவாரகநாதர் தாம் வாழ்ந்த காலச் சமூகத்தில் ஒரு அசைக்கமுடியாத சக்தியாய் இருந்தார். பெருநிலக்கிழார்க் குடும் பத்தில் தோன்றி அறிவும் இரக்கமும் பெற்றவராய் இருந்த அவர், தம்மிடமிருந்த வலிமையைச் சமூகத்தில் தேங்கிக்கிடந்த மூட நம் பிக்கைகளைத் தகர்ப்பதிலும் முற்போக்குச் சிந்தனை மிக்க பாதையில் சமூகத்தைச் செலுத்துவதிலுமே பெரிதும் பயன்படுத்தினார்.

துவாரகநாதர் ஆடம்பரத்தையும் பகட்டையும் மிகவும் விரும் பினார். ஐரோப்பியருடன் தங்குதடையின்றிப் பழகினார். கல்கத்தா நகரின் வடபகுதியிலிருந்த 'பெல்காச்சிய வில்லா' என்று அழைக் கப்பட்ட தம்முடைய அழகுமிக்க இன்பப் பூங்காவில் பெரிய பெரிய விருந்துகளை நடத்தினார். செலவுமிக்க இத்தகைய ஆடம்பரங்களில் அவர் ஈடுபட்டது தம்முடைய வணிக முயற்சிகளை வளர்ப்பதற் காகவே. எனினும், வீட்டில் தொன்றுதொட்டுவரும் மரபிற்கேற்பத், திருமாலை வழிபடும் ஒரு நல்ல வைணவராகவே அவர் இருந்தார். ஆனால், ஒரு வழக்கத்தை வழக்கத்திற்காக மட்டும் போற்றும் நிலையைத் தாண்டியவர். அக்கால மூட நம்பிக்கைகளைப் புறக்

கணித்து விட்டுக் கடல் கடந்து இருமுறை இங்கிலாந்துக்குச் சென்ருர். ஒரு இளவரசன் போலவே அங்கும் வாழ்ந்தார். உண்மையில் அவர் பெயருக்கு முன்னுள்ள 'இளவரசர்' என்னும் அடை, இங்கிலாந்தில் அவர் வாழ்ந்த வளமிக்க உயர்வாழ்வில் அவருக்கு ஏற்பட்டதாகும். 1846 ஆகஸ்டு முதலாம் நாள் அவர் இங்கிலாந்திலேயே காலமானுர்.

துவாரகநாதரின் வாழ்க்கை பற்றி இவ்வளவு சொல்லியது அவருடைய மகன் பிறந்து வளர்ந்த—வளர்க்கப்பட்ட—சூழ்நிலை எத்தகையது என்று ஓரளவு சுட்டிக்காட்டவே. ஆடம்பரத்தின் மடியிலே பிறந்து, நகர வாழ்வை மையமாகக் கொண்ட செல்வக் குடும்பத்தின் பகட்டான சூழ்நிலைகளில் வளர்ந்து குழந்தைப் பருவத்தையும் பள்ளிப் பருவத்தையும் தேவேந்திரர் கழித்தார். அவருடைய இளமைக் காலம் செல்வத்திளைப்பிலும், பகட்டுவீச்சி லும் கழிந்தது. அவருடைய தேவைகள் கொஞ்சமே; துன்பமோ ஏதுமில்லை. அவரே தம் சுயசரிதையில் ஒப்புக் கொண்டவாறு, இளமையின் துவக்கத்தில் சில தவறுகளையும், வரம்புமீறிய செயல்களையும் செய்துள்ளார்.

தேவேந்திரநாதர் தம்முடைய பாட்டியின் மீது பேரன்பு கொண்டவர். அப் பெருமாட்டி ஆண்டு முழுதும், ஒரு இந்துவின் வீட்டில் நடக்க வேண்டிய எல்லாச் சடங்குகளையும் நோன்புகளை யும் முறை பிறழாது செய்து முடிக்கும் அளவு ஆழ்ந்த சமயப் பற்றுக் கொண்ட பெண்மணி. அவருடைய சமய நிகழ்ச்சிகள் அனைத்திலும் தேவேந்திரர் தம் பாட்டியை நிழல்போலத் தொடர்ந் தார். இவ்வாறு குழந்தைப் பருவத்திலிருந்தே பூசனை செய்வதிலும், வழிபாட்டில் மூழ்குவதிலும், ஈர்ப்பும் உற்சாகமும் அவருக்கு ஏற்பட்டன.

எனினும் அவருடைய வாழ்க்கைப் பாதையை மாற்றியவை இரண்டு நிகழ்ச்சிகள் ஆகும். பதினுன்கு வயதுப் பையனுக அவர் இருந்தபோது ஒருநாள் இரவில் விண்மீன்கள் பொதிந்த வானத்தை நோக்கிப் படைப்பின் தனித்தன்மையைப் பற்றி மனதுள் எண்ணி வியந்து கொண்டிருந்தார். எதிர்பாராது ஒரு எண்ணம் திடீரென்று அவருள் எழுந்தது. "முடிவற்ற இந்த வானும் முடிவற்ற இந்தப் பேரண்டமும், எல்லைக்கு உட்பட்ட ஒருவரால் படைக்கப்பட்டனவா யிருக்க முடியாது". இந்த உணர்வு அவர் நெஞ்சில் நிலை கொண்டது. இதுவே, அவர், உருவங்கள் வாயிலாக இறைவன், இறைவிகளை வணங்கும் உருவ வழிபாட்டு முறையைப் புறக் கணிக்கத் தொடங்கிய நிலையாகும்.

இரண்டாம் நிகழ்ச்சி ஏழாண்டுகளுக்குப் பின்னர் அவர் பாட்டியார் இறந்தபோது நடந்தது. அக்காலத்தில் ஒரு வழக்கம்; இறக்கும் தறுவாயில் இருக்கும் ஒருவரின் உடலைத் தூக்கிக் கொண்டு சென்று கங்கைக் கரையில் வைத்துவிடுவார்கள்; சாகும்வரை அப்படியே விட்டுவிடுவார்கள். இறக்கப் போகும் ஒருவருக்குச் சிறப்புக் கிடைக்க வேண்டுமென்று செய்யப்படும் 'தூய்மைப் படுத்தும்' சடங்காக இது கருதப்பட்டது. இதற்கு 'அந்தர் ஜலி' (Antarjali) என்று பெயர். அவருடைய பாட்டியாரின் உடலும் அவ்வாறு எடுத்துச் செல்லப்பட்டது. அவர் அப்போது இறக்கவில்லை. அவர் இறப்பதற்கு முந்தைய நாளிரவில், தேவேந்திரர் கல்லறைத் திடலில் ஆற்றின் ஓரத்தில் பாட்டியாருக்கு அருகில் ஒரு முரடான பாயின்மீது அமர்ந்திருந்தார். திடீரென்று சோர்வுடன் கூடிய ஒருவிதப் பரவசநிலை அவரை ஆட்கொண்டது. உடனேயே இவ்வுலகம் பற்றிய தம் கருத்தை அவர் மாற்றிக் கொண்டார். இது பற்றித் தம் சுயசரிதையில் அவரே எழுதியுள்ளார்.

"இதற்கிடையே ஒருவிதப் புதிரான உணர்வும் பற்றற்ற தன்மையும் என் மனதைப் பற்றின. நான் என்னுடைய முந்தைய "நானுகவே" இல்லை. செல்வத்தின்மீது ஒரு அளவுகடந்த வெறுப்பு என்னுள் எழுந்தது. நான் அமர்ந்திருந்த கரடுமுரடான பாயே எனக்குத் தகுதியான இடம் என்று தோன்றியது. விலையுயர்ந்த கம்பளங்களும் பஞ்சு மெத்தைகளும் இவை போன்ற பிறவும் வெறுக்கத் தக்கனவாய்த் தோன்றின. இதுவரை அனுபவித்தறியாத ஒரு கழிபேருவகை என் நெஞ்சை நிரப்பியது."

இது நடந்த ஆண்டு 1838. அப்போது தேவேத்திரருக்கு வயது 21. ஆனுல் இந்தப் பரவச உணர்வு நீண்டகாலம் நிலைத்து நிற்கவில்லை. அந்த இரவுடனேயே அதுவும் முடிந்துவிட்டது. அன்றிலிருந்து அந்த உணர்வைப் பெற அவர் தொடர்ந்து எவ்வளவோ முயற்சி செய்தார். எனினும் வெற்றி கிடைக்கவில்லை. எவ்வளவுக்குத் தீவிரமாய் அவர் முயன்ருரோ அவ்வளவுக்குத் தொலைவாக அது அவருக்குப் பிடிபடாது செல்லும். இறுதியில் எஞ்சியவை, ஆழ்ந்த ஏமாற்றமும் துன்பமுமேயாம். அவருடைய நிலைமையோ தாங்குதற்கியலாவண்ணமிருந்தது. மண்ணுலகத் தின்பங்களத்தனையும் அவருக்குப் பொருளற்றனவாய்த் தோன்றின. மாலைப் பொழுதுகளில் 'ஏடன் தோட்டத்து' நினைவுத் தூணுக் கருகில் யார் துணையுமின்றி ஆழ்ந்த நினைவுகளில் மூழ்கித் தனிமையில் அவர் பல நாட்கள் அமர்ந்திருப்பார். ஆனுல் அந்தோ!... இழந்துவிட்ட அந்தத் தெய்வீகப் பேரின்பம் ஒரு நாடு முழுதையும் பரிசாகத் தந்தாலும் கிடைக்காது போல இருந்தது. தம்முடைய அந்த மனநிலையைத், தேவேந்திரர், நாரதரின் மனநிலையோடு

ஒப்பிடுகிறார். நாரதருக்கு ஏற்பட்ட இத்தகைய ஏமாற்ற உணர்வு ஒன்றை அவர் பாகவதத்தில் வரும் கதை ஒன்றின் வழி விளக்கு கிறார். "ஒரு பக்தனுடைய வாழ்வில் இறைவன் சிறிது நேரம் இப்படி நேரில் தோன்றி மறைகிறான்; அவனை மேலும் மேலும் தன்னை நோக்கி இழுத்து அந்த ஈர்ப்பில் அப் பக்தன் தன்னைத் தூய்மைப்படுத்திக்கொள்ள எல்லையற்ற பல வாய்ப்புக்களையும் ஏற்படுத்தித் தருகிறான்."

மேற்கூறிய இரு நிகழ்ச்சிகளிலிருந்தும் தேவேந்திரரின் உள்ளான்மா விழிப்புப் பெற்றுவிட்டது என்பது தெளிவாகப் புலப்படும். இனி வரப்போகும் ஆண்டுகளில் அவருடைய நிலையான உறையுளாக இருக்கப்போகும் ஆன்மீகக் கொலு பீடத்தின் நுழைவாயிலை நோக்கி அவர் மெள்ள மெள்ள நகர்ந்து கொண்டிருந்தார். கருக்கொள்ளும் காலம் முடிந்துவிட்டது; முழுமை பெற்ற ஆன்மீக வாழ்வின் முளைகள் வேர்விடத் துவங்கிவிட்டன.

இதற்கிடையே, தேவேந்திரர் இளமைக் காலத்தில் இருந்த கல்வி நிலை பற்றி அறியலாம். ஆங்கிலத்தில் கல்வி கற்பிக்கவென்று சில ஆண்டுகளுக்கு முன்பு தோற்றுவிக்கப்பட்ட 'இந்துக் கல்லூரி'க்குச் சிறுவர்களை அனுப்புவது கல்கத்தாவில் இருந்த செல்வர்களின் அன்றைய பழக்கமாகும். தேவேந்திரநாதர் ஒன்பது அல்லது பத்து வயதுப் பையனாக இருந்த காலம், 'இந்துக்கல்லூரி'யில் படித்த இளம் வங்காள மாணவரின் மகிழ்ச்சிக் காலமாகும். அவர்களுடைய ஆசிரியரான ஹென்றி விவியன் லூயி டெரோசியோ என்பாரின் கீழ் மேற்கத்திய சிந்தனையின் பகுத்தறிவுப் போக்குகளைக் கற்பதில் இருந்த ஒருவித மயக்கத்திலும், அதே வேளையில் சமயம், புராணம் உள்ளிட்ட இந்தியாவின் பழம் பெருமை மிக்க அறிவுக் கூறுகளைப் புறக்கணிப்பதிலும் அவர்கள் ஆர்வம் காட்டினர். டெரோசியோவின் மாணவர்கள்—மாணவர் என்ற நிலையில் திறமை வாய்ந்தவராயும், வியக்கப்படும் அளவிற்குச் சிலர் அறிவுக் கூர்மையுடையவராயுமிருந்தும் அன்றைய கால வண்ணத்திற்கேற்பத் தெய்வச் சார்பு நீங்கிய கல்வியில் செலுத்தப்பட்டனர். கீழ்த்திசைக் கல்வி எதுவாயினும், காரணமில்லாமல் அதைக் குறைசொல்லிப் பேசுவது அவர்களுக்குப் பொழுதுபோக்காக இருந்தது. தமது முன்னோரை இழித்துப் பேசும் அளவிற்கு, அவர்களுக்குத் துணையாயிருந்தவை மதுவும் மாட்டுக்கறியுமே யாகும். அக்காலத்தில் வாழ்ந்த திறனாய்வாளர் ஒருவர் கூறுவதுபோல "மாட்டுக்கறியையும் பன்றிக்கறியையும் தின்று குவளைகளை மதுவால் நிரப்பிக்கொண்டு நாகரிகம் என்னும் பெயரில் அவர்கள் வைதீக இந்துக்களை ஏளனம் செய்தார்கள்."

இந்துக் கல்லூரியில் இருந்த இத்தகைய கல்விநிலை பிடிக்காததால், கல்கத்தாவின் தென்கிழக்குப் பகுதியிலிருந்த ஆங்கில-இந்துப் பள்ளிக்குத் தம் மகனை துவாரகநாதர் அனுப்பினுர். ராம்மோகனின் தூண்டலாலேயே அவர் இப்படிச் செய்தார். ஏனெனில் அவரே ஆங்கில-இந்துப் பள்ளியைத் தோற்றுவித்து, துவாரகநாதர் போன்ற பல நண்பர்களின் ஒத்துழைப்போடு நிதியுதவி செய்து அதை நடத்தியும் வந்தார். தேவேந்திரநாதர் இந்தப் பள்ளியில் சுமார் நான்கு ஆண்டுகளுக்குமேல் படித்தார். படிப்புத் திறமைக்காகவும், ஒழுங்காகப் பள்ளிக்கு வந்தமைக்காகவும் அவர் பரிசுகள் பெற்ருர். 1831-ஆம் ஆண்டின் இடையில் ஆங்கில-இந்துப் பள்ளியை விட்டு நீங்கி இந்துக் கல்லூரியில் சேர்ந்தார். அச்சமயத்தில் டெரோசியோ, ஆசிரியர் குழுவிலிருந்து நீக்கப்பட்டிருந்தார்; கல்லூரி நிர்வாகப் பொறுப்பு புதிய ஆட்சிக்குழு ஒன்றிற்கு மாற்றப்பட்டிருந்தது. மூன்ருண்டுகளுக்குச் சற்று அதிகமாகத் தேவேந்திரர் இந்துக் கல்லூரியில் படித்தார். 'அறிவுக் கோயிலி' லிருந்து அவர் வெளியேறிய போது, கல்லூரியில் பொதுவாக இருந்த பழக்கத்திற்கு மாருக, நாட்டுப்பற்று உணர்வு மிக்கவராகவும், வங்காள மொழியின்மீது ஆழ்ந்த பக்தி கொண்டவராகவும் தம்முடைய சமயத்தைத் தீவிரமாக நேசிப்பவராகவும் இருந்தார். அங்குத் தாம் பெற்ற கல்வியில் மிக விழுமிய தன்மைகள் எல்லாவற்றையும் பற்றிக்கொண்டாலும், இந்துக் கல்லூரியின் சூழல் அவருடைய மன வாழ்வைச் சிறிதும் பாதிக்கவில்லை.

தாய்மொழிமீது தாம் கொண்டிருந்த பற்றைப் பிறருக்குப் புலப்படுமாறு வெளிப்படுத்தத் தேவேந்திரர் முடிவு செய்தார். 'டெரோசியோ' வின் மாணவர், கல்விச் சங்கம் என்ற பெயரில் ஒரு மன்றம் நிறுவி அதில் அரசியல், தத்துவம், சமயம், சமூகவியல் முதலியவற்றைப் பற்றிப் பலவிதத் தலைப்புகளில் ஆங்கில மொழியில் கலந்துரையாடி வந்தார்கள். இந்த ஆங்கில மோகச் சங்கத்திற்கு எதிராகத் தேவேந்திரர், 'சர்வதத்துவ பீடிகை சபை' என்ற பெயரில் ஒரு சங்கம் நிறுவினுர். அதன் நடவடிக்கைகள் எல்லாம் வங்காள மொழியில் மட்டுமே நடத்தப்பட்டன. பொருமை கொண்டு போட்டிக்காக இதை அவர் நடத்தவில்லை; எல்லாவகையான அறிவுக் கலந்துரையாடலுக்குத் தகுதிவாய்ந்த கருவியாய் வங்க மொழியைக் கையாளும் உரிமையை நிலைநாட்டுவதற்கேயாகும்.

இந்தச் சமயத்தில் அவர் சமஸ்கிருதத்தைக் கருத்தூன்றிப் படித்தார். தவிர சாஸ்த்ரீய இசையையும் கற்பதற்கு முயன்ருர். சிறிது காலம் கழித்து இசை வகுப்புக்களை விட்டுவிட்டுச் சமஸ்கிருதக் கல்வியை மட்டும் தொடர்ந்தார் இதே காலத்தில் அவர்

வங்காள மொழியில் ஒரு சமஸ்கிருத இலக்கணநூல் எழுதியிருப்ப தாகத் தெரிகிறது. இலக்கிய முயற்சிகளிலும் அவர் ஈடுபட்டு, சிறிது காலத்திலேயே இத்துறையில் திறமையும் பெற்றுவிட்டார். இது இந்துக் கல்லூரியிலிருந்து வெளியேறிய பின்பும் சமயப் பேரொளியின் முழு வடிவத்தில் அவர் ஈடுபடுவதற்கு முன்பும் இருந்த இடைப்பட்ட காலப்பகுதியாகும். அவர் அதுவரை பிற்காலத்துச் செயற்களனின் மையமாய் இருக்கப்போகும் சமயச் சீர்திருத்தவாதியாய் வாழ்வைத் துவக்கவில்லை. எனினும், அவ ருடைய வாழ்க்கைப் பாதையின் திசையைச் சுட்டிக்காட்டும் அறி குறிகள் அப்பொழுதே தோன்றியிருந்தன. குடும்பத்தின் மூத்த புதல்வராய்ப் பிறந்த அவர் அவர்களுடைய நிலபுலன்களின் மீதும், அவருடைய தந்தையாரின் பலமுனைப்பட்ட வணிக முயற்சிகளின் மீதும் தீவிரக் கவனம் செலுத்தியிருக்க வேண்டும். ஆனால், அவருள்ளே, அந்தத் துறைகளில், போதுமான ஊக்கம் இல்லை. இவற்றுக்கு மாறாக அவருடைய முழு நேரமும், கவனமும், கல்வி கற்பதிலும், அமைதியான தியானத்தில் செலவிடுவதிலும், பெரிதும் கழிந்தன. மண்ணுலகத்தின்பங்கள் மீது ஒரு வெறுப்பு என்றில்லா விடினும், ஒரு பற்றின்மை அவருக்கு ஏற்பட்டிருந்தது. ஆதலால் அவற்றிடமிருந்து எவ்வளவு தொலைவு முடியுமோ அவ்வளவிற்கு அவர் விலகி நின்றார். சிறப்புமிக்க ஐரோப்பியர் மற்றும் இந்திய விருந்தினர்க்கு, அவர்கள் வீட்டிலும், பெல்காச்சிய வில்லா தோட்டத்திலும், அளிக்கப்பட்ட வரவேற்புகளிலும் விருந்துகளி லும், அவருடைய தந்தையாரின் கட்டளைக்கிணங்கிக் கலந்து கொண்டார். எனினும் இத்தகைய சமூக அளவளாவல் குழுக்களில் அவர் மனம் ஈடுபடவில்லை. அவை ஆடம்பர ஆரவாரங்களாகவே அவருக்குத் தோன்றின. தேவேந்திரருக்கு முன்பே திருமணமாகி யிருந்தது; அவருக்கு ஒன்று அல்லது இரண்டு மகன்களும் அப்போதிருந்தனர். ஆனால் திருமண உறவுப் பிணைப்பு அவரை இவ்வுலகப் பற்றுக்கு இழுக்க முடியவில்லை. அவர் குடும்பத்தோடு தான் இருந்தார்; எனினும் அதைவிட்டு வெகுதொலைவு விலகியே நின்றார்.

துவாரகநாதருக்குத் தம் மகன் இப்படி உலகின்பங்களின்மீது பற்றில்லாதிருந்த நிலைமை பிடிக்கவில்லை. அவருடைய உள்ளத்தை அந்த நிலையிலிருந்து திருப்ப எண்ணினார். யூனியன் வங்கியில் சேர்ந்து காசாளராகப் பணிபுரிந்த அவருடைய உறவினர்(uncle) ராமநாத தாகூர் கீழ் உதவிக் காசாளராகப் பணிபுரியும்படி தேவேந் திரரைப் பணித்தார். அந்தக் கட்டளைக்கேற்ப அப்படியே சிறிது காலம் அவர் செய்தார். இந்த வேலைக்கென்றே அவர் படைக்கப் பட்டதுபோலும், வேறு எதிலும் நாட்டமில்லாதவர் போலும் அவர்

இருந்தார். சரியாகப் பத்து மணிக்கு அவர் அலுவலகம் போவார். மாலையில் ஒவ்வொரு காசையும் கணக்குப் பார்த்து முடிக்கும் முன்பு வீடு திரும்பமாட்டார். யூனியன் வங்கியில் காசாளராக இருந்து கணக்கு எழுதுவதில் அவர் பெற்ற அனுபவம், இத்தகைய குறிப்பிட்ட பணியில் அவருக்குத் திறமையை உண்டாக்கி அவருடைய பிற்கால வாழ்க்கையிலும் உறுதுணையாயிருந்தது.

இந்தச் சமயத்தில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி அவருடைய வாழ்க்கையின் ஒரு திருப்பு முனையாக அமைந்தது, புறத்தில் ஒரு சிறிய நிகழ்ச்சியாய் அது தோன்றினும், அவருடைய மனத்தில் அழுத்தமான ஒரு நினைவை அது பதித்து, அந்தக் கணம் முதல் அவருடைய வாழ்க்கைப் போக்கு முழுவதையும் திசை திருப்பியது.

ஒரு நாள் தேவேந்திரர் வழக்கம்போலத் தம்முடைய அறையில் அமர்ந்து தியான நினைவுகளில் மூழ்கியிருந்தார். அப்பொழுது ஒரு புத்தகத்திலிருந்து கிழிந்துபோன தாள் ஒன்று அந்த அறைக்குள் காற்றில் பறந்துவந்தது ஆர்வத்தூண்டலால் அவர் அதை எடுத்து அதில் என்ன எழுதப்பெற்றுள்ளது என்று பார்த்தார். அந்தப் பக்கத்தில் ஒரு சமஸ்கிருதச் சுலோகம் அச்சாகியிருந்தது. அதனுடைய பொருள் அவருக்குப் புலப்படவில்லை. அந்தச் சுலோகம் பின் வருமாறு;

> " ஈசாவாஸ்ய மிதம் சர்வம் யத்கிஞ்சித் ஜகத்யம் ஜகத்
> தேனத்யக்தேன பூஞ்சிதா : மாக்தா ; கஸ்யஸ்வித்தனம் "

தேவேந்திரர் தம்முடைய வீட்டுப் பண்டிதரை வரவழைத்தார். அவருக்கும் அந்தச் சுலோகத்தின் பொருள் தெரியவில்லை. ஆயினும் அது பிரம்மத்தைப் பற்றியது என்றும், (1828-இல் ஒரு சமய வழி பாட்டுக்கென ராம்மோகனால் நிறுவப்பட்ட நிலையமான) 'பிரம்ம சபை'யின் மூத்த ஆசிரியரான ராமச்சந்திர வித்யா வாகீசர் ஒரு வேளை அதனுடைய உண்மைப் பொருளை விளக்கக் கூடும் என்றும் அவர் தெரிவித்தார். ஆகவே வித்யா வாகீசர் வந்தார்; அவர் அந்தச் சுலோகம் ஈசோபநிஷத்தில் வரும் முதல் பாசுரம் என்று கூறி அதன் பொருளைப் பின் வருமாறு சொன்னார்.

> "இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட எல்லாப் பொருள்களையும் பார்; இருக்கும் எதுவும் அசையும் எதுவும் துறவு வழியில் செல்வதாலேயே நலம் பெறுகின்றன. மற்றவர் பொருளுக்காக ஆசைப்படாதே ".

ராம்மோகன்ராயினால் தொகுக்கப்பட்டு அவர் வீட்டில் வைக்கப் பட்டிருந்த 'ஈசோபநிஷத்'திலிருந்து கிழிந்துவிட்ட ஏடே அது என்றும் வித்யா வாகீசர் மேலும் சொன்னார்.

அந்தச் சுலோகத்தில் கூறப்பட்டிருந்த விழுமிய கவிதை வடிவிலிருந்த கருத்துக்கள் தேவேந்திரர் உள்ளத்தைப் பெரிதும் உருக்கின. வரப்போகும் நாட்களில் உருவாக இருக்கும் தம்முடைய வாழ்விற்கான குறிப்புப் பொருள் அதனுள் அடங்கியிருப்பதைக் கண்டார். கண்ணிற்குப் புலப்படா இறைவனின் அருட்கரம், தாம் இனி எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய செயல்முறையைச் சுட்டிக் காட்டுவதாகத் திடீரென்று அவருடைய உள்ளுணர்வு கூறியது. அந்நாள்வரை உபநிஷத்துகளைத் தாம் படிக்காமலிருந்தது குறித்து வெட்கமடைந்தார். அதுவரைக்கும் எல்லையற்ற பேரறிவு புதைந்து கிடக்கும் 'ஞானக்கருவூலம் அவரைப் பொறுத்த அளவு மூடியே கிடந்தது. அவர், உபநிஷத்துகளை ஆழ்ந்து கற்பதென உறுதி பூண்டார்; வித்யா வாகீசரிடம் ஒழுங்காக உபநிஷத் பாடங்களைப் படிக்கத் தொடங்கினார்.

தேவேந்திரரின் பக்குவமடைந்த மனத்தில் இந்தச் சுலோகம் எத்தகைய ஆழமான முத்திரையை ஏற்படுத்தியது என்பதைச் சுயசரிதையில் அவர் எழுதியுள்ள சொற்களைக் கொண்டே முடிவு செய்யலாம்:

> "இந்நாள் வரைக்கும் எனக்கு உலகப் பொருள்களின்மீது எவ்விதக் கவர்ச்சியுமில்லை; அதேபோலத் தெய்வீகப் பேரின்பத்தைத் துய்க்கும் பேறுமில்லை. ஆனால், இந்தத் தெய்வீகப் பாசுரம் மண்ணுலகத்தின்பங்கள் அனைத்தையும் துறந்து, தெய்வத்தையே துய்க்கும்படி என்னைப் பணித்தபோது நான், இதுவரை விரும்பியதை அடைந்துவிட்ட நிறைவு பெற்றேன். என்னுடைய மனமோ விழுமியதோரின்பத்தில் ஆழ்ந்து கிடந்தது. இது என்னுடைய பேதைமை மிக்க அறிவால், நான் பகுத்துணர்ந்த முடிவன்று; இறைவனிடமிருந்து எனக்கு வந்த கட்டளை ஆகும். இந்தச் சத்திய வாக்கு முதன் முதலில் வெளிப்படக் காரணமாயிருந்த, தெளிந்த ஞானம் கொண்ட முனி புங்கவர் எவ்வளவு பாக்கியவானாக இருக்கவேண்டும்! இறைவன்மீது அசையாத நம்பிக்கையுணர்வு ஒன்றை நான் பெற்றேன். மண்ணுலக இன்பங்களுக்கு மாறாய்ப் பிரம்மத்துடன் இரண்டறக் கலந்து நிற்கும் பரிபூர்ண அமுதத்தைச் சுவைத்தேன். ஓ! எனக்கு எத்தகைய புண்ணியமிக்க நாள் அது! அது எனக்குத் தந்த தூய மகிழ்ச்சிதான் எத்தகையது."
>
> **அத்தியாயம்—5**

இந்தச் சொற்கள் அவரே வாய்மலர்ந்தவை. பின்னாளில் ரவீந்திர நாதர், உலகத்து நாட்டங்களிலிருந்து விலகித் துறவு வாழ்க்கைக்குத் தம் தந்தையார் மாறியதற்கு முதன்மைக் காரணம் இதுவே என்று தம் தந்தையாரைப் பற்றி ஆற்றிய பல பேச்சுக்களிலும் எழுதிய

கட்டுரைகளிலும் திரும்பத்திரும்ப இந்தச் சுலோகத்தைப் பற்றியே குறிப்பிடுகிருர். ரவீந்திரர் சொல்கிருர் :

" நூறு நூறு ஆண்டுகளுக்கு முன்ஞல் இந்தச் சுலோகத்தைத் திருவாய் மலர்ந்தருளிய முனிபுங்கவருக்கு, பல்லாண்டுகள் கழிந்த எதிர்காலத்தில், பிரிட்டிஷாரின் தலைநகர் ஒன்றில் ஆடம்பர வாழ்வில் திளைத்திருக்கும் செல்வர் ஒருவருடைய மகனுக்கு இந்த அருள் மொழிகள், கிழிந்துபோன ஏடு வடிவமாய் அழிவற்ற மெய்ப்பொருட் செல்வத்தை ஏந்திச் செல்லும் என்று தெரியாது. மரவுரிபூண்டு, காட்டிலே அலைந்து, உலகம் மறந்துபோன ஒருவர் வாயில் பிறந்த இந்தச் சொற்கள் இளமையையும் செல்வக் கொழிப்பையும் ஊடுருவி ஈர்த்த அற்புதத் திறன்தான் என்னே ! "

(மகரிஷி தேவேந்திரநாதர் : ரவீந்திரநாத் தாகூர் : விஸ்வபாரதி)

3. தர்மத்தின் வழியில்

ராஜாராம் மோகன்ராய் 27-9-1833-இல் இங்கிலாந்தில் உள்ள பிரிஸ்டல் நகரத்தில் உயிர் துறந்தார். அப்போது தேவேந்திரர்க்கு வயது பதினுறு. ராஜாராமின் ஆளுமை வீச்சு தம்மைத் தாக்கும் என்று அப்போது அவர் உணரவில்லை. ராம்மோகன் துவக்கிய, ஆனல் அவருடைய இறப்பால் விரிவடையாமல் போய்விட்ட, பிரம்ம சமாஜ இயக்கத்தின் கொள்கைகளையும் கருத்துகளையும் இன்னும் செயலார்வமிக்க வகையிலும் பரவலாகவும் முன்னேக்கிச் செலுத்த வேண்டிய பொறுப்பு தம்மைச் சாரும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. எப்படி, எத்தகைய சூழ்நிலைகளில் இது நிகழ்ந்தது என்பதை இந்த அத்தியாயத்தில் பார்ப்போம்.

சிறுவனுயிருந்த நாள்தொட்டே தேவேந்திரர் ராம்மோகனை நன்கு அறிவார். நெருங்கிப் பழகி நேரடித் தொடர்பும் கொண்டிருந்தார். ராம்மோகன், துவாரகநாதரின் வீட்டிற்கு அடிக்கடி வருவதும், தாம் நிலையான அன்பு கொண்டிருந்த சிறுவனைப் பற்றி விசாரிப்பதும் அவருடைய வழக்கம். தேவேந்திரருக்கும் ராஜாவின் மீது எதிர்க்கமுடியாத ஒரு கவர்ச்சி ஏற்பட்டிருந்தது. தேவேந்திரர் சிறு பையனுக இருந்தபோது பலமுறை ராம்மோகனுடைய

வண்டியில் அவருடன் வெளியில் சென்றதாகக் குறிப்பு உள்ளது. (நாகேந்திரநாத சட்டர்ஜி எழுதிய மகாத்மா ராஜாராம் மோகன் ராயின் வாழ்க்கை வரலாறு, 4-ஆம் பதிப்பு) இப்படி நடந்த பயணங்களில் இருவருக்குமிடையே அதிகமான உரையாடல் ஒன்றும் நிகழ்ந்ததில்லை. தேவேந்திரநாதர் ராஜாவின் அழகான முகத்தையும், கம்பீரமான தோற்றத்தையும் பார்த்துக் கொண்டேயிருப்பார். இளைய சிறுவனிடம் அந்த முகம் ஆழ்ந்த கவர்ச்சி ஒன்றைத் தோற்றுவித்தது. "அந்த முகத்தையே இடைவிடாது நான் தியானித்தேன். இடைவிடாத ஆழ்ந்த உணர்ச்சி ஒன்று என் நெஞ்சை நிரப்பியது. இன்னதென்று புரியாத ஒரு உறவு ராஜாவுடன் ஏற்பட்டிருந்ததை நான் தெளிவாக உணர்ந்தேன். நான் அவரால் அதிகமாக ஈர்க்கப்படுவதே வழக்கமாயிற்று".

தேவேந்திரநாதரும் ராம்மோகனின் இளைய மகன் ராம் பிரசாத் ராயும் ஆங்கில-இந்துப் பள்ளியில் ஒரு சாலை மாணுக்கர் ஆவர். பள்ளி நேரம் முடிந்தவுடன் இருவரும் ராம்மோகனின் வீட்டிற்கு ஒன்ருகச் சென்று தங்கள் வணக்கத்தைத் தெரிவிப்பார்கள். பெரிய தந்தை போலிருந்த அவர் பல வழிகளில் தாம் சிறுவன் மீது கொண்டிருந்த அன்பை வெளிப்படுத்துவார். தம் தோட்டத்திலிருந்து கனிகளைப் பறித்துவரச் சொல்லித் தம் இளம் விருந்தினரை உபசரிப்பார். ராம்மோகன் இங்கிலாந்துக்குப் புறப்படுவதற்கு முன்னுல் துவாரகநாதரிடம் விடை பெறுவதற்காகத் தாகூர் வீட்டிற்குச் சென்றிருந்தார். அப்போது தேவேந்திரநாதரைக் காணுமல் அந்த வீட்டை விட்டுச் செல்ல அவர் மறுத்து விட்டார். தேவேந்திரரை அவர் முன் கொண்டுவந்து நிறுத்திஞர்கள். ராஜா மனமகிழ்ச்சியோடு அவர் கைகளைப் பிடித்துக் குலுக்கி தம் ஆசிகளைத் தெரிவித்தார். இங்கிலாந்து சென்ற ராம்மோகன் திரும்பித் தாயகம் வரவே இல்லை; ஆனுல் பிரியா விடைபெற்ற அந்த நாளில் கண்ணிற்குப் புலப்படா ஒரு பிணைப்பு அவர்களிடையே வளர்ந்து இனிமேல் நிகழ இருக்கும் ஆன்மாவின் அழியாத்தொடர்புக்கு வழிவகுத்தது போலிருந்தது. தேவேந்திரரின் சமய வாழ்வு முழுவதும் அவருடைய உண்மையான ஞான குருவாகிய ராம்மோகனின் கருத்துக்களையும், கொள்கைகளையும் நிலைக்களனுகக் கொண்டு வளம் பெற்றதாகும். 'ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமில்லா' அநாதியான பரம்பொருளை எல்லாச் சமயத்தாரும் வழிபடும் வகையில் தம் குருநாதர் தோற்றுவித்த பிரம்ம சபையின் பணியை நிறைவுசெய்யும் பொறுப்பு, சீடராகிய தேவேந்திரருக்கு ஏற்பட்டது.

ராஜாராம் மோகன்ராய் காலமான பின்பு, பிரம்ம சபை நெருக்கடியை எதிர்நோக்கியது. மாலை வழிபாட்டுக்கு வரும் அன்பர்களின்

எண்ணிக்கை குறைந்தது. ராம்மோகனின் தீவிரத் தொண்டராக இருந்த ராமச்சந்திர வித்யாவாகீசர் தனி ஒரு மனிதராக நின்று சபையின் அன்றடச் செயல்முறைகளைத் தம் தலைவர் தோற்றுவித்த முறைக்குச் சற்றும் குறைபடாது நடத்தாமல் விட்டிருந்தால் பிரம்ம சபை என்ற ஒன்றிருந்ததே ஒருவருக்கும் தெரியாமல் போயிருக்கக் கூடும். பல துன்பங்களுக்கும் இடையூறுகளுக்குமிடையே அந்த ஞானதீபம் தொடர்ந்து எரியக் காரணமாக இருந்தவை புதிய கோட்பாட்டில் அவருக்கிருந்த ஆழ்ந்த பற்றும் கடமையுணர்வுமே ஆகும். சபையை நிர்வகிக்க ஆகும் செலவுகளுக்கெனத் துவாரக நாதர் திங்கள்தோறும் எண்பது ரூபாய் நன்கொடை தந்து வந்தார்.

மகரிஷி முதன் முதலில் உபநிஷத்துகளைப் பற்றி அறிய வந்த நிகழ்ச்சி 1835-,36-இல் நடந்தது. இது, 1838-இல் அவர் பாட்டியார் காலமாவதற்கு முன்பு ஏற்பட்டது. ஆனால் இந்த இரண்டு நிகழ்ச்சிகளுமே அவர் வாழ்வில் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டவை. காலங்காலமாகப் பின்பற்றப்படும் வழிபாட்டு முறைகளையும், உருவ வழிபாட்டு நம்பிக்கையையும், சடங்குகளையும் நீத்து ஒரு புதிய முறையை அவர் மேற்கொண்டதில் இரண்டு நிகழ்ச்சிகளுக்கும் பங்குண்டு. அந்தக் காலப் பகுதியிலிருந்து சமய வாழ்க்கைபற்றிய கண்ணோட்டத்தில் ஒரு உருமாற்றம் ஏற்பட்டது.

உபநிஷத்துகளைக் கற்கத் தொடங்கி, அவற்றிலிருந்த கருத்துகள் அவருடைய மனதை ஆட்கொள்ள ஆட்கொள்ள அவற்றில் கூறப் பட்டிருந்த மெய்ம்மைகளைப் பரப்ப வேண்டுமென்ற ஒரு கட்டாய மன உந்தல் அவருக்கு ஏற்பட்டது. தம்முடைய சகோதரர்களையும் உறவினரையும் நண்பரையும் சேர்த்து உபநிஷத்துகளின் அறிவொளியைப் பரப்பும் மன்றம் ஒன்றை அமைக்க அவர் முற்பட்டார். பொய்கைக் கரையிலிருந்த தங்களுடைய மாடி வீட்டில் கீழ்ப் பகுதியில் இதுவரை புழங்காதிருந்து வந்த அறை ஒன்று இதற்கெனத் தூய்மை செய்யப்பட்டது. துர்க்கா பூஜை விழா நெருங்கிக் கொண்டிருந்த காலம் அது. அவர்கள் வீட்டில் துர்க்கை அம்மனை வழிபட எல்லா ஏற்பாடுகளும் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அப்பொழுது ஒரு நாள் தேவேந்திரர் தூய்மை செய்யப்பட்ட அந்த அறையில் தம்முடைய அன்பர்களுடன் கூடி வேதாந்தக் கோட்பாடுகளுக்கொத்த ஒரே கடவுள் வடிவமாகப் பரம்பொருளுக்கு வழிபாடும் பூசனையும் செய்தார். அங்குதான் முதற் சமயச் சொற்பொழிவையும் நிகழ்த்தினர். அங்கிருந்த அவையோருக்குத் தாங்கள் கூடியுள்ள நோக்கம் பற்றி விளக்கிக் கூறினர். இவ்விதமாகத் தான் தத்துவபோதினி சபை துவக்கப்பட்டது. ஒவ்வொரு மாதமும் முதல்

ஞாயிற்றுக்கிழமை மாலையில் சபையைக் கூட்டுவதென முடிவு செய்யப்பட்டது. தோன்றிய நாளில் சபையின் மூலப் பெயர் 'தத்துவ ரஞ்சனி சபை' என்பதே. இரண்டாம் கூட்டத்தில் கலந்துகொண்டு வழிபாட்டை நடத்திய ராமச்சந்திர வித்யா வாகீசரின் கருத்துரைக்கேற்பச் சபையின் பெயர் 'தத்துவ போதினி சபை' என மாற்றப்பட்டது. 6-10-1839-இல் செயல்படத் துவங்கிய சபைக்கு ஞானசிரியராக வித்யா வாகீசரையே தேவேந்திரநாதர் நியமித்தார்.

சென்ற நூற்றாண்டில் 1840-க்கும் 1860-க்கும் இடைப்பட்ட காலத்தில் வங்காளப் பண்பாட்டு வரலாற்றில் தத்துவபோதினி சபை பெரும்பங்கு ஆற்றியது. வேதாந்தக் கோட்பாட்டின்படி அமைந்த ஒருவரே கடவுள் என்ற கொள்கையைப் பரப்புவதே அதன் முக்கிய நோக்கமாக இருந்தது; (சில ஆண்டுகள் கழித்து இக்கொள் கையைச் சபை கைவிட்டது பற்றிப் பின்னால் கூறப்படும்). எனினும் அதனுடைய நற்பணிகள் பலதரப்பட்டனவாக இருந்தன. ஈசுவர சந்திர வித்யாசாகர், அட்சய குமார தத்தா, ராஜேந்திரலால் மித்ரா, பூதேவ முகர்ஜி, ராம்கோபால் கோஷ், டாக்டர் துர்காசரண் பானர்ஜி, சம்புநாத பண்டிட், ராஜ்நாராயண்போஸ் இவர்களும் இவர்களைப் போன்று அக்காலத்தில் வாழ்ந்த வங்காளப் பெருமக் களில் பலரும் சபையின் உறுப்பினர்களாகவோ ஆதரவாளர்களா கவோ இருந்து அதனுடைய சமூக நலத்திட்டங்களில் பங்குக் கொண் டனர். இந்தப் பணிகளில் பின் வருபவை சிறப்பாகக் குறிப்பிடத் தக்கன; ஒரு செய்தித்தாளை நிறுவியமை; ஆங்கிலத்திலும் அறிவியற் பாடங்களிலும் கல்வி தருவதோடு மாணவர்க்குச் சமயக் கல்வியும் புகட்டப் பள்ளிகள் ஏற்படுத்தியமை; வேதக் கல்வியைத் திரும்பவும் தொடங்கியமை; உபநிஷத்துகளையும் மற்ற சாஸ்திரங்களையும் வங்க மொழியில் பெயர்த்தமை. சபையின் உயிர்போலிருந்து அதை இயக்கியவர் தேவேந்திரநாதர். அதன் எல்லாச் செயல் வினைகளுக் கும் கண்காணிப்புச் சக்தியாகவும், எழுச்சியூட்டும் ஆற்றலாகவும் அவர் இருந்தார். தவிர, அவை நடைபெறவேண்டிய பொருட் செலவுகளையும் (பொருட்செலவுகளின் பெரும்பகுதியைத்) தாமே ஏற்றுக் கொண்டார்.

தத்துவபோதினி சபை அன்று வங்காளத்திலிருந்த மேனாட்டுக் கல்வி பெற்ற மக்களை ஓரளவு கவரவே செய்தது. 1839-ஆம் ஆண்டு சபை துவங்கப்பட்டதிலிருந்து, முதல் நான்காண்டுகளில் அதன் உறுப்பினர்கள் தொகை 105, 115, 83, 138 என இருந்தது. ஆறாம் ஆண்டிலிருந்து இது மெள்ள மெள்ளக் கூடி வந்து ஒரு சமயம் 800 என்ற அளவை எட்டியது. அறிவு, ஞானம் இவற்றைப் பரப்பியதில் சபை ஆற்றிய பங்கு மிகப் பெரியதாகும்.

Indian ... ence
117387

19-ஆம் நூற்றாண்டில் வங்கத்தில் நடந்த பண்பாட்டு மறு மலர்ச்சிக்குச் சபை ஆற்றிய பங்கைப் பற்றித் தனியாகவும் விரிவாக வும் மதிப்பிட வேண்டும்.

ஏற்கெனவே கூறியபடி ராம்மோகன் இறந்த பிறகு, பிரம்ம சபை பல நெருக்கடிகளுக்குள்ளாயிற்று. தத்துவபோதினி சபையின் பணிகளை நடத்திக்கொண்டிருப்பதுடன், தேவேந்திரர், மறையும் தறுவாயிலிருந்த பிரம்ம சபைக்குப் புத்துயிரூட்டவும், அதைத் தத்துவபோதினி சபையின் பொறுப்பில் இயக்கவும் அவர் கருதினார். இதன் முதற்படியாக உருவற்ற, என்றுமழியாத, நிலையான பரம் பொருளை வழிபடும் பிரம்ம சபை உறுப்பினர்கள் அனைவரையும் ஒன்று திரட்டி ஒரே அமைப்பில் கொண்டுவர வேண்டும் என்று அவர் எண்ணினார். புதிதாக ஒரு உள் சமயத்தைத் தோற்றுவிப்பது அவர் நோக்கமன்று. வழிபாடுகளில் கலந்து கொண்டவர்களில் எவ்வளவுபேர் இதில் சேரப்போகிறார்கள் என்று சோதித்தறிவதே அவர் நோக்கம். இவ்வகையில் அவரே முதலில் வழிகாட்டியாக நடந்து கொண்டார். 21-12-1843-ஆம் நாள் (இன்றும் சாந்திநிகேதனத்தில் இந்த நாள் பெரும் திருவிழாவாகவே கொண்டாடப்படுகிறது) தேவேந்திரநாதர் தம்மை ஒத்த இருபது பேர்களுடன் முறைப்படி பிரம்மோ தர்மத்தைத் தழுவினார். ராமச்சந்திர வித்தியாவாகீசர் ஞானாசிரியராக இருந்து தீட்சை தந்தார். அவருடன் இருந்த இருபது பேர்களில், அவருடைய தம்பி கிரீந்திரநாதர், குடும்ப பண்டிதர் சியாம் சரண் பட்டாசார்ய, ராம்பிரசாத் ராய், அட்சயகுமார் தத்தர், ஹரிதேவ சட்டர்ஜி, லாலா ஹசரிலால் ஆகியோரும் அடங்குவர். இவ்விதமாகப் பிரம்ம சமாஜத்தின் வித்து முளைவிடத் துவங்கியது. இதுவே பின்னாளில் பரவலாக வளர்ந்து, ஒரு வலுவான இயக்கமாக மாறியது. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வங்கச் சமுதாயம் முழுவதையும் சமயம், பண்பாடு, சமூகம் ஆகியவற்றில் புத்தமைப்புச் செய்வதில் இந்த இயக்கம் முனைந்திருந்தது.

சமயத் தீக்கை பெறுவதற்கு முன்பேயே, தேவேந்திரர் செய்தித் தாள் ஒன்றைத் தொடங்கத் திட்டமிட்டிருந்தார். அதில் தங்கள் சமயக் கொள்கைகளை விளக்குவது, தத்துவபோதினி சபையின் செயல்களை முறையாகத் தொடர்ந்து விளக்குவது, பொது மக்களின் ஆர்வத்திற்குக் காரணமான செய்திகளையும், அறிவின் பல கூறு களையும் புறக்கணிக்காமல், ஆனால், முதன்மையாக இறையியல் சார்பான பாடங்களைப் பற்றிக் கருத்துப் பரிமாற்றம் செய்வது, வேதம், உபநிஷத்துகளின் மொழி பெயர்ப்புப் பகுதிகளைத்தருவது— போன்றவற்றை அச்செய்தித்தாளில் வெளியிட எண்ணினார். தத்துவ போதினி சபையைச் சார்ந்த உறுப்பினர்களின் தகுதியை

அறுதியிட்டார். தம் கருத்தை விளக்கப்போகும் செய்தித்தாளுக்குப் பதிப்பாசிரியர் ஆக இருக்கக் கூடிய தகுதி வாய்ந்தவர் அட்சய குமார தத்தர் தாம் என்று கண்டார். 1843-ஆம் ஆண்டு ஆகஸ்டு மூன்றும் வாரம் "தத்துவபோதினி பத்திரிகை" என்ற பெயரில் அந்தச் செய்தித்தாள் துவக்கப்பட்டது.

அட்சயகுமார் மிகச் சிறந்த முறையில் பணியாற்றி, தாம் தக்க பதிப்பாசிரியர் என்பதை மெய்ப்பித்துக் காட்டினுர். தமக்கும் தேவேந்திரருக்கும் கருத்தளவில் பெரிய வேறுபாடிருந்தது. இறை யியல்வாதியாயினும் அட்சயகுமார் ஒரு பகுத்தறிவு வாதியுமா யிருந்தார். நேர்முகச் சான்றில்லாமல், ஒன்றை—அது எவ்வளவு புண்ணியத் தன்மையுடையதாயினும், நம்பமாட்டார். எனினும், அவர் சிறந்த எழுத்தாளர்; உரைநடைக் கட்டுரைகள் எழுதுவதில் வல்லவர். வங்காள மொழியில், கட்டுரை, இலக்கியம், தோன்றி வளர்ந்த முதன்மை நிலையில், அதன் வளர்ச்சியில் அவருடைய செல்வாக்குப் பெரிதும் பயன்பட்டது. கற்கவேண்டும் என்ற ஆவலால் உந்தப்பட்டு அவர் எல்லா வகையான அறிவியல் ஆராய்ச்சிகளிலும் தீவிரமான ஆர்வம் கொண்டு கற்ருர். அந்த ஆர்வம் அவரை மருத்துவக் கல்வியையும் கற்கச்செய்தது. அவர் வங்காள மொழியில் "இயற்கைப் பொருள்களுக்கும் மனிதப் பண்புக்கும் இடையேயுள்ள தொடர்பு" என்னும் நூலை எழுதினுர். இந்நூல் ஜார்ஜ் கோம் என்பார் எழுதிய "மனிதனின் இயற்கையமைப்பு" என்ற நூலைத் தழுவியதாகும். எச். எச். வில்சன் என்பார் எழுதிய "இந்தியாவின் உட்சமயங்கள்" என்னும் நூலைத் தழுவி இரண்டு தொகுதிகள் எழுதினுர். இவை தவிர, அக்காலத்தில் மிகவும் பரவலாக வழங்கி வந்த பல பாட நூல்களையும் எழுதினுர். அட்சய குமார் தத்துவபோதினி பத்திரிகைக்கு 1843-இலிருந்து 1855-முடிய 12 ஆண்டுகள் ஆசிரியராக இருந்தார்.

இந்தச் செய்தித்தாளுக்கு ஒரு பதிப்பாசிரியர் குழு இருந்தது. தேவேந்திரநாதர் அதன் தலைவர்; அட்சயகுமார் செயலாளர். செய்தித்தாளில் வெளியிடப்படுவதற்கு முன் எல்லாக் கட்டுரைகளையும் இந்த ஆசிரியர் குழுவின் பார்வைக்கு வைப்பது வழக்கம். துவக்க ஆண்டுகளில் வித்யாசாகரும் ராஜேந்திரலால் மித்ராவும் இக் குழுவின் உறுப்பினர்களாக இருந்தார்கள். இந்தக்குழு உறுப்பினர்களுடன், குறிப்பாக அட்சயகுமாருடன், செய்தித்தாளில் எத்தகைய கட்டுரைகள் வரவேண்டும் என்பதில், தேவேந்திரநாதர் சில சமயம் கருத்து வேறுபாடு கொண்டார். தேவேந்திரநாதர் தீவிரமான ஒரு சமயவாதியாகலின், சமயத்தொடர்பான கட்டுரைகளுக்கே முதன்மை இடம் தர வேண்டும் என்று கருதினுர். மற்ற உறுப்பினர் களோ சமயத்துடன் அறிவியல், தத்துவம், இலக்கியம், வரலாறு,

தொல்பொருளியல், சமூகவியல், ஏன், அரசியல் கூட இடம் பெற வேண்டும் என்று எண்ணினர். கல்வியில் தன்னுதவி, பெண்கல்வி, மதுவிலக்கு, கிறித்துவப் பாதிரிமாரின் தாக்குதலிலிருந்து சமயத்தைப் பாதுகாத்தல், அவுரித்தோட்டத் தொழிலாளரை அடக்கு முறையிலிருந்து தடுத்தல், உடற்பயிற்சியின் தேவை, ஆளுவோர் ஆளப்படுவோர்க்கிடையே இருக்கும் தொடர்பு, சமூகச் சீர்திருத்தம் போன்ற மக்கள் தொடர்பான தலைப்புகளும் குழுவில் கலந்துரையாடப்பட்டன.

தேவேந்திரருக்கு மற்ற குழு உறுப்பினர்களுடன் இருந்த கருத்து வேறுபாடு சமயத்துறையிலும் வெளிப்பட்டது. அட்சயகுமாரரும், அவரைப்போன்று சிந்தனை கொண்டோரும் வேதங்களில் தவறே கிடையாது என்ற கொள்கையை ஏற்பதில் ஐயம் கொண்டனர். அந்நாள்வரை அக்கொள்கையில் தேவேந்திரர் ஆழ்ந்த பிடிப்புக் கொண்டிருந்தார். பிரம்ம சமாஜத்து உறுப்பினர்களிடையே இந்த வேறுபாடு ஒரு முதல் தரக் கருத்துமாறுபாட்டை உண்டாக்கியது. அதனால் பிரம்மசமாஜத்தின் கோட்பாட்டைவிட்டுச் சற்று விலகி, புதியதொரு கொள்கை உருவானது. தேவேந்திரநாதர் தம் எதிர்க்கட்சி அன்பர்களின் வாதங்களின் வன்மையைக் கண்டு அவர்களுடைய கருத்தினை ஏற்றுக்கொண்டார். ஆனால் அப்படி மாறுவதற்கு முன்னால் பலமுறை தம் நெஞ்சைச் சோதித்துக் கொண்டார்; வேதங்களிலும் உபநிஷத்துகளிலும் கூறப்பட்டுள்ள நிலையான ஒழுக்க நெறிகளை ஆழ ஊன்றிக் கவனித்தபின்பே மாறினார். அவர் தாம் நீண்ட நாள் போற்றிவந்த கருத்துக்களைப் புறக்கணித்துவிட்டு, இந்த ஒரு குறிப்பிட்ட செய்தியில் மாற்றுக் கருத்துக்கு இசைந்தமை சத்தியத்தின் மீது அவர் கொண்ட இயல்பான பற்றையும் அவருடைய அறிவாராய்ச்சி மனத்தையும் காட்டும். மகரிஷி தம்முடைய இயற்கை அறிவு அல்லது புலன் உணர்வில் பழமைவாதியாக இருந்தார் எனச் சொல்வாருண்டு. அவருடைய சமூக நம்பிக்கைகளைப் பொறுத்து இக்கூற்று மெய்ம்மையாக இருக்கலாம். ஆயின் சமயப் பற்றைப் பொறுத்தவரை இது உறுதியாகத் தவறேயாகும். அப்படி இல்லை எனின், பல்லாண்டுகளாகத் தாம் நிலையாக நம்பிவந்த உபநிஷத்துகள் உள்ளிட்ட வேதம் பற்றிய கருத்தை அவர் மாற்றிக் கொண்டிருக்கமாட்டார்.

அவருடைய இருபது நண்பர்களுடன் பிரம்மோதர்மத்தைத் தழுவியதாலும் அதன் விளைவாகப் பிரம்மோ சமயக்குழு தோன்றியதாலும், தேவேந்திரநாதர் பலவகைப்பட்ட செயல்களில் மிக்க ஆர்வத்துடன் ஈடுபட்டார். ஏற்கெனவே 1840-ல் அவர் பல இடங்களில் தத்துவபோதினி பள்ளிகளை நிறுவியிருந்தார். முதல் பள்ளி கல்கத்தாவில் தோன்றியது. பின்னாளில் இது ஹூக்ளி மாவட்டத்தி

லிருக்கும் பான்ஸ் பெரியா சிற்றூருக்கு மாற்றப்பட்டது. மற்ற பள்ளிகள் 24-பர்காண மாவட்டத்திலும், நாடியா மாவட்டத்திலும் பல இடங்களில் இருந்தன. இவை எல்லாம் தத்துவபோதினி சபையின் நிர்வாகத்தின் கீழேயே நடந்துவந்தன. பொதுக் கல்வியோடு சமயக் கல்வியையும் மாணவர்க்குக் கற்பிக்கவே இந்த ஏற்பாடு. இவை மகரிஷி தந்துவந்த பொருளுதவியினாலேயே பராமரிக்கப்பட்டன. 1843-ஆம் ஆண்டின் இறுதி வாக்கில் 'தத்துவபோதினி பத்திரிகை' துவக்கப்பட்டது. இந்தக் காலத்தில் வேதங்களை ஆழ்ந்து படிப்பதில் அவர் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார். அந்த நோக்கை நினைவிற் கொண்டு, தாமே செலவு செய்து இளம் அறிஞர்களைக் காசிக்கு அனுப்பி நான்கு வேதங்களுள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொருவர் பயிற்சிபெறும் வாய்ப்பை ஏற்படுத்தினார். சாஸ்திரக் கல்வியின் புகழ்பெற்ற நிலையமான காசி நகரில் பண்டிதர்களிடம் நேரடியாக அவர்கள் வேதம் கற்றனர். அந்த மாணவர்களுள், ரிக் வேதத்தில் பயிற்சி பெற அனுப்பப் பெற்றவரான ஆனந்தசந்திர வேதாந்த வாகீசர் பின்னாளில் பிரம்மசமாஜத்தின் ஒரு அமைச்சராக நியமிக்கப்பட்டார். வேதாந்தம் மற்றும் பகவத்கீதைக்கு அவர் எழுதிய உரையால் அவர் மிகவும் புகழ் பெற்றார். 'ஆசியாடிக் சொசைடி ஆப் பெங்கால்' என்ற நிறுவனம் வெளியிட்டு வந்த 'இந்தியாவின் ஞான நூல்கள்' வரிசையில் (BIBILIOTHECA INDICA) வெளியான ஸ்ரவுத்தம், (SHRAWTA) கிருகய சூத்திரங்கள் (GRIHYA SUTRAS) ஆகியவற்றின் கூட்டுப் பதிப்பாசிரியராகவும் அவர் இருந்தார்.

அந்த நான்கு இளம் அறிஞர்களும் காசியில் படித்துக் கொண்டிருந்தபோது அவர்களின் கல்வி முன்னேற்றம் பற்றித் தாமே நேரில் கண்டறியவும், சிறப்பான அறிவு பெற்றதாகப் புகழப்பட்ட பண்டிதர்களுடன் வேதங்களின் பல கூறுகளைப்பற்றிக் கலந்துரையாடவும் தேவேந்திரநாதர் அந்தப் பழைமையான நகருக்குச் சென்றார். ஒரு குறிப்பிட்ட துறையில் மட்டுமே அவர் போதுமான அறிவு பெற இயன்றது. ஆனால் தம்முடைய வினாக்களுக்குக் காசி நகரத்து வேத பண்டிதர்கள் அளித்த விடைகள் முழு நிறைவளிக்கவில்லை.

1830-ஆம் ஆண்டு கிறித்துவ சமயத்தைப் பரப்புவதற்காக இங்கிலாந்திலிருந்து கல்கத்தா வந்து சேர்ந்த பாதிரியார் அருள்மிகு அலெக்சாண்டர் டப் (Duff) அவர்கள் செல்வாக்கு மிக்க மனிதர். அவர் இந்த நாட்டில் ஏறக்குறைய 33 ஆண்டுகள் தங்கியிருந்தார். இந்தியச் சிறுவர்களுக்கு என ஆங்கிலப் பள்ளிகளை இலவசமாக நடத்துதல் போன்ற கிறித்துவச் சமயப் பரப்புச் செயல் மூலம், திறன்மிக்க பல வங்காள இளைஞர்களைக் கிறித்துவ மதத்தில் சேர்த்

தார். அப்படி முதலில் மதம் மாறியவர்களில் இந்துக் கல்லூரியில் படித்த அறிவுக் கூர்மைமிக்க இருவர் இருந்தனர். 'டெரோசியாவின்' குழுவினரான மகேஷ் சந்திரகோஷும், கிருஷ்ணமோகன் பானர் ஜியுமே அந்த இருவர். இப்படி மதமாற்றம் தொடர்ந்து நிகழ்ந்து வந்ததைக் கண்ணுற்ற, படித்த இந்துக்களின் நெஞ்சில், ஒரு கிலி தோன்றியது. எனவே கிறித்துவப் பாதிரியார்களின் தேவையற்ற தகுதிக்கொவ்வாத இந்த மதமாற்ற முயற்சிகளுக்கு ஒரு செயல்பூர்வ மான தடையை ஏற்படுத்த வேண்டுமென்று படித்த இந்துக்களில் செல்வாக்கு மிக்கவர்கள் எண்ணத் தொடங்கினர். இந்த எதிர்ப்பு இயக்கத்தில் தேவேந்திரநாதரை மையமாகக் கொண்டு தத்துவ போதினி சபையும் தீவிரமாக ஈடுபட்டது.

வங்காளத்திலிருந்து முதன்முறையாகத் தாயகத்திற்குத் திரும்பிச் சென்ற அலெக்சாண்டர் டப், வெளிநாட்டிலிருந்தபோது 'இந்தியாவும் இந்தியாவின் சமய முயற்சிகளும்' என்னும் தலைப்பில் ஒரு நூலை வெளியிட்டார். அதில் அவர் இந்து தர்மத்தை, குறிப்பாக வேதாந்தத்தை—ஒழுக்க நெறிகுன்றிய சமயமென எழுதியிருந்தார். இந்து சமூகத்தின் சார்பாக தேவேந்திரநாதர் அந்த அறைகூவலை ஏற்றுக்கொண்டார். டப்பினுடைய கருத்துகளை வன்மையாக மறுத்துத் 'தத்துவபோதினி பத்திரிகை'யில் பல கட்டுரைகளை எழுதினர். இவை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப் பட்டு 1845-ஆம் ஆண்டின் இறுதியில் 'வேதாந்தக் கோட்பாடுகள் மெய்ப்பிக்கப்பட்டமை" என்ற தலைப்பில் நூலாகவும் வெளிவந்தன. நூலின் முதற்கட்டுரையின் முன்னுரையில் கீழ்க்கண்டவாறு தேவேந்திரநாதர் எழுதினர். "நம்முடைய தொன்மை வாய்ந்த இறையியல் கோட்பாடுகளைப் பரப்புகின்ற பெரு முயற்சிகளில் அவற்றின் மீது நமக்கிருக்கும் நம்பிக்கையை வலியுறுத்துகிறோம். அந்த முயற்சியில் வெற்றியடைய அந்த நம்பிக்கையே நமக்கு வழிகாட்டித் தூண்டும் கொள்கையாகவும் இருக்கும்."

இந்துக் கல்லூரியில் படித்தவர்களை மதம் மாற்றியதோடு கிறித்துவப் பாதிரியார்கள் நின்றுவிடவில்லை. அதைவிடவும் பெரிதான இடத்தை அடைத்து வலையைப் பரப்பினர். உமேஷ் சந்திர சீர்க்கார் என்ற ஒருவரும் அவருடைய இளம் மனைவியும், கூடப் பாதிரியால் அவர்களுடைய உறவுக்காரர்களின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் வன் முறையில் மதம் மாற்றப்பட்டபோது கல்கத்தாவில் வாழ்ந்த இந்து சமூகத்தவரின் மனச்சாட்சி உச்ச நிலைக்குக் கிளர்ந்தெழுந்தது. இதன் முதற்படியாக, தேவேந்திர நாதர் 'இந்து அறக்கல்விக் கூடம்' என்ற ஒரு பள்ளியை ஏற்படுத்தி னர். எல்லாச் சாதி இந்து மாணவருக்கும் இப்பள்ளியில் இலவச

மாகக் கல்வி கற்பிக்கப்பட்டது. மதமாற்ற முயற்சிகளுக்கு முக்கிய நிலைக்களனுயிருந்து வந்த இலவசக் கிறித்துவப் பள்ளிகளின் செயல் முறைகளை ஈடுகட்டவே இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டது. இந்து மதத்திற்கு ஏற்பட்ட பொதுவான ஒரு அபாயம் கருதி, இந்து மதத்தின் பழமைவாதிகளும் புதுமைவாதிகளும் ஒரே மேடையில் கூடினர். பலவிதமாகப் பிரிந்து வேறுபட்டுத் தாங்கள் புரிந்த வாதங்களை மறந்து ஒன்றுபட்டனர். பழைமைவாதிகளின் ஏற்புடைத் தலைவராக இருந்த ராஜா ராதாகாந்த தேவர் இந்த இயக்கத்துக்குத் தம் முழு ஆதரவையும் நல்கினுர். கல்கத்தாவில் வாழ்ந்த பல நிலக்கிழார்களும் இந்நோக்கத்திற்காக நிறையப் பொருளுதவி செய்ய முன் வந்தனர். அப்பொழுது தான் கல்லூரிப் படிப்பை முடித்திருந்த பூதேவ முகர்ஜி (இவர் பின்னுளில் இந்து சமூகத்தின் மதிப்புமிக்க தலைவராஞர்) முதல் தலைமையாசிரியராக நியமிக்கப்பட்டார். அந்தப் பள்ளி மூன்ருண்டுகளுக்குச் சற்றுக் கூடுதலாகப் பயனுள்ள வகையில் இயங்கிற்று.

கிறித்துவப் பாதிரியார்களின் மதமாற்ற முயற்சிகளுக்கு எதிராக இந்து மதத்தின் எல்லாத் தரப்பினரையும் ஒன்று சேர்த்த பெருமை தேவேந்திரநாதரையே சாரும். இந்த ஒருமித்த பெருமுயற்சி கிறித்துவர் பணிக்குப் பேரிடியானது என்பதில் ஐயமில்லை.

1846-ஆம் ஆண்டு ஜனவரியில் ராஜ் நாராயண்போஸ் பிரம்ம சமாஜத்தைத் தக்க சமயத்தில் தழுவி, தேவேந்திரநாதரின் நெருங்கிய தொண்டராகவும், அவர் அன்பிற்குரிய துணைவராகவும், நண்பராகவும் ஆஞர். பிரம்ம சமாஜ இயக்கத்திற்குத் தாம் ஒரு பெருஞ்சக்தி என்பதை அவர் உறுதிப்படுத்திஞர். இதற்கிடையே, ராமச்சந்திர வித்யா வாகீசர் பாடம் சொல்லித்தர, தேவேந்திரர், உபநிஷத்துக்களைத் தொடர்ந்து படித்து வந்தார். ஆங்கிலத்தில் வல்லவராக இருந்த ராஜ்நாராயண பாபுவை முக்கிய உபநிஷத்து க்களை அம்மொழியில் பெயர்க்கச் செய்து, தத்துவபோதினி பத்திரிக் கையில் தொடர்ச்சியாக வெளியிட்டு வந்தார்.

இவையும் இவைபோன்ற பிற செயல்களும் தேவேந்திரநாதரின் காலத்தையும் திறனையும் பெரிதும் ஆட்கொண்டன. குடும்ப வணிக முயற்சிகளிலும், ஜமீன்தாரிப் பெருநிலங்களைக் கவனிப் பதிலும் செலவிட அவருக்கு ஆர்வமில்லை. அவருடைய தம்பியராகிய கிரீந்திரநாதர் இத்தகைய பொறுப்புக்களை ஏற்றுத் திறம்பட நடத்தி யும் வந்தார். தேவேந்திரநாதர் தியானத்தில் ஆழ்வதிலும், வழிபாடு செய்வதிலும், வேதங்களைக் கற்பதிலும், தத்துவபோதினி சபை மற்றும் பிரம்மசமாஜத்தை நடத்துவதிலும் காலம் கழித்தார்.

அவருடைய தந்தையார் துவாரகநாதர் மூத்த மகனின் இந்த உலகப் பற்றற்ற நிலைகண்டு கவலைகொண்டார். தம் வாழ்நாள் முழுதும் பாடுபட்டு ஈட்டிய பெரிய செல்வமும் சொத்தும் எதிர் காலத்தில் என்ன ஆவது என்று கவலை கொண்டார். தம்முடைய மகன், இப்பொழுது சென்று கொண்டிருக்கும் வழியிலேயே தொடர்ந்து சென்ருல், தம்முடைய பெருநிலங்களும் பிற சொத்துக் களும் அழிந்து போகும் நாள் வெகு தொலைவில் இல்லை என்ற உணர்வு அவருக்கு ஏற்பட்டது. இந்தக் கவலையால் துவாரக நாதர் 1840-ஆம் ஆண்டில் தத்துவபோதினி சபை நிகழ்ச்சிகளில் தேவேந்திரநாதர் ஈடுபட்டிருந்தபோது—தம்முடைய சொத்தின் ஒரு பகுதியைப் பயன்படுத்தி ஒரு அறக்கட்டளையை நிறுவினுர். இதை நிர்வாகம் செய்ய மூன்றுறுப்பினர் கொண்ட அறங்காவலர் குழு ஒன்று அமைக்கப்பட்டது இந்தச் சொத்துகளிலிருந்து கிடைக் கும் வருமானம் தம் சந்ததியினர் குடும்பப் பராமரிப்புக்குச் செலவிடப் படவேண்டும் என்றும், இந்தச் சொத்தின் எந்தப்பகுதியையும் விற்கவோ, சொத்துரிமையை மாற்றவோ கூடாது என்றும் அதில் நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. 1843-ஆம் ஆண்டில் அவர் ஒரு உயிலையும் எழுதினுர்.

தம் மகன் மீது துவாரகநாதர் கொண்டிருந்த வெறுப்பு வேறு வழிகளிலும் வெளிப்பட்டது. தம்முடைய மகனின் மனதை உலகப் பற்றுகளிடமிருந்து திருப்பி, சமய வெறி பிடித்தவராக அவரை ஆக்கிய பொறுப்பு ராமச்சந்திர வித்யாவாகீசரையே சாரும் என்ற ஒரு கருத்தை ஒருமுறை வீட்டாருடன் பேசிக் கொண்டிருந்த போது துவாரகநாதர் வெளியிட்டதாகத் தெரிகிறது. தேவேந்திர நாதர் இதைக் கேள்விப்பட்டார். அன்றிலிருந்து தம் வீட்டில் வித்யா வாகீசரிடம் உபநிஷத் பாடங்களைக் கேட்பதை நிறுத்தி, தத்துவபோதினி பத்திரிகை அச்சிடப்பட்ட வீட்டில் பாடம் கேட்டு வந்தார். (1845-'46-இல்) இரண்டாம் முறையாகத் தாம் இங்கிலாந்து சென்றிருந்தபோது அங்கிருந்து எழுதிய கடிதங்கள் ஒன்றில் துவாரகநாதர், தேவேந்திரர் உலகப் பொருள்கள்மீது பற்றற்றிருக்கும் நிலையைக் கண்டித்திருந்தார். (பத்ராவளி-145). ஆனுல் தந்தையின் அறிவுரையும் கண்டிப்பும் அவை சரியாகவே இருந்தாலும் - மகனின் சமய வேட்கையை ஒரு சிறிதும் நிறுத்த முடியவில்லை. மகனின் ஆன்மா ஏற்கெனவே இறைவன்மீது நிலைகொண்டு, உறுதியாக வேர்விட்டு வளர்ந்தும் இருந்தது. மலையின்மீது ஏறிச்செல்லும் அந்தப் பயணத்தின் இடையில் அவர் எப்படிப் பின்நோக்கி இறங்கி வருவார்?

4. நெருக்கடி

‘ துன்பங்கள் அடுக்கடுக்காக இணைந்தே வருகின்றன ’ என்னும் பழமொழியை மெய்ப்பிக்குமாறு தேவேந்திரர் வாழ்வு அமைந்தது. 1845-ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து 1848-ஆம் ஆண்டு முடியும் வரை ஏறக்குறைய 36 மாதங்கள் ஒரு இழப்பிற்கு மேல் இன்னொரு பேரிழப்பாய்த் துன்பங்கள் அவரை அலையலையாகத் தாக்கின; அவருடைய உறுதிப்பாட்டையும் அசைக்க முயன்றன. தாங்குதற்கியலா நெருக்கடி நிலை. எனினும் பெருந்துணிவுடன் அவர் அந்தத் துன்பத் தீயை ஏற்று வாழ்ந்தமை அவருடைய வலிமைக்கும் மனந்தளரா நிலைமைக்கும் சான்றாம். தேவேந்திர நாதரைத் தவிரப் பிறர் எவராயினும் அடுக்கடுக்காக வந்த துன்பச் சுமை தாங்காமல் மனம் ஒடிந்திருப்பர். தேவேந்திரநாதரோ அந்த அதிர்ச்சிகளுக்கு அசையாமல் மலையென நிமிர்ந்து நின்றார். அவருடைய பண்பின் பெருந்தன்மை இக்கால கட்டத்தில்தான் பெருமளவில் ஒளி வீசியது. இறைவன் மீது வைத்திருந்த அசையா நம்பிக்கையும், திருவருளைச் சரண்புகுந்தமையுமே இந்தத் துன்பக் காலத்தில் அவரைத் தாங்கச் செய்தன.

அவருக்கு வந்த முதல் அதிர்ச்சி அவர் தந்தையார் 1-8-1846-ஆம் நாள் இங்கிலாந்தில் காலமானது ஆம். தம் குடும்பத்தாருடன் தேவேந்திரநாதர் கங்கை நதியில் படகுப் பயணம் சென்று கொண்டிருந்தபோது அந்தத் துன்பச் செய்தி 47 நாட்கள் கழித்து வந்தது. உடனே அவர் வீட்டிற்குத் திரும்பினார்.

அதுவே துன்பத்தின் தோற்றுவாய். தம்முடைய தந்தையாருக்குச் செய்யவேண்டிய நீத்தார் கடன் நிகழ்ச்சியைப் பிரம்ம சமாஜக் கோட்பாட்டிற்கு ஏற்ப நடத்தத் தேவேந்திரர் முடிவு செய்தார். இது, உருவ வழிபாட்டு முறையைத் தவிர்த்து, உபநிஷத்துகள் கூறும் வகையைக் கண்டிப்பாகவும் தூய்மையாகவும் பின்பற்றுவதாகும். இந்துக்களின் வீட்டில் தொன்று தொட்டுவரும், திருமால் அடையாள உருவ வழிபாட்டு முறையைக் கைவிடுவதென உறுதியாக முனைந்தார். மறைந்த தந்தையின் ஆன்மா சாந்தியடையவென ஒரு அந்தணரைக் கொண்டு நடத்தப்படும் இந்தச் சடங்கு ஒவ்வொரு வழிபாட்டிலும் ‘ சாலக்கிராம்சிலை ’ (Shalagram-Shila)

என்பது திருமாலின் அடையாளமாக வைத்து வணங்கப்படும் ஒரு உருவம். இதை ஒவ்வொரு இந்துவும் தம் வீட்டில் வழிபடுவது தொன்று தொட்ட மரபாக இருந்தது. முதன்மையிடம் பெற்று வந்தது. அவருடைய நலம் நாடுவோரும் உறவினரும் அத்தகைய கடுமையான › சோதனை வேண்டாம் என்று அறிவுறுத்தினர். நீத்தார்கடன் நிகழ்ச்சியின் போது பிரம்ம சமாஜ வழிபாட்டு முறையைத் தான் பின்பற்ற வேண்டும் என்று கட்டாயப்படுத்தினால், அவருடைய சுற்றத்தார் எல்லாரும் கைவிடக்கூடும் என்றஞ்சி-தேவேந்திரநாதரைப் போலவே பிரம்ம சமாஜம் தழுவிய அவர் தம்பி கிரீந்தரநாதரும் கூடத் தம் தமையனார் கொள்கைக்கு உடன்படவில்லை. உலக நடை முறையை நன்கு புரிந்த கிரீந்திரநாதர், தம் சுற்றத்தார் மன நிலையைச் சரியாகப் புரிந்து வைத்திருந்தார். பழைமை மீது கண் மூடித்தனமாகப் பற்றுக் கொண்டிருந்த காலமது. மரபு வழியாகப் பின்பற்றப்படும் சடங்குகளைச் சிறிதளவு மீறி நடந்தாலும் 'சாதி நீக்கம்' செய்யப்பட்ட வேளை. இத்தனையிருந்தும், தேவேந்திரர் தாம் கொண்ட கொள்கையில் உறுதியாகவிருந்தார். ஒரு அணுவளவும் விட்டுக் கொடுக்க அவர் மறுத்துவிட்டார். பிரம்ம சமாஜத்தைத் தழுவியவர்கள் உருவ வழிபாடு செய்யக்கூடாது என்பது கடுமை யான விதி. ஊரறிந்த பிரம்மசமாஜ வாதியாயிருந்து கொண்டு, தாம் கொண்டிருந்த் அடிப்படைச் சமய நம்பிக்கையை மையமாகக் கொண்ட இந்தக் கொள்கையில் நெகிழ்வு காட்ட அவரால் எப்படி முடியும்? சமுதாயத்தில் அவருக்கிருந்த உயர்நிலைக் கேற்ப அந்தணர் களுக்குக் காணிக்கை தருவது போன்ற சில சடங்குகளையும் பழக்கங்களையும் அவை பழைமையானவையெனினும்—பின்பற்ற இணங்கினார். ஆனால் வழிபாட்டுமுறை எது என்பதில் அவர் தீவிரப் பிடிவாதம் காட்டினார். தம்முடைய கொள்கையையும் தன்மதிப்பையும் நிலைநிறுத்த எதையுமிழக்க அவர் தயாராயிருந்தார்.

முடிவாக, அவருடன் மிகவும் நெருங்கியிருந்த விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரைத் தவிர சுற்றத்தார் எல்லாரும் அவரைச் சாதி விலக்கம் செய்தனர். தம்முடைய பிடிவாதமான போக்கால் அவர்களுடைய வெறுப்புக்கு ஆளாயினும், தம்முடைய ஆன்மிக மனச் சான்றுக்குக் களங்கமேற்படாமல் காப்பாற்றியது குறித்து மகிழ்ச்சியடைந்தார்.

ஆனால் உண்மையான பேரிழப்பு பின்னால் அவரை எதிர் நோக்கியது. துவாரகநாதர் இறந்து ஓராண்டு முடிந்த சிறிது காலத்திற்குள் அவர் நிறுவிய யூனியன் பாங்க் 27-12-1847-இல் திவாலாகிவிட்டது. இதற்குப் பிறகு 15 நாட்கள் கழித்து 12-1-1848-இல் கார் தாகூர் கம்பெனியும் மூடப்பட்டது. இரண்டு

நிறுவனங்களின் நடைமுறைகளும் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தமையால், ஒன்றுக்கு ஏற்பட்ட முடிவு இன்னொன்றுக்கும் ஏற்படப் பதினைந்து நாட்களே போதுமானதாக இருந்தது. இந்த இரட்டைத் துன்ப நிகழ்ச்சிகளால் கல்கத்தாவிலிருந்த பல செல்வக் குடும்பங்கள் வறுமையுற்றன.

இந்த இரட்டைத் துன்பங்களுக்கான காரணங்கள் பற்றியோ அவை நிகழ்ந்ததற்கான சூழ்நிலைகள் பற்றியோ இங்கு குறிப்பிட வேண்டிய தேவையில்லை. துவாரகநாதர் அந்த இரண்டு நிறுவனங்களையும் தம் நேரடிப் பொறுப்பில் கவனித்து நடத்தியதால் அடிக்கடி கடன் வாங்க வேண்டியிருந்தது என உணர்வது போதும். இவையின்றி, தம்முடைய அறக் கொடைகளுக்காகவும், வரும் பெருஞ்செலவுகளுக்காகவும் தம் பெயரில் ஏராளமாகத் தனிப்பட்ட முறையிலும் கடன் வாங்கினார். துவாரகநாதரிடமிருந்து வரும் ஒரு சிறு துண்டுச் சீட்டைப் பார்த்தவுடன் இலட்சக் கணக்கில் முன் பணம் தர கல்கத்தாவின் ஒவ்வொரு செல்வரும் தயாராக இருந்தார்.

இந்தச் சமயத்தில் துவாரகநாதர் இங்கிலாந்தில் இறந்தபோது ஏறக்குறைய ஒரு கோடி ரூபாய்க்குக் கடன் வைத்துச் சென்றிருப்பதாகத் தெரியவந்தது. மேற்கூறப்பட்ட இரு நிறுவனங்களின் ஏறக்குறைய எல்லாப் பங்குத் தொகைகளும் துவாரகநாதர் பேரிலும் அவருடைய மூன்று புதல்வர்கள் பேரிலுமே இருந்ததால் கடன்களைத் தீர்க்க வேண்டிய பொறுப்பு முழுதும் புதல்வர்கள் மீதே விழுந்தது. இரண்டு நிறுவனங்களிலும் பணம் போட்ட பங்குதாரர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் கடன் நிலைமை பற்றி ஒரு மதிப்பீடு செய்யப்பட்டது. எல்லாச் சொத்துக்களையும் பணமாக மாற்றினாலும், பாங்க் தான் செயல்பட்டுக் கொண்டிருந்தபோது வெளியில் தந்த கடன்கள் முழுவதும் வசூல் செய்யப்பட்டாலும் (அந்த நிலையில் அவை முழுதும் திரும்ப வருவது நடக்கக் கூடியதாயில்லை) கூட ரூ. 70 லட்சமே தேறும்; இன்னும் ரூ. 30 லட்சம் கடனைத் தீர்க்கத் தேவைப்படும் என்று தெரியவந்தது. கார், தாகூர் அன் கம்பெனியில் ஐரோப்பியர் வைத்திருந்த எல்லாப் பங்குத் தொகைகளையும் தாகூர் குடும்பத்தினரே வாங்கி விட்டனர். இந்த ஐரோப்பியப் பங்குதாரர்கள் பின்னால் அதே நிறுவனத்தில் மேலாளர்களாகவும் நிர்வாக அலுவலர்களாகவும் பெருமளவு ஊதியத்தில் பணிபுரிந்தனர். ஆதலால், இந்தக் கடன் சுமைகளை ஏற்கவேண்டிய பொறுப்பிலிருந்து அவர்கள் தப்பிக்கொண்டனர். தாகூர் குடும்பத்தார்மீதே முழுச் சுமையும் கனமாக இறங்கியது. துவாரகநாதர் பெயரில் நிறுவனத்தின் பாதிப் பங்குகள் இருந்தன. தம்முடைய உயிலில் அவர் இந்தப் பங்குகள் முழுவதையும் தம் மூத்த புதல்வருக்கு எழுதி வைத்

திருந்தார். ஆனால் தேவேந்திரநாதர், மிகவும் பெருந்தன்மையுடன் இந்தப் பங்குகளைத் தாமே முழுதும் தனியாக வைத்திராமல் தம்முடைய தம்பியர் இருவரையும் சேர்த்து மூவருக்கும் சமமாகப் பங்கிடுமாறு செய்தார். பின்னால் ஐரோப்பியர்களின் பங்குகள் வாங்கப்பட்டபோதும் தமக்கும், தம்பியரான கிரீந்தரநாதர், நாகேந்திர நாதர் ஆகியோர்க்கும் ஆக மூன்று சமமான பங்குகள் கிடைக்குமாறு பிரித்தார்.

இந்தச் சூழ்நிலையில் ஒரு பெரிய நெருக்கடி ஏற்பட்டபோது தேவேந்திரநாதர் மனவுறுதியை இழக்கவில்லை. மாறாக, முன்னை விடத் தீவிரமாய் அக அமைதியில் தோய்ந்து எல்லாவற்றையும் இறைவன் பொறுப்பில் விட்டுவிட்டார். எல்லாக் கடன்காரர்களுக்கும் முழு அளவில் பணம் கொடுப்பதென்றால் குடும்பத்தின் சொத்து முழுதையும் இழக்கவேண்டி வரும் என்றும், எதிர்பாராத அழிவு ஏற்படினும் குடும்பம் விளங்க வேண்டும் என்ற பாதுகாப்புணர்வுடன் தம் தந்தையார் ஏற்படுத்தியிருந்த அறக்கட்டளையின் பொறுப்பிலிருந்து சொத்துக்களையும் இழக்க வேண்டும் என்றும் தேவேந்திர நாதர் தெரிந்தார். எனினும் தம் நிறுவனங்களில் பணம் போட்டவர்கள் கொண்டிருந்த நம்பிக்கையுணர்வை நிலை நாட்ட எதையும் இழக்க அவர் ஆயத்தமாயிருந்தார்; இச் செயல் ஒன்றின் மூலமே தாம் முன் நின்று நடத்திய நிறுவனங்களின் நற்பெயரைக் காப்பாற்ற முடியும் என்று கருதினார்.

பங்குதாரர் கலந்து கொண்ட கூட்டத்தில், திவாலாகும் நிறுவனத்தின் சார்பாகத் திரு. கார்டன் (Gordan) நிறுவனத்தின் கடன் நிலுவை தாகூர் குடும்பத்தினரின் சொத்துக்களின் மதிப்பு ஆகியவற்றைக் குறிப்பிட்டுப் பேசினார். அவர் சொத்துக்கள் பற்றிய விபரத்தில் அறக்கட்டளையின் பொறுப்பிலுள்ள சொத்துக்களைச் சேர்க்கவில்லை. அவை இன்னொருவர் பெயருக்கு மாற்றப்படவோ, இன்னொருவர்க்கு விற்கப்படவோ முடியாதபடி பாதுகாப்புடையனவாகையால் கடன் தாரர் அவற்றின்மீது உரிமை கோர முடியாது எனக் குறிப்பிட்டார். இந்த அறக்கட்டளை பற்றிய செய்தியில் திரு. கார்டனின் பேச்சு தங்களுக்காகத் தனிச் சலுகை ஒன்றைப் பெற முயல்வதுபோலத் தேவேந்திரநாதருக்குத் தோன்றிற்று. உடனே, அவர் எழுந்து அந்தச் சொத்துக்களையும் அவர்கள் தாமாகவே, எந்தக் கசப்புணர்வுமில்லாமல் கடன்காரர்களிடம் ஒப்படைக்கத் தயாராக இருப்பதாக அறிவித்தார். அறக் கட்டளையில் கண்டுள்ள சட்டப் பாதுகாப்புப் பிரிவையும் பாராமல், கடன்தாரர் முழுமையும் திரும்பப் பெற வேண்டிய சூழ்நிலை ஏற்படின் இதையும் செய்வதாக உறுதி கூறினார்.

அங்குக் கூடியிருந்தவர்களிடையே இந்தப் பேச்சு புல்லரிப்பை ஏற்படுத்தியது. அவரே தம் சுய சரிதையில் இதைப் பற்றி எழுதி யுள்ளதாவது :

"நான் இப்படி ஒரு கருத்தை வெளியிட்டதும் அன்புள்ளம் கொண்ட கடன் தந்தோர் சிலர் கண்ணீர் வடித்தனர். எல்லாச் சொத்துக்களையும் இழப்பதால் எங்களுக்கு உடனே வரக்கூடிய பெருங்கேடு பற்றி அவர்கள் வருத்தமுற்றனர். நிறுவனத்தின் வளர்ச்சி, வீழ்ச்சி, எங்களால் ஏற்பட்டதன்றென்றும், நாங்கள் பிறர்தீமை நாடாதவர், குற்றமற்றவர் என்றும் அவர்கள் கண்டனர். நாங்கள் செய்யாத ஒரு குற்றத்திற்காக, இந்த இளம் வயதில் எங்கள்மீது ஒரு மிகப் பெரிய கேடு விழுவதையும் அவர்கள் உணர்ந்தனர். (தேவேந்திரநாதர் அப்போது முப்பது வயது மட்டுமே நிரம்பியவராக இருந்தார்). இன்றிருக்கின்ற இத்தனை செல்வங்களும் சொத்துக்களும் எங்களுடையன என்று நானே நாங்கள் சொல்ல முடியாதே என்ற எண்ணம் மேலிட அவர்கள் மிகவும் வருந்தினர். அவர்கள் பணத்திற்கு இழப்பு ஏற்படுத்திய தற்கு அவர்கள் எங்கள்மீது நியாயப்படி சினங்கொள்ள வேண்டும்; மாறாக அவர்கள் நெஞ்சங்களோ இரக்கவுணர்வால் நிரம்பியிருந்தன. அவர்கள் நெஞ்சங்களில் இந்த இரக்கவுணர்வு எங்கிருந்து தோன்றி யது? என் வாழ்வு முழுவதும் தோன்றாத் துணையாயிருந்து வரும் அந்த இறைவனே அவர்கள் நெஞ்சங்களை பெருங்கருணையால் நிரப்பியிருக்கிறான்."

உலக நடைமுறையைப் புரிந்திருந்த தேவேந்திரருடைய நண்பர்களில் சிலர் திவாலா சட்டத்தின் கீழ் பாதுகாப்புப் பெறுமாறு அவருக்கு அறிவுரை கூறினர். இதன்மூலம் கடன்தாரருக்குத் திருப்பித்தரவேண்டிய பொறுப்புகளிலிருந்து அவர் தப்பித்துக் கொள்ளலாம். ஆனால் இந்த அறிவுரை, தம்முடைய மானவுணர் வைத் தாழ்த்தும் என்றும், பொய்ம்மைச் சேற்றை வாரியிறைக்கும் என்றும் அவர் கருதினார். சட்டம் கொலுவிருக்கும் ஒரு நீதிமன்றத் தின் முன்னால், தம்முடைய உடைமையாக ஒரு கிழிந்த துணி இருப்பினும் கடன்தாரருக்குத் திருப்பித்தர எதுவுமில்லா திவாலான வன் என்று சொல்வது பொய்யே என அவருக்குப் புலப்பட்டன. சிலரிடம் பணச்சலுகைகள் பெறுவதற்காகத் தம் மானத்தை அடகு வைக்க அவர் தயாராயில்லை. "திவாலா சட்டத்தின் பின்னால் ஒளிந்துகொண்டு தம் மானத்தை இழப்பதைவிட இறைவனும் அறமும் நம்மைக் காப்பாற்றட்டும்" என்பன அவர் சொற்கள்.

ஏமாற்று வேலையிலேயே ஊறித் திளைத்த சிலர் கடன்காரர் களுக்குப் பணத்தைத் திருப்பித்தராமல் தப்புவதற்கு எளிய வழி

சொத்துக்களை இன்னொருவர் பெயருக்கு மாற்றிவிடுவதே என்று தேவேந்திரநாதருக்கு அறிவுரை கூறினர். இந்தப் பினுமி முறை மூலம் நிறையச் செல்வர்கள் அத்தகைய சூழ்நிலையில் கடன் தொல்லையிலிருந்து தப்பியதையும் அவர்கள் எடுத்துக் காட்டினர். ஆனால், அதைக் கேட்பது கூடத் தேவேந்திரநாதருக்கு அருவருப்பை ஏற்படுத்தியது. அவர் நேர்மையின் வடிவமாகவிருந்தார். அச்சொற்களைக் கேட்பதற்கு முன்னமே தூக்கி எறிந்தார். தேவேந்திரநாதர் எத்தகைய வார்ப்பு என்பதை, இந்தக் கருத்தைக் கூறியவர்கள் உணரவில்லை.

கார், தாகூர் அன் கம்பெனியின் கடன் முழுவதையும் திருப்பித் தரும் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளத் தேவேந்திரநாதரும் அவர் தம்பியரும் ஆயத்தமாக இருந்த நிலை, மக்களிடையே அவர்களுக்கிருந்த மதிப்பை உயர்த்தியது. அந்நிறுவனத்தின் பங்குகளும் பெருமளவில் உயர்ந்தன. வாய்மையை நிலைநிறுத்துவதற்காகச் சிறிதுகூடத் தயங்காமல் வறுமைமிக்க வாழ்வைத் தழுவ அவர்கள் முன் வந்த வேகத்தை மக்கள் வாயாரப் புகழ்ந்தனர். குறிப்பாகக் கடன் தந்தவர்கள் ஒருவித மன நிறைவு பெற்றார்கள். பணப்பேய் மலிந்துகிடந்த அன்றைய கல்கத்தாவில், தம்முடைய தந்தையார் விட்டுப்போன கடன்களைத் தீர்ப்பதற்காகத் தங்களை வறுமைக்கு ஆளாக்கிக் கொண்டு மானத்தை நிலைநாட்டச் சில பேர் வரவும் கூடும் என்பதை அவர்கள் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. தம் தந்தையாருடைய கடன்களைத் தேவேந்திரநாதர் எவ்விதத் தயக்கமுமின்றி ஏற்றுக்கொண்ட பெருந்தன்மை, தங்களுடைய எல்லாச் சொத்துக்களையுமிழந்து அவற்றைத் தீர்த்து வைக்க அவர் முன் வந்த இசைவு, இவற்றைக் காட்டிலும் கடன்தாரரின் நெஞ்சை நெகிழ்வித்த நிகழ்ச்சி வேறொன்றுகும். தேவேந்திரநாதர் மற்றும் அவருடைய இரண்டு தம்பியர்கள் பெயரிலிருந்த சொத்துக்களைப் பற்றிய விபரம் ஒரு சிறு பிழையும் இல்லாதவாறு தயாரிக்கப்பட்டுக் கடன்தாரர் முன்னிலையில் ஒவ்வொன்றுகப் படிக்கப்பட்டு வந்தது. எனினும் ஒரு சொத்தைப் பற்றிய விபரம் எவ்வாறோ விடுபட்டுப் போயிருந்தது. உடனே தேவேந்திரநாதர், அந்தப் பிழையைச் சுட்டிக்காட்டி, தாம் அணிந்திருந்த வைரமோதிரம்கவனக்குறைவால் பட்டியலில் சேர்க்கப்படவில்லையென்றும், சொத்துக்களில் அதுவும் ஒரு பகுதியாகையால் பட்டியலில் அதையும் சேர்க்க வேண்டும் என்று வலியுறுத்தினர். (இந்த நிகழ்ச்சி பண்டித சிவநாத சாஸ்திரியால் சொல்லப்பட்டு, அஜித்குமார் சட்டர்ஜி எழுதிய மகரிஷி தேவேந்திரநாதரின் வாழ்க்கை வரலாற்றில் இடம் பெற்றுள்ளது).

இந்நிகழ்ச்சி கடன்தாரர்கள் எங்கும் கண்டும் கேட்டுமிராத ஒன்றாகும். தேவேந்திரநாதரின் வாய்மையும் நேர்மையும் அவர்களை அப்படியே திகைக்க வைத்துவிட்டன. அவர்கள் தாங்களாகவே முன் வந்து, சொத்துக்களின் மீது தங்களுக்கிருந்த உரிமையின் ஒரு பகுதியை விட்டுவிட்டனர். தவிர, கடன்கள் முழுமையும் தீர்க்கப் படும் வரை, குடும்ப நிர்வாகத்திற்கென மூன்று சகோதரர்களுக்கும் ஆண்டிற்கு ரூ.25,000/- தொடர்ந்து வழங்க ஏற்பாடும் செய்தனர்.

எல்லாச் சொத்துக்களும் பிறருடைய பொறுப்பில் இருந்தன. இதன் விளைவாய் அவர்களுடைய வருமானம் குறைந்தது; அது சீராக வரவுமில்லை. தாகூர் குடும்பத்தார் வாழையடிவாழையென இருந்த வீட்டில், இதுவரை கேட்டுமிராத அளவில் தாமாகக் கட்டுப்பாடுகளை விதித்துக் கொண்ட சிக்கனமான வாழ்க்கை தொடங்கியது. தம் சுயசரிதையில் தேவேந்திரநாதர் எழுதியிருப்ப தாவது:-

"வேலையாட்கள் புடைசூழ இருந்த நிலை மாறி அவர்கள் எண்ணிக்கை குறைக்கப்பட்டது; என்னுடைய வண்டியையும் குதிரைகளையும் ஏலத்தில் விற்றுவிட்டேன்; எவ்வளவிற்கு முடியுமோ அந்த அளவு உணவின் தரமும் உடையின் ஆடம்பரமும் குறைக்கப்பட்டன. சுருங்கச் சொன்னால், வீட்டில் ஒரு துறவி யாகவே ஆகிவிட்டேன். நாளை என்ன உண்பது, எதை உடுப்பது என்ற கவலையெல்லாம் என் மனதை விட்டகன்றன. அதேபோல நாளை இந்த வீட்டிலேயே நான் இருப்பேனா என்பது பற்றியும் என் மனம் அழுந்திக்கொண்டிருக்கவில்லை. எவ்விதப் பற்றும் கொஞ்சமும் இல்லாதவனாகிவிட்டேன். பற்றில்லாத ஒரு மனிதனுடைய மன அமைதிபற்றியும் மகிழ்ச்சி பற்றியும் உபநிஷத்துகளில் படித்திருந் தேன். அவை என்ன என்பது பற்றி நானே என் வாழ்க்கையில் அனுபவித்தறிந்தேன். தன்னை விழுங்கிய ராகு என்னும் பாம்பினிடமிருந்து விடுபட்ட நிலவுபோல, உலகப் பற்றுக்களின் பிடியிலிருந்து என் ஆன்மாவும் விடுதலை பெற்றது. பிரம்மம் இருந்த பகுதியை நோக்கி அது தன் பயணத்தைச் செலுத்தியது".

அத்தியாயம்—19

தேவேந்திரநாதரின் மூத்த புதல்வியாகிய, காலஞ்சென்ற திருமதி சௌதாமினிதேவியார் தம் தந்தையாரைப் பற்றிய நினைவு களைத் தொகுத்து "பித்ருஸ்மிருதி" என்ற ஒரு நூல் எழுதியுள்ளார். அதில் அவர், இந்த வாழ்க்கைக் கால நிகழ்ச்சியைக் குறிப்பிடு வதாவது; தம் தந்தையோடு உடனிருந்து உண்ணும் வழக்க முடைய ராஜ்நாராயணன் என்பவர் ஒரு மாலை உண்ண வந்த போது அங்கு வெறும் சப்பாத்தியும் பருப்புமே உண்பதற்கு

பரிமாறப்பட்டன. ராஜ்நாராயணன் கவலை தோய்ந்த முறையில் இந்தக் குறைந்த உணவையுண்டு எவ்வாறு அவர் நலமாக வாழப் போகிறார் என்று தேவேந்திரநாதரைக் கேட்டார். அதற்கு மகரிஷி தத்துவமாய்த் தந்த விடை: "இறைவன் தம்முடைய அளக்க வொண்ணாத அறிவால் மனிதனுக்கென வகுத்திருக்கும் சூழ் நிலைக்குள் ஒருவன் வாழப் பழகிக் கொண்டால் எதுவும் என்றும் சிறப்பாகவே அமையும்".

குடும்பத்தின் வாழ்க்கைத் தரம் சுருங்கியதுடன் வெளிச்செலவு களையும் கணிசமான அளவுக்குக் குறைத்தனர். பொருட் பற்றுக் குறையின் காரணமாக தத்துவ போதினி பாடசாலைகளையும், இந்து இதார்த்தி வித்தியாலயத்தையும் நடத்துவதற்கெனத் தரப்பட்ட நிதியுதவிகள் தற்காலிகமாய் நிறுத்தப்பட்டன. இதன் விளைவாய் இந்தக் கல்வி நிலையங்கள் மூடப்பட்டன. தேவேந்திரநாதரிட மிருந்து நெடுங்காலம் முறையாகப் பண உதவிபெற்று வந்த சில சமூக நல நிலையங்களுக்கும் நிதி உதவுவது நிறுத்தப்பட்டது. இதே காரணத்திற்காக, வேதம் கற்கக் காசிக்கு அனுப்பப்பட்ட நான்கு அறிஞர்களும் திருப்பியழைக்கப்பட்டனர். சுருங்கச் சொன்னால் பல்வேறு பணிகளுக்குப் பல நிலைகளில் அவர்கள் தந்து வந்த பண உதவி நிறுத்தப்பட்டது. இத்தகைய நிறுத்தங்களும், அவற்றால் ஏற்பட்ட இழப்புகளும் தேவேந்திரநாதரைப் போன்ற மெல்லிய மனமும் அறவுணர்வும் கொண்ட ஒருவருக்கு எத்தகைய துன்பங் களைத் தோற்றுவித்திருக்கும் என்பதுபற்றி எழுதுவதில் பயனில்லை; உணர்ந்தே அறியவேண்டும்.

கடன்தாரர்களின் முழுக் கடனும் அடைபட ஒன்பது ஆண்டுகள் (1847-56)ஆயின. கடன் கொடுத்தவர் யாவரும் சிறிதுகூடக் குறைகூற முடியாதபடி அவர்கள் நிறைவடையும் வகையில் பணம் முறையாகத் திருப்பித் தரப்பட்டது.

துவாரகநாதர் ஒருமுறை குருடர்களுக்கான அறநிலையம் ஒன்றுக்கு ஒரு லட்சம் ரூபாய் தருவதாக வாக்களித்திருந்தார். இந்த வாக்குறுதியை நிறைவேற்றாமல் விட்டிருந்தால் யாரும் தேவேந்திரரைக் குறை கூறியிருக்க முடியாது; இது முறையான கடனுமன்று, எனினும் தம் தந்தையார்மீது அவர் கொண்டிருந்த மரியாதை காரணமாகவும், வாய்மை மீது கொண்ட பற்றுக் காரணமாகவும் இந்தப் பணத்தையும் ஒரு காசு குறையாமல் அவர் கொடுத்தது கண்டு வியந்தார்கள். ஒருவருக்கு வாக்குறுதி தருவது என்பது அதை நிறைவேற்றியதற்கு இணையானது என்பது மதிப்பிற்கு வைத்த அவருடைய அளவுகோலாம். தம் தந்தையாரின் வாக்குறுதியை அவர் நிறைவேற்றாமல் விட்டிருப்பாராயின்,

குருடர்களுக்கான அந்த அற நிலையத்துக்கு அவர் அநீதி செய்தவரா வார் ; கூடவே அவர் தந்தையாரின் ஆன்மாவும் சாந்தியடையாது. இந்த இரண்டையும் செய்ய அவர் தயாராயில்லை.

இந்த ஒன்பது ஆண்டுகளும் ஒதுக்கம், சிக்கனம், மறுப்புகள் இவைகலந்த துன்பமிக்க பருவமாகும். பொருள் வசதியைப் பொறுத்தவரை தேவேந்திரநாதர் வாழ்க்கையின் மிகக் கொடிய காலப்பகுதி அது. எனினும் ஆன்மீக நோக்கில் காணின் அவர் வாழ்வின் சிறப்புமிக்க பருவங்களில் அதுவும் ஒன்றும். அந்தத் துன்பம், அவர் சுகத்தில் மறைந்துகிடந்த கம்பீரத் தோற்றத்தை யும், நீதியுணர்வுமிக்க மேன்மையையும் வெளிப்படுத்தியது. அவர் பெயருக்கு முன்வரும் பெரிய முனிவர் எனப் பொருள்படும் ‘ மகரிஷி ’ என்ற சிறப்புப் பெயர் பின்னுல்தான் அவருக்கு இடப்பட்டது. 1867-ஆம் ஆண்டில், பிரம்மானந்த கேசவ சந்திர சென் அவர்களின் தலைமையில் இயங்கிய ‘ இந்தியாவின் பிரம்ம சமாஜத்தார் ’ தேவேந்திரரின் ஆன்மீக துறவுநிலைப் பண்பு நலன்களைப் பாராட்டி அப்பட்டத்தைத் தந்தனர். ஆனுல் பட்டம் வழங்கப்படுவதற்கு முன்பே, இதற்கான தகுதியை அவர் பெற்றுவிட்டார். இறைவனு டைய அருளாணைக்கு முழுதும் தம்மை ஆட்படுத்திக் கொண்டு, அவனுடைய பேரருளில் முழுமையாக அவர் வாழ்ந்த, மேற்கூறிய துன்பமிக்க கால கட்டத்திலேயே மகரிஷியாவதற்கான நிலைக்களன் அமைந்தது.

தம்முடைய பெருநிலங்களின் அளவு சுருங்கிவிட்டமை குறித்தோ அதன் விளைவாகப் பெருள் வசதி குறைந்துவிட்டது குறித்தோ மகரிஷி கவலைப்படவில்லை. மாருக தம்முடைய அந்தஸ்தில் ஏற்பட்ட இந்த மாற்றத்தை அவர் வரவேற்கும் மன நிலையிலேயே இருந்தார். தம்முடைய செல்வ நிலையில் ஏற்பட்ட ஒவ்வொருபடி நிலை மாற்றத்திலும் (Shift) கண்ணிற்குப் புலப்படாது செயற்படும் இறைவனது அருளாணையை உணர்ந்தார். தமக்கு வந்த துன்பங்களனைத்தையும் மகிழ்ச்சியுடன் தாங்கிக் கொண்டார். ராஜாராம் மோகன்ராயைப் போல தேவேந்திரரும் பாரசீக நாட்டு அருட்கவி ஹாபிஸ் (Hapiz) அவர்களைப் புகழ்ந்தவர் ; எப்போதும் அவருடைய கவிதைகளை வாய் ஒலித்துக் கொண்டிருக்கும். இந்தத் துன்பமிக்க காலம் முழுதும் அந்தப் பெருங்கவியின் பாரசீகக் கவிதை களில் கீழ்க்கண்ட பொருளுடைய பாட்டை அடிக்கடி அவர் ஜபித்துக் கொண்டிருந்திருக்கிருர்.

மின்னலுக்கு அதைவிட வேருெரு வழிபாடு தேவையில்லை
வணங்கப்படும் மின்னல், ஒரு சேர
செல்வனையும் வறியனையும் எரித்தாலும்
நான் வியக்கப் போவதில்லை.

5. புதியதொரு பேரொளி

பண நெருக்கடி ஒன்றுதான் அவருக்கு வந்த சிக்கல் என்பதில்லை. வேறு சில தொல்லைகளுக்கும் அவர் ஆளானார். வேதங்கள் வெளிப்படுத்தும் கருத்துக்களின் தன்மை பற்றித் தத்துவபோதினி சபையில் இருந்தவர்கள் இரண்டு பிரிவாகப் பிரிந்து மாறுபட்ட நோக்கம் கொண்டிருந்தார்கள். அட்சய குமார் தத்தர், ராமதானு லஹிரி மற்றும் அவர்களுடைய நண்பர்கள் ஒரு பக்கமும், தேவேந்திர நாதர், ராஜ்நாராயணன் போஸ் ஆகியோர் இன்னொரு பக்கமுமாய் நின்றனர். தேவேந்திரநாதர் அந்நாள் வரையிலும் வேதங்களில் கூறப்படும் கருத்துக்கள் முதிர்ந்த ஞானத்தில் தோன்றியவை என்றும், எனவே அவை 'குறையிலா நிறைவு'டையவை என்றும் கருதி வந்தார். அட்சயகுமார் வேதங்களின் 'குறையிலாத் தன்மை'யை வன்மையாக எதிர்த்தார். வேதங்களில் உள்ள சில சுலோகங்கள் அறிவுக்குப் புறம்பானவை என்றும், ஏற்றுக்கொள்ளத் தக்கவை அல்ல என்றும் அவர் வாதிட்டார். ராஜ்நாராயன் பாபு இருசாராருக்குமிடையே ஒரு சமநிலையை ஏற்படுத்த முனைந்தார். வேதங்கள், உபநிஷத்துகளின் குறையிலாத் தன்மையை அவர்கள் ஏற்றுக்கொண்டது தெளிந்த அறிவை அவை வெளிப்படுத்தியதாலன்று; ஆனால் அவை கூறும் கருத்துக்கள்—அறிவுக்கொத்தவை என்றும், நியாயமானவை என்றும் தாங்கள் கொண்டுள்ள கருத்துக்களுடன் ஒத்துள்ளன என்றும் ராஜ்நாராயண் பாபு கூறினார். ஆனால் இந்த விளக்கம் வேதங்களின் குறைவிலாத் தன்மையை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு நிறைவு தரவில்லை. தேவேந்திர நாதரை எதிர்ப்பது என்பதில் அவர்கள் மிகவும் தீவிரம் காட்டினர்கள். நாளாக ஆக இந்தக் கருத்து முரண்பாடு வேகமும் உணர்ச்சியும் மிக்கதாய் வளர்ந்து, அறிவு பூர்வமான நிலையைத் தாண்டியது.

மகரிஷி தாம் இதுவரை கொண்டிருந்த உறுதியான கொள்கை பற்றி ஆழமாக மறு சிந்தனை செய்யுமாறு தீவிரமான வாதங்கள் அவரைத் தூண்டின. அமைதியாகவும், உணர்ச்சிகளுக்கிடங் கொடாமலும், ஒரு வரையறுத்த நெறியிலும் சிந்திப்பது அவருடைய இயற்கை. எனவே ஒரு முறை முடிவுசெய்துவிட்டால் மீண்டும் அதைப்பற்றி எண்ணுவதோ, அல்லது அந்த முடிவை மாற்றுவதோ—மிகவும் வலுவான காரணங்கள் இருந்தாலன்றி—இல்லை.

அவருடைய சிந்தனை நோக்கு அவ்வாறு நிலைகொண்டு விட்டது. இது அவருடைய பண்பு நலனில் ஒரு பழைமைவாதியாக அவரைக் காட்டக் கூடும். எனினும் இந்தப் போக்கினால் ஒரு நல்ல பலன் இருந்தது. அடிப்படையான நம்பிக்கைகளைப் பொறுத்தவரை, நீண்ட, தொடர்ச்சியான, முதிர்ந்த சிந்தனைகளுக்குப் பிறகே அவர் ஒரு முடிவுக்கு வந்தார். அதற்குப் பிறகு, இப்படி அப்படி என்று மாற்றும் பேச்சே இல்லை. சூழ்நிலைக்கேற்பவும் காலத்திற்கேற்பவும் தங்கள் கொள்கைகளை மாற்றிக் கொள்ளும் சிலரைப் போன்றவரல்லர் தேவேந்திரர். அவர் ஓயாத சிந்தனை மிக்கவர்; ஆனால் அச் சிந்தனை, அகச்சிந்தனை இல்லார் போலக் காலத்திற்கேற்ற கோலம் பூணவில்லை. அடிக்கடி தன்னை மாற்றிக் கொள்வது என்பது அவர் இயல்பிலேயே இல்லாத ஒன்று.

இந்நிலையில், அவருடைய வேதக் கோட்பாட்டுக்காக அவரை வன்மையாகக் குறைகூறியபோதும், தத்துவபோதினி சபை கூட்டங்களிலும் பத்திரிகை வாயிலாகவும் எதிர்த்தபோதும்—தம்மை எதிர்ப்போரின் விருப்பத்திற்கேற்பத் தம்முடைய வேதம்பற்றிய நோக்கைப் புதியதாக ஆராயத் தேவேந்திரர் இணங்கினார். ஆனால் இது அவருக்கு எளிய பணியாயில்லை. வேதங்களிலுள்ள வலுவான அடிப்படைக் கருத்துக்களை நிலைக்களனாய் வைத்தே அவர் தம்முடைய சமயத் தத்துவம் என்னும் அழகுக் கோயிலை அமைத்தவர். எனவே அதை முழுதுமாகப் புத்தமைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படின் அதன் அமைப்புப்பற்றி முழுமையாகவும் பெரும் துன்பம் நிறைந்த உழைப்புடனும் துருவி ஆராய வேண்டியது தேவையாயிற்று. பல்லாண்டுகளாய்த் தம் நெஞ்சில் ஆழ வேரூன்றிவிட்ட ஒரு நம்பிக்கையை மறு மதிப்பீடு செய்வதென்பது அவருக்குக் கடினமான அனுபவமாம்.

குறைகூறுவோர் கருத்துக்களில் ஒன்று பிரம்ம சமாஜக் கோட்பாடு பற்றியது. பிரம்ம சமாஜம் ஒரு புதிய கோட்பாடு கொண்டதாகையால் அது பழைமையான சமயத் தத்துவம் எதையும் அடிப்படையாகக் கொண்டிருக்கக் கூடாது என்றும், தற்காலப் பகுத்தறிவுச் சிந்தனைப் போக்கிற்கேற்ப அமையவேண்டும் என்றும் அவர்கள் கூறினர். இந்த வாதம் குறையற்றதல்ல; ஆனால் அந்த வாதத்தை முன்வைத்து அவர்கள் பேசிய விதத்தில் ஒரு வேக உந்தல் அழுத்தம் இருந்தது. அது புதிய சமயத்திற்குத் தேவையான வலுவான அடித்தளத்தைப் பழைய சமயத்தை விஞ்சிச் செல்லுமாறு அமைப்பது போன்றிருந்தது.

தேவேந்திரநாதர் வேதங்களையும் உபநிஷத்துகளையும் பரவலாகவும் ஆழ்ந்தும் படித்தவர். ஆனால் உபநிஷத்துகளில் கதா,

கேனு, ஈசா, மண்டுக, மண்டுக்ய முதலியவற்றையே அவர் அந்நாள் வரை கற்றிருந்தார். இவற்றைப் பற்றி விசாரித்தபோதுதான் அதிக மாகப் பிறருக்குத் தெரியாத இன்னும் பல உபநிஷத்துகள் இருப் பதை அறிந்தார். இவையும் முக்கியமானவை தாம்; மற்ற உப நிஷத்துகள் போலவே சிறப்பும் உடையவை. அவர் வேதசாஸ் திரம் முழுதையும். அவற்றின் உரைகளுடன் ஆழ்ந்த அறிவுகைப் போகும் உணர்வுடன் படித்தார். அவருடைய தந்தையார் இறந்த பிறகு, தாகூர் குடும்பத்தினர் நடத்திவந்த இரண்டு நிறுவனங்கள் திவாலான சூழ்நிலையில் ஒரு கடுமையான பண நெருக்கடிக்காளாகி அவர் சொல்லவொண்ணுத் துயரமடைந்திருந்த நேரம் அது. அந்தக் காலப் பகுதியில் புதிய சாஸ்திரங்களை அவர் கற்கத் தொடங் கினுர் என்பதை நினைவு கூர்ந்தால் அவருடைய கடுமையான உழைப்புப் பற்றித் தெரிந்து கொள்ளலாம். சாதாரண மானிடநிலை தாண்டிய ஆற்றலும் ஆர்வமும் உடைய ஒரு மனிதரே, ஒரே சமயத் தில் அத்தகைய வேறுபட்ட இரண்டு பொறுப்புகளையும் ஏற்க முடியும்.

சமஸ்கிருதக் கல்வி கற்றுவந்த போதே, கூடக்கூட ஐரோப்பியத் தத்துவம், இறையியல் கோட்பாடுகளையும் கற்று வந்தார். தாம் கூறும் கருத்துக்களுக்குப் பிறருடைய எழுத்துக்களிலிருந்தும் சான்றுகள் காட்டி, அவற்றை மேலும் உறுதிப்படுத்துவது தேவேந்திரரின் வழக்கம். ‘உதவி தேடல்’ என்று அவர் இதைப் பற்றிக் குறிப்பிடுவார். எனவே தம்முடைய ஆராய்ச்சிக்கு உதவி செய்யும் சான்றுகளைத் தேடிச் சமஸ்கிருத நூல்களையும், ஐரோப்பியத் தத்துவ நூல்களையும் ஆழப் பயின்றுர். இவ்விரண்டு தவிர, பாரசீகக் கவிஞர் ஹாபிஸ் என்பவருடைய எழுத்துக்களையும் தொடர்ந்து ஆழ்ந்து கற்றுர்.

ஐரோப்பியத் தத்துவ இயலார்களில் அவர், லாக், உறியூம், பெயின் மற்றும் இவர்களைப் போன்ற அனுபவவாதிகளின் நூல்களை இந்துக் கல்லூரியிலிருந்த போதே படித்திருந்தார். ஆனுல் அவர்கள், இயற்கை மற்றும் அனுபவமே எல்லா அறிவுகளின் மூலம் என்று அவற்றையே தேவைக்கு அதிகமாக வலியுறுத்தியது அவருக்குப் பிடிக்கவில்லை. மகரிஷியின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய அஜித்குமார் சக்கரவர்த்தியின் கருத்தின்படி, தேவேத்திரர் பிரெஞ்சு நாட்டுக் கலைக்களஞ்சியவாதிகளின் நூல்களையும் கற்றுர். ஆனுல் பிரபஞ்சம் பற்றி அவர்கள் உணர்வு மயமின்றி எந்திரமயமாய் விளங்கியது அவருக்கு ஏற்புடையதாயில்லை. 18-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த பிரெஞ்சுப் பொருள் முதில்வாதிகளான (Materialists) வால்டேர், டிடெரட், டி ‘ஆலெம்பர்ட் அல்லது இவர் போன்ற பிறர் எழுதிய நூல்களைத் தேவேந்திரர் படித்துமிருக்கலாம்; படிக்காமலும்

இருந்திருக்கலாம். ஆனால் அத்தகைய எழுத்தாளர்களில் இருவரான லா மெட்ரி, ஹால்பாச் ஆகியவர் நூல்களைத் தேவேந்திரர் படித்ததற்கு அவருடைய சுயசரிதையிலேயே அகச்சான்று உள்ளது. அந்த நூல்களில் அவர்கள் கூறியிருந்த நாத்திகக் கருத்துக்கள், தேவேந்திரநாதரைப்போன்ற ஒரு தீவிர பக்தரின் நுட்பமான மனதை வெறுப்புக் கொள்ளச் செய்திருக்கும் என்பதை எளிதில் உணர்ந்து கொள்ளலாம். சுயசரிதையில் மூன்று, நான்காம் அத்தியாயங்களில் இயற்கையின் மீது அளவுகடந்து நம்பிக்கை வைப்பது பற்றிய கொள்கைகளை விமர்சனம் செய்யும் வகையில் அவர் கூறியிருக்கும் ஓரிரண்டு கடுமையான கருத்துக்கள் இந்த நாத்திகவாதத்திற்கு எதிர்ப்பு வாதமாக அமையும்.

தம்முடைய கருத்துக்கு அரண் தேடுவதற்காகத் தேவேந்திரர், ஹாமில்டன், ரெய்டு, துக்ளாட்-ஸ்டுவர்டு போன்றவர்களின் நூல்களை நிறையப்படித்தார். இவர்களில் பெரும்பாலோர் ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்தவர்கள்; உள்ளுணர்வுக் கோட்பாட்டைப் பின்பற்றுபவர்கள். அவர்களுடைய கருத்துக்கள் தேவேந்திரரைப் பெரிதும் ஆட்கொண்டன. அவை தம்முடைய நம்பிக்கைகளை உறுதிப்படுத்தியதை அவர் கண்டார். பின்னால் ஸ்பினோசா, டேகார்ட்ஸ், கூசின், கன்ட், பிக்டே, மற்றும் இவர்களைப் போன்ற பெரும் தத்துவ அறிஞர்களின் நூல்களை முறையாகக் கற்றறிந்தார்· தவிர, 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒழுங்குமுறைப் பொருள் முதல்வாதியான காசண்டி என்பார் நூல்களையும், ஆங்கிலேயரான அறிவியலறிஞராகவும் தத்துவவாதியாகவுமிருந்த ஸர். ராபர்ட்பாயில் என்பவர் நூல்களையும் படித்தார். தத்துவச் சிந்தனைகளின் புதிய புதிய கருத்துக்களைத் தெரிந்து கொள்ளத் தேவேந்திரர் பெரிதும் முயற்சி செய்தார். அறிவியல் பற்றிய ஆர்வமும் அவருக்கிருந்தது. 85 ஆண்டுகள் வாழ்ந்த தம்முடைய நீண்டகால வாழ்க்கையில் (1905-இல் அவர் இறந்தார்), தம் காலத்தில் எழுதப்பட்ட அறிவியல், தத்துவ நூல்களில் பரவலாகப் புகழ்பெற்ற 'எல்லா நூல்களையும் அவர் ஐயம் திரிபறக் கற்றார். புதிய எழுத்தாளர்களில் ஜான் ஸ்டுவர்ட்மில், ஹார்பர்ட் ஸ்பென்சர், கார்டினல் நியூமன் ஆகியோர் அவருக்கு மிகவும் பிடித்தமானவர்கள்.

பரவலாகவும், பலவகைப்பட்டதாகவும் அவர் கற்ற ஐரோப்பிய எழுத்தாளர்களைப் பற்றி இதுவரை கண்டோம். இந்தியாவின் உயர்தனிச் சமய இலக்கியங்களில் அவர் கற்றவற்றைப் பற்றிச் சற்று ஆழமாகவே இனிக் காண்போம்.

வேதங்களின் குறையிலாத் தன்மை பற்றிய கருத்துவேறுபாடு தோன்றிய காலத்தில், தேவேந்திரர் எல்லா உபநிஷத்துகளையும்

கற்றிருக்கவில்லை என்று முன்பே கண்டோம். சாந்தோக்ய உபநிஷத்தையும், பிருஹத தாரண்யக உபநிஷத்தையும் அவர் படிக்கவில்லை என்பது உறுதி. நான்கு வேதங்களையும் அவற்றின் பிழிவுகளான உபநிஷத்துகளையும் அவர் ஊன்றிப் படித்தபோது தம்முடைய கருத்துக்களுக்கு எதிரான சில பகுதிகள் இவற்றில் இருந்ததைக் கண்டார். இறைவன் அளப்பரியவன், வரம்பில்லான், மாற்றமில்லான், தேடற்கரியன், என்றுமுள நித்தியன் என்றெல்லாம் அவர்கள் இதுவரை கொண்டிருந்ததற்கு மாறாக அறிவுக்குப் புறம்பான பகுதிகளை அவர் அங்குக் கண்டார். இப்பொழுது வேதாந்தம் குறையற்றதா என்பதல்ல கேள்வி; (அட்சயகுமாரரும் அவர் ஆதரவாளர்களும் அது குறையற்றது என்று கருதியவர்கள்); ஆனால், இதற்கு முன்பு கொண்டது போல வேதாந்தத்தைப் பிரம்மசமாஜத்தினர் மையக் கருத்தாகக் கொள்ள முடியுமா என்பதே வினா. ஏனெனில், உபநிஷத்துகளை ஒரு திறனாய்வு நோக்கில் மீண்டும் ஒரு முறை ஆழக் கற்றபோது சில குறைகள் தெளிவாகப் புலப்பட்டன. ராஜாராம் மோகன்ராய் பிரம்மோ தர்மத்தை வேதாந்தத்தில் கூறப்பட்டுள்ள தர்மம் என்றே குறிப்பிட்டிருந்தார்; புதிய சமயத்தின் அடிப்படையாக அதை ஏற்றுக் கொண்டுமிருந்தார்கள். ஆனால், சாந்தோக்ய உபநிஷத்தின் (5/10/3-6) சில பகுதிகள், சடங்குகள், நிகழ்ச்சிகள் ஆகியவற்றை அளவுக்கு மீறி வற்புறுத்துவதையும் அவற்றில் அறிவுக்குப் பொருந்தாத கற்பனைகள் மிகுந்திருப்பதையும் கண்டபிறகு வேதாந்தத்தைப் புதிய உள் சமயத்தின் அடிப்படையாகக் கொண்டு இதுவரை ஆதரித்தது போல இனியும் செய்ய அவரால் எப்படி முடியும்? குறிப்பாக வாதராயணர் பிரம்ம சூத்திரத்துக்கு சங்கராச்சாரியார் எழுதிப் பின்னாளில் ஷரீரக மீமாங்கசா அல்லது உத்தரமீமாங்கசா என்று புகழ்பெற்ற உரைகள் தேவேந்திரருக்கு நிறைவு தரவில்லை. வேதாந்தத்தில் துறை போயவர் என்று அனைவராலும் மதிக்கப்பட்டவர் சங்கராச்சாரியார். பிரம்ம சூத்திரத்துக்கு அவர் எழுதிய விளக்கவுரை இன்னொரு வேதாந்தம் என்றே சொல்லுமளவு மக்களிடம் பரவியிருந்தது. ஆனால் பிருஹதாரண்யகா உபநிஷத்தில் (1/4/1) வரும் 'ஷோ ஹம்சமீ' அவன் நான் ஆவேன் என்ற தொடரும், சாந்தோக்ய உபநிஷத்தில் (6/8-16) வரும் 'தத்துவமசீ' நீ அவன் ஆவாய் என்ற தொடரும், இவை இரண்டைப் பற்றிச் சங்கரர் தம் உரையில் தந்த விளக்கமும் அவருடைய நம்பிக்கையைத் தகர்த்தன; இதுவரை பிடி கொண்டிருந்த உறுதி தளர்ந்தது போலுணர்ந்தார்.

இறைவனுக்கும் அடியாருக்கும் இடையில், வழிபடுவோர்-வழிபடப் படுவோன் என்ற நிலையில் இருக்கும் உறவு பிரம்மோதர்மத்தின் முக்கிய அடிப்படையாகும். இந்த உறவு நிலைக்குப் பதிலாக,

வழிபடுவோனை வழிபடப்படும் கடவுள் நிலைக்குச் சமமாக்கிவிட்டால், பக்தனுக்கு உள்ளார்ந்த ஆணவம் தோன்றி அளவு கடந்துவிடும். ஆனால் பிரம்மோதர்மத்தின் முழுக் கட்டுக் கோப்பும் தகர்ந்துவிடும். அவர் தம் சுயசரிதையில் எழுதிய சொற்களைக் கவனிப்போம் :

'' ஆனால், '' நானே கடவுள் '' என்பது போன்ற தற்புகழ்ச்சிகள் அதிகத் தீங்கு பயக்கும் களனாகும். ஒருவர் இதுபோன்ற சொற்களைக் கூறுவதை நிறுத்த வேண்டும். உண்மையில் இறப்புகள், பாவங்கள், துன்பங்கள், அழிவுகள் முதலியவற்றின் வலைப்பின்னல்களில் அகப்பட்டு நூற்றுக்கணக்கான மண்ணுலகப் பற்றுகளில் சிக்கி உழல்கின்ற போது, ஒரு மனிதன் தன்னைப் பற்றற்றவன் என்றும், நித்திய விடுதலை பெற்றவன் என்றும் சொல்லிக் கொள்வதைவிட வேறு விந்தையுண்டா ? ஜீவனையும் பிரம்மத்தையும் ஒரே நிலையில் சமமாக்கி உரை எழுதியதன் மூலம் சங்கராச்சாரியர் இந்தியாவின் அறிவு நோக்கையே திசை திருப்பிவிட்டார். அவருடைய ஞானத்திற்காட்பட்டு துறவிகளும்—ஏன் இல்லறத்தார்கள்—கூட அறிவுக்குப் புறம்பான இந்த '' நானே கடவுள் '' என்னும் தொடரை ஜபித்துக் கொண்டிருக்கிறார்கள் ''

(அத்தியாயம்—28)

எனவே வேதாந்தம் அவர்களுடைய சமயத்தின் அடிப்படையாக அமையவியலாது என்று தேவேந்திரநாதர் அரைகுறை மனதுடன் முடிவு செய்தார். எனின், பின் வேறு எது அதற்கு அடிப்படையாய் அமையக்கூடியது ? இந்தக் கேள்வியைப் பற்றியே பல நாட்கள் ஆழ்ந்த அமைதியில் சிந்தித்தார். வேதங்கள் குறையிலாதவை என்று அவர் கருதியிருந்த அறிவு மயக்கம் ஒரு சிறிது நீங்கியது. அட்சயகுமார் தத்தர், ராமதானு லஹிரி, ராம்கோபால் கோஷ் போன்றோருடைய கருத்துக்களில் பாதியை அவர் ஏற்றுக் கொண்டார். தாம் இது நாள் வரை வாழ்வுமுழுதும் நம்பிவந்த கருத்துக்களை விட்டுவிடுவது இதயத்தைப் பிழிவதுபோன்ற வேதனையை அவருக்குத் தந்தது ; ஆனால், சத்தியத்தின் மீது அவர் கொண்டிருந்த தணியாக் காதல், கருத்தை மாற்றிக் கொள்வது தவிர வேறு வழியில்லை என்று காட்டியது. சந்தர்ப்பவாதம் தேவேந்திரர் முழுதும் அறியாத ஒன்று.

அன்றிலிருந்து வேதங்களோ, உபநிஷத்துகளோ, பிரம்மோ தர்மத்தின் அடிப்படையாக அமைய முடியாது என்பதைத் தேவேந்திரர் துணிவுடனும் தமக்கென அமைந்த தன்மையுடனும் எல்லாரும் அறியப் பறை சாற்றினர். எனின் அந்த அடிப்படை வேறு எங்குதான் உள்ளது ? ஞானத்தால் அறிவு விளக்கம் பெற்று, தன்னம்பிக்கையில் உறுதிபெற்ற ஒரு பக்தனின் தூய்மையான

நெஞ்சமே அந்த அடிப்படை என்பதை அவர் வலியுறுத்திக் கூறினர். அவர் சுய சரிதையில் எழுதியதாவது :

"தூய்மையான நெஞ்சில்தான் பிரம்மன் வாழ்கிருன். பிரம்மோ தர்மத்தின் அடிப்படை அந்தத் தூய நெஞ்சமே. அந்த இதய உயர்விற்கேற்ற கருத்துக்களைக் கொண்ட உபநிஷத்துகளின் சொற்களையே நாம் ஏற்றுக் கொள்ள முடியும். அந்த உணர்விற்கு மாறுபட்ட சொற்களை நாம் ஏற்க முடியாது."

(அத்தியாயம் : 22).

தேவேந்திரர் தங்களின் சமய நோக்கத்தைப் பலரறியக் கூறியதோடு நின்றுவிடவில்லை ; அந்த நோக்கத்திற்கு வடிவம் கொடுக்கும் வகையில் நீதிகளடங்கிய ஒரு நூலைத் தயாரிப்பதில் முனைந்தார். பிரம்ம சமாஜத்தினர் தங்கள் வீடுகளிலும், சமாஜக் கோயிலில் நடைபெற்ற கூட்டு வழிபாட்டின்போதும் பயன்படுத்துவதற்கென ஒரு வழிபாட்டு முறையை அவர் ஏற்கெனவே உருவாக்கியிருந்தார். அவருடைய அவ்வப்போதைய மனநிலைகளுக்கேற்ப அதைத் திருத்தியமைக்கவோ மாற்றவோ செய்வார். அதற்கு முன்பே, ஒருவர் பிரம்ம சமாஜ உறுப்பினராய்ச் சேரும்போது எடுத்துக் கொள்ள வேண்டிய உறுதிமொழி ஒன்றை விதிமுறைகளுடன் தயாரித்திருந்தார். அதிலே கூட பலரும் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் தகுந்த மாற்றங்களைச் செய்தார். ஆனல், இப்பொழுது அவர் செய்ய வேண்டியதோ மிகப்பெரிய பணியாய் இருந்தது. அவர் தங்களுடைய சமயத்தின் கட்டுக்கோப்பை அமைப்பதில் தீவிரமாய் ஈடுபட்டார். அத்தகைய நூல் பற்றிய கருத்து அவர் நெஞ்சில் பதியத்துவங்கியவுடனே, அவர் அட்சயகுமாரரை வரவழைத்தார்; அவரிடம், பிரம்மோதர்மத்துக்கு ஏற்றதாக இருக்கும் என்று அவர் கருதிய சுலோகங்களை-உபநிஷத்துகளிலிருந்து, பிற நூல்களிலிருந்தும் ஊற்று நீர் பீறிடுவதுபோலப் பொழிந்து கூறி எழுதப் பணித்தார். இப்படியாக மூன்றே மணி நேரத்தில், "பிரம்மோதர்மம்" என்னும் நூல் அதனுடைய முதல் வடிவம் பெற்று உருவாகியது. பிறகு, தேவையான இடங்களில் விளக்கம் தந்தும், உரை எழுதியும் அதைப் பெரிது படுத்தினர். கூடவே பிற்சேர்க்கை ஒன்று எழுதி அதை நிறைவு செய்தார்.

நூலின் முற்பகுதியிலுள்ள சுலோகங்கள் பெரும்பாலும் உபநிஷத்துகளிலிருந்து எடுக்கப்பட்டவை. அவை எல்லாம் வல்ல இறைவனைப் பற்றியும், என்றுமுள மெய்ம்மை பற்றியும், வாழ்வுக் குறிக்கோள் பற்றியும், பேசுவன ; இரண்டாம் பகுதி, வாழ்க்கையில் அறவழி நடப்பது பற்றி அறிவு கொளுத்துவது போல் அமைந்தது.

அதில், கீதை, மகா நிர்வாண தந்திரம், மனுசங்கிதை மற்றும் இவை போன்ற நூல்களிலிருந்து எடுக்கப்பட்ட சுலோகங்கள் இருந்தன. இந்த இரண்டாம் பகுதி பதினாறு அத்தியாயங்களாகப் பகுக்கப் பட்டு ஒரு இல்லறத்தான் கடைப்பிடிக்க வேண்டிய பல்வகைக் கடமைகளின் தொகுப்பாயிருந்தது. பெற்றோர், மூத்தோர், மனைவி, புதல்வர், புதல்வியர், மற்றும் தம்மைச் சார்ந்துள்ள சுற்றம்—ஆகியோருக்கு ஆற்றவேண்டிய கடமைகள், நேர்மை, வாய்மை, அற வினைகள், தன்னடக்கம் ஆகிய எல்லாமே இப்பகுதியில் கூறப்பட்டிருந்த விதிகளுள் அடங்கியிருந்தன.

தம்முடைய கருத்து கேட்போர் நெஞ்சில் பதிவதற்கேற்ப, வெவ்வேறு நூல்களிலிருந்து எடுக்கப்பட்ட சுலோகங்களின் பகுதிகளை மாற்றியிணைத்துப் புதிய வகையில் அமைத்ததும் உண்டு. இதன் விளைவு, வியக்கும் வண்ணம் அமைந்தது. அவற்றைக் கற்றவர்கள், கேட்டவர்கள் யாராயினும், இப்படிப் பிரித்திணைக்கப்பட்ட பகுதிகளைத் தனித்தன்மை கொண்ட சுலோகங்களாகவும், பிரிக்கமுடியாத அமைப்பு கொண்டவையாகவும் கருதினர். அந்த நூல் பெருமளவில் புழங்கத் தொடங்கியதாலும் அந்தச் சுலோகங்களை ஓயாது உச்சரித்ததால் ஏற்பட்ட இடையறாத் தொடர்பாலும் அவை அவர்கள் நினைவில் ஆழப் பதிந்தன. இன்னின்ன நூலிலிருந்து இந்த வரிகள் எடுக்கப்பட்டு, இப்படி இணைக்கப்பட்டன என்று அவர்கள் அறிய நேர்ந்திருந்தால் உண்மையில் வியப்படைந்திருப்பர். சான்றுக்கு ஒன்று காண்போம். கீழுள்ளது இந்நூலின் 12-வது அத்தியாயத்தில் வரும் 109-ஆவது சுலோகம் :

"ஏநாஹம் நாம்ருதா ஸ்யாம் கிமஹம் தேன குர்யாம்
அஸதோ மா ஸத்கமய
தமஸோ மா ஜ்யோதிர் கமய
ம்ருத்யோர் மாம்ருதங் கமய
ஆவிரா விர்ம ஏதி
ருத்ரயத்தே தக்ஷிணம் முகம் தேனமாம் பாஹி நித்யம்"

இதன் கருத்து :

"எதனால் நான் இறவா நிலையை அடைய முடியாதோ அதைக் கொண்டு நான் என்ன செய்யப்போகிறேன்.

பொய்மையிலிருந்து என்னை மெய்ம்மைக்கு அழைத்துச் செல்வாயாக !

இருளிலிருந்து என்னை ஒளிக்கு அழைத்துச் செல்வாயாக !!

மரணத்திலிருந்து என்றும் அழியா நிலைக்கு அழைத்துச் செல்வாயாக !

இந்நிலை மேலும் மேலும் வளர்வதாக !

ருத்திரனே ! உன்னுடைய தெற்கு நோக்கிய (அருள்) முகத்தால் என்னை என்றும் காப்பாயாக !''

இதில் முதல் வரி பிருஹாதரண்யக உபநிஷத்திலிருந்து எடுக்கப்பட்டது (2/4/3 ; 4/4/3) ; இரண்டாம், மூன்ரும், நான்காம் வரிகள் அதே நூலின் வேருெரு பகுதியிலிருந்து எடுக்கப்பட்டவை (1/3/28) ; ஐந்தாம் வரி ஐத்ரேய (சாந்திபாகம்) உபநிஷத்திலிருந்தும், இறுதி வரி சுவதேஸ்வதாரா உபநிஷத்திலிருந்தும் எடுக்கப்பட்டன (4/21). உபநிஷத்துகளை மிக ஆழமாக ஊன்றிப் படித்தவரேயன்றி இவை வேறுபட்ட பகுதிகளை ஒருங்கிணைத்துச் செய்யப்பட்ட வழிபாடு என்பதை, யாரே அறிவர்? இது உபநிஷத் பெற்ற புதியதொரு வடிவம் ; தேவேந்திரநாதர் கொடுத்த வடிவம் ; அவர் தம்முடைய தொகுப்பு 'பிரம்மி உபநிஷத்' என்று பெயர் பெற வேண்டும் என்று விரும்பினுர் ; அப்படியே அதுவும் பெற்றது.

'பிரம்மோ தர்மம்' நூலைத் தொகுத்துக் கொண்டிருந்தபோதே, ரிக்வேதத்தை வங்காள மொழியில் பெயர்த்து, தத்துவபோதினி பத்திரிக்கையில் வெளியிட்டு வந்தார். (1848 ஆகஸ்டு). இந்த மொழி பெயர்ப்புப் பணியை அவர் இருபதாண்டுகளுக்கு மேல் தொடர்ந்து செய்தார். வேதங்களையும் உபநிஷத்துகளையும் தங்கள் சமயம், முழுவதும் ஏற்றுக் கொள்ளத்தக்கவையல்ல என்று அவர் ஒதுக்கினும், அவை துளிகூடத் தேவையற்றவை என்று ஒட்டு மொத்தமாய் தூக்கி எறிந்துவிடவில்லை. தொன்மையான சாஸ்திர ஞானக் குவியலில் ஊறித்திளைத்த அவர் மனம், அப்படி ஒரு செயலை எண்ணிக்கூடப் பார்க்காது. அதைவிட அவர் இறந்தே கூடப் போயிருப்பார். முன்பு காட்டி வந்தது போலவே இப்போதும் வேதங்கள், மற்றும் உபநிஷத்துகளின் மீது அவர் ஆர்வம் காட்டி வந்தார் ; ஆனுல் ஒரு வேறுபாடு. இப்பொழுது அவற்றில் வரும் சில பகுதிகளை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. அவருடைய தற்போதைய நோக்கம் முழுவதையும் ஏற்பதன்று ; பலவற்றைத் துய்ப்பதே.

இவற்ருேடு இன்னென்றையும் நாம் மறவாது நினைக்க வேண்டும். கார்—தாகூர் அண் கம்பெனி நிதி நெருக்கடிக்குள்ளாகி அவருடைய கவனமெல்லாம் அதில் ஈடுபட்டிருந்த நேரத்தில் இத்தனையும் செய்தார். 1848.ஆம் ஆண்டு அவர் வேகமாகச் செயல்புரிந்த காலப் பகுதிகளில் ஒன்று ; இது அவருடைய வாழ்க்கையின் உன்னதமான ஆண்டு எனலாம். அப்போது அவருக்கு வயது முப்பத்தொன்றே.

6. இடைவேளை

1848-க்கும் 1858-க்கும் இடைப்பட்ட பத்தாண்டுகள் ஓரளவு அமைதியான காலப் பகுதியாகும். தேவேந்திரர் இக்காலத்தில் பயணங்கள் மேற்கொண்டார். மேலும் கடன்களைத் திருப்பித்தருதல், வீட்டுக் கடமைகளைக் கவனித்தல், அரசியல் சார்புடைய பிரிட்டிஷ் இந்தியச் சங்கத்தின் செயலாளராகச் சில ஆண்டுகள் பணியாற்றல் என்று பல பணிகளைச் செய்தார். பல இடங்களில் பிரம்மசமாஜக் கிளைகளை நிறுவினார். அவற்றுள் முக்கியமானது பவானிபூர் பிரம்ம சமாஜக் கிளை ஆகும். தம் வீட்டுத் தோட்டத்தில் நடந்த விருந்து களிலும் மகாநாடுகளிலும் பிரம்மசமாஜ உறுப்பினர்களைச் சந்தித்தும், அவர்களுடன் சமாஜத்தை வலுப்படுத்துவதற்கான வழிவகைகளைப் பற்றிக் கலந்துரையாடியும் வந்தார். இத்தனையுடன் நூல்களும் எழுதி வந்தார். மேற்சொன்ன பட்டியலிலிருந்து அவர் பலவகைப் பட்ட பணிகளை ஆற்றிவந்தமை புலனாகும். எனினும் இந்தக் காலப் பகுதி முழுதும் அமைதி நிறைந்தது என்று சொல்ல முடியாது. தேவேந்திரர் குடும்பக் கவலைகளுக்கு ஆளாகியிருந்தார். ஏற் கெனவே ஒப்புக் கொண்டபடி கடன்தாரர்களுக்குப் பணம் தருவது தொடர்ந்து நடைபெற்று வந்தது; ஆனாலும் அது சிக்கலற்றதாக இல்லை. அந்நாள்வரை அவருடைய தம்பி கிரீந்திரநாதர் பெருநிலப் பொறுப்புகளை செவ்வனே கவனித்து வந்தார். 13-12-1854-இல் அவர் திடீரென்று காலமானார். அவருடைய எதிர்பாராத இழப்பினால் வீட்டுக் கடமைகளை மேற்கொள்ள உதவியாள் இன்றி மிகவும் துன்புற்றார். வேறு வழிகளிலும் சங்கடங்கள் ஏற்பட்டன.

ஒரு கடன்தாரர் தாம் கொடுத்திருந்த ரூ.14,000/ஐத் திரும்பப் பெறத் தேவேந்திரநாதர் மீது வழக்குத் தொடுத்தார்; அதன் காரண மாக அவரைக் கைது செய்யும் ஆணை நீதி மன்றத்தால் பிறப்பிக்கப் பட்டது; எனவே அவர் ஷெரீப்பின் முன்னால் நிறுத்தப்பட்டார். ஆயினும் அவர் ஜாமீனில் விடுதலையானார்; அப்போது நீதி மன்றத் தொடர்பின்றி அவர்கள் தமக்குள்ளேயே வழக்கைத் தீர்த்துக் கொண்டனர்.

இந்த நேரத்தில் அவர் அனுபவித்த கவலைகளில் இது ஒரு வகையாம்.

அவருக்குக் கடைசித்தம்பியான நாகேந்திரநாதர் (தம் தந்தை யார் துவாரகநாதருடன் இங்கிலாந்துக்குச் சென்று, தந்தையின் மறைவிற்குப் பிறகு தாயகம் திரும்பியவர்) வரவிற்கு மீறிச் செலவு செய்து அடிக்கடி கடன் தொல்லைகளுக்குள்ளானவர். தம்முடைய செலவுக்கும் சொந்தக் கடன்களைத் தீர்ப்பதற்கும் அதிகப் பணம் வேண்டும் என்று தேவேந்திரரை அவர் மேலும் மேலும் நச்சரித்தார். ஓரிடத்தில் கடன் பெறுவதற்காகத் தமக்கு ஜாமீனாக நிற்கும்படி தேவேந்திரரை அவர் வற்புறுத்தினார். எந்தச் சூழ்நிலையிலும் புதிய கடன்கள் ஏற்பட வழி செய்யக் கூடாது என்று உறுதி எடுத்திருந்த தேவேந்திரருக்குத், தம்பியின் போக்கு, தொடர்ந்து மனவருத் தத்தை உண்டாக்கியது. விளைவு, குடும்பத்தில் ஏற்பட்ட மனக் கசப்பும், அமைதி பறிபோன நிலையும்தான். மான உணர்ச்சி மிக்க நாகேந்திரநாதர் வீட்டைவிட்டு வெளியேறி ஒரு உறவினர் வீட்டில் வாழத் தொடங்கினார். எவ்வளவு வற்புறுத்தியும், வேண்டியும் அவர் திரும்பி வர மறுத்துவிட்டார்.

வீட்டின் நிலைமைதான் இவ்வாறேனில், புறச் சூழ்நிலையும் அவருக்குச் சாதகமாக இல்லை. தத்துவபோதினி சபையில் அட்சய குமார் தத்தர், ராகால்தாஸ் ஹால்தார், அனங்கமோகன் மித்ரா, இன்னும் பிறர் 'பிரம்மோதர்மம்' என்ற தேவேந்திரரின் நூலை மிகவும் குறை கூறினார்கள். வழிபாட்டின்போது சமஸ்கிருதத்திற்குப் பதிலாக வங்க மொழியையே பயன்படுத்த வேண்டும் என்று வற் புறுத்தினார்கள். 1853, பிப்ரவரியில் கிதர்பூரில் பிரம்மசமாஜக் கிளை ஒன்றை அவர்களால் நிறுவ முடிந்தது. அங்கு, வங்க மொழியில் வழிபாடு நடத்துதல், என்ற அவர்களுடைய நீண்ட நாள் ஆர்வம் நிறைவேறியது.

அட்சயகுமாரரும் அவருடைய நண்பர்களும் ஜொரசங்கோ, தாகூர்பாடியில் 'ஆத்மிய சபை' என்ற பெயரில் ஒரு மன்றத்தை ஏற்படுத்தினார்கள். இங்கு அவர்கள் பலவற்றைப் பற்றித் தொடர்ந்து கலந்து ஆய்வு நடத்தினர். அப்போது ஏற்பட்ட பிளவுக்கருத்துகளைக் கைதூக்கி வாக்கு எடுப்பதன் மூலம் முடிவு எடுத்தனர். இறை வனின் இயல்புகளைக் கூட இம்மாதிரியான வாக்கெடுப்பாலேயே முடிவு செய்தார்கள்.

மகரிஷிக்கு இதையும் பொறுத்துக் கொள்வது அவர் நிலைக்கு அதிகமாகப்பட்டது. தெய்வத்திற்கஞ்சும் மனிதராக இருந்த அவர், எல்லாருக்கும் தெரிந்த இறையியல்வாதிகள் கூடியிருக்கும் ஒரு கூட்டத்தில், இறைவனை மையக் கருத்தாக வைத்துக் கலந்துரை யாடியது அவருக்குப் பிடிக்கவில்லை. 'ஆத்மிய சபை' உறுப்பினர் களின் செயற்பாட்டில் வெறுப்புற்று, தாம் தோற்றுவித்த நிறு

வனத்தைக் கைப்பற்றப் பல நாத்திகர்கள் உள்நுழைந்துவிட்டார்கள் என்று அவர் ராஜ்நாராயணன் பாபுவுக்குக் கடிதம் எழுதினார். அவர்கள் வெளியேற்றப்படும் வரை பயனுள்ளதாய் எதுவும் செய்ய இயலாது என்று கூறினார்.

இக்கூற்று அவருடைய மனச்சோர்வின் வெளிப்பாடேயன்றி உண்மையான நோக்கமன்று. எனினும், அச்சமயத்தில் அவர் எவ்வளவு நொந்துபோய் மனமிடிந்து போயிருந்தார் என்பதை இது காட்டும். அவர் கல்கத்தாவைவிட்டு நீங்கி, பரநகரில் இருந்த வீட்டில் கொஞ்ச காலம் வாழ்ந்தார். உபநிஷத்துகள், ஸ்ரீமத்பாகவதம் ஆகியவற்றைக் கற்பதில் பொழுதைச் செலவிட்டார். அங்கு வாழ்ந்து வந்தபோதுதான் இமயமலைக்குப் போகவேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. அந்தப் பயணம் பற்றி அவர் உடனே முடிவு செய்தார். அவருடைய இமயமலைச் செலவு பற்றிப் பார்ப்பதற்கு முன்னால், இந்தச் சமயத்தில் அவர் மேற்கொண்டிருந்த குறுகிய பயணங்கள் பற்றி அறிய வேண்டும்.

தேவேந்திரர் தம் வீட்டில் உருவ வழிபாட்டு முறைப் பழக்கத்தை விட்டுவிட்டாரென்றாலும், தம்முடைய சகோதரர்களையும் அதைப் பின்பற்றச் செய்ய என்ன முயன்றும் அவரால் முடியவில்லை. மூதாதையர் பலர் வாழ்ந்த அவ்வீட்டில் துர்க்காபூஜை தொடர்ந்து நடத்தப்பட வேண்டும்; துர்க்காபூஜையின் சிறப்பு சமுதாய விழாவாக அமைவதே; அதன் மூலம் எல்லாவகை மக்களிடையேயும் இருக்கும் பிணைப்பு வலுப்படுகிறது; அதனால் எந்தச் சூழ்நிலையிலும் அதை நிறுத்தும் பேச்சிற்கே இடமில்லை என்று அவர்கள் கூறினார்கள். ஜகத்தாத்ரி பூஜையை விட்டுவிட அவர்கள் இணங்கினார்கள்; எனினும் நீண்ட நாளாக நோற்றுவரும் துர்க்கா பூஜையை விட மறுத்துவிட்டார்கள்.

எனவே ஒவ்வொரு ஆண்டும் துர்க்கா பூஜை நடைபெறும்போது தேவேந்திரர் வீட்டைவிட்டு வெளியேறி, நாட்டின் பல பாகங்களையும் சுற்றிப் பார்த்துவர இந்தக் காலத்தைப் பயன்படுத்திக் கொண்டார். வீட்டில் உருவ வழிபாட்டு முறையில் விழா நடக்கும்போது, விருப்பமில்லாத ஒரு கட்டாயத்திற்கு உள்ளாவதிலிருந்து தப்பித்துக் கொள்ள இந்தப் பயணங்கள் அவருக்குப் பயன்பட்டன. ஒவ்வொரு இலையுதிர் காலத்திலும் அவர் தாம் விரும்பிய இடங்களுக்குப் போய் வந்தார். 1849-ஆம் ஆண்டில் அசாமில் உள்ள கௌஹாத்திக்கு விசைப்படகின் மூலம் சென்றார். அங்கு காமாக்ய குன்றுகளின் மீதிருக்கும் காமாக்யர் கோவிலுக்குப் போனார். அடுத்த ஆண்டில், அவர் முன் திட்டம் எதுவுமில்லாமல் கடற்பயணம் மேற்கொண்டார். தம்முடைய முதற்கடற்பயணமாகிய அப்போது அவர்

பர்மாவிலுள்ள மௌல்மென் வரை சென்று வந்தார். அவர் தம்முடைய சுயசரிதையில், மௌல்மென் நகரில்தாம் பெற்ற அனுபவங்களை—குறிப்பாக நகரிலிருந்து சற்றுத் தொலைவில் இருக்கும் குகைக்குச் சென்று வந்தது பற்றிக் கொஞ்சம் விளக்கமாகவே எழுதியிருக்கிறார். 1851 மார்ச்சு-ஏப்ரலில் ஒரிசாவுக்குச் சென்று கட்டாக், பூரி ஆகிய ஊர்களைக் கண்டு வந்தார். இவற்றுக்கிடையே வங்க மாநிலத்தில் இங்குமங்குமாகப் பல இடங்களுக்குப் பிரம்ம சமாஜம் சார்ந்த புதிய மையங்களை நிறுவுவதற்காகச் சிறு பயணங்கள் மேற்கொண்டார்.

தேவேந்திரநாதர் அதுவரை எவ்விதமான அரசியல் ஈடுபாடும் கொள்ளாது விலகியே இருந்தார். சமயப் பணிகளில் மூழ்கியிருந்த அவருக்குப் பிறவேலைகளில் ஈடுபட நேரமேயிருக்கவில்லை. ஆனால் 1851 அக்டோபரில் பிரிட்டிஷ் இந்தியச் சங்கம் தோற்றுவிக்கப் பட்டது. அதற்குச் செயலாளராக இருக்குமாறு அவரைக் கேட்டுக் கொண்டார்கள். பொதுத் தொண்டாற்றுவதில் என்றுமே விருப்பம் கொண்டிருந்த அவரால் அதை மறுக்க இயலவில்லை. பிரிட்டிஷ் இந்தியச் சங்கம் ஏற்கெனவேயிருந்த இரண்டு சங்கங்கள் இணைந்து உருவானது. துவாரகநாதர் ஏற்படுத்தியிருந்த வங்காள நிலக் கிழார்கள் சங்கமும், அவருடைய நண்பர் ஜார்ஜ் தாம்சனால் 1845-இல் ஏற்படுத்தப்பட்ட வங்காள பிரிட்டிஷ் இந்தியச் சங்கமும் ஒரே மாதிரியான நோக்கம் கொண்டவை. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வங்காளியரை அரசியல் ரீதியாக விடுதலை செய்ய நடந்த போராட்டத்தை வலிமையுடனும் வேகத்துடனும் செலுத்த ஒருங்கிணைந்த முயற்சி தேவையாயிருந்தது. இரு சங்கங்களும் இணைந்ததால் அது சாத்தியமாயிற்று. புத்தெழுச்சி பெற்ற, வங்காள நிலக்கிழார்கள் அதுவரை ஒற்றுமையின்றியும், ஒரு அமைப்பின் கீழ் இயங்காமலும் இருந்து வந்தார்கள். நடுத்தர, உயர் நடுத்தர இன வங்க மக்களிடையே காணப்பட்ட இந்த ஒற்றுமையின்மை, ஐரோப்பியர்களுக்கும் வங்க மக்களுக்குமிடையே நடந்த சட்ட பூர்வமான வழக்குகளில், ஐரோப்பியருக்குச் சாதகமாய் அமைந்து அவர்கள் பல வெற்றிகள் பெறக் காரணமுமாயிற்று. ஆளும் வர்க்கம் பெற்ற அத்தகைய வெற்றிக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு, ‘கறுப்புச் சட்டம்’ என்றழைக்கப்பட்ட சட்டத்தை ஒழிக்க வேண்டும் என்று வெள்ளையர்கள்—குறிப்பாக அவுரித் தோட்ட வெள்ளைய முதலாளிகள்—இடைவிடாத போராட்டம் நடத்தி இறுதியாக வெற்றி பெற்றமை ஆகும். இந்தச் சட்டம் வெள்ளையருக்கும் இந்தியருக்குமிடையே சட்ட அமைப்பிலிருந்த குறைபாட்டை நீக்கவும், அதை மீறுகின்ற ஐரோப்பியர் மீது மாவட்ட நீதி மன்றங்களிலேயே வழக்குத்தொடுக்கவும் வகை செய்தது. அதுவரை அத்தகைய வழக்கு

களைக் கல்கத்தாவில் இருந்த உச்ச நீதி மன்றத்தில் (Supreme Court) தொடுப்பதே வழக்கமாக இருந்தது. இவ்வாறு இந்தச் சட்டம் ஆளுவோர் ஆளப்படுவோர் என்ற வேறுபாடின்றி அனைவருக்கும் ஒரே வகையான நீதியைத் தெளிவாக வழங்கியது. எனினும் ஐரோப்பியரின் ஒன்றுபட்ட எதிர்ப்பாலும், வங்காளியரிடையே இருந்த பலவீனத்தாலும் இது தோல்வியுற்றது.

இந்தத் தோல்வி வங்காளியரின் கண்களைத் திறந்தது. ஒருங் கிணைந்த அரசியல் நிறுவனம் வேண்டுமென்று அவர்கள் உணர்ந் தனர். இதன் விளைவாகவே மேற்சொன்ன சங்கம் பிறந்தது. தேவேந்திரர் சங்கத்தின் செயலாளராக இரண்டாண்டுகள் இருந் தார். (31. 10. 1851—13. 1. 1854) அவருடைய வாழ்க்கைப் பற்று களில் அரசியல் இடம் பெறவில்லை. ஆனால், எந்தப் பணி தனக்குக் தரப்பட்டாலும் அதை ஏற்று நடத்துவது அவர் பழக்கம். தம் முடைய மனச்சான்றுக்குப் புறம்பாகாத எதையும், அது எந்தத் தன்மையுடையதாயினும், சமய வேட்கையுடனும் பணிபுரிவார். தமக்குத் தரப்பட்ட இந்தச் செயலாளர் பணியிலும் அவ்வாறே செயற்பட்டார்.

பிரிட்டிஷ் இந்தியச் சங்கச் செயலாளராக இருந்த காலத்தில் அவர் ஆக்க பூர்வமாகச் சில செய்தார். சௌகிதாரி சட்டம் (Chowkidari Act) நிலச் சீர்திருத்தச் சட்டம், உப்புச் சட்டம் இவற்றில் சில மாற்றங்களைக் கொணர்ந்தார். இவற்றுள் தலையாயது, பிரிட்டிஷ் நாடாளுமன்றத்திற்கு ஒரு கோரிக்கை விண்ணப்பத்தை அனுப்பி வைத்ததாகும்; அப்பொழுது அமைக்கப் படுவதாக இருந்த ஆட்சிக்குழுக்களில் இந்தியருக்கு அதிக இடம் தர வேண்டு மென்றும் மற்ற பிரிட்டிஷ் குடியேற்றங்களில் இருந்ததுபோல, ஒரு வகை தன்னாட்சி அரசு இந்தியாவில் அமைக்க வேண்டுமென்றும் அதில் கூறப்பட்டிருந்தது. 1853-இல் கிழக்கிந்தியக் கம்பெனி, தன்னுடைய அமைப்பைப் புதுப்பிக்க இருந்தது. அந்தத் தக்க சமயத்தில் இந்தக் கோரிக்கை இன்னும் முக்கியத்துவம் பெற்றது.

வரலாற்று முறையில் காணின் இந்தியாவின் அரசியல் இயக்கம், அன்றைய நாளில் தொடக்க நிலையில் இருந்தது. எனினும், தேவேந் திரர் பலருள் ஒருவராய் இருந்து முன் செலுத்திய பிரிட்டிஷ் இந்தியச் சங்கம், தன்னுடைய நடவடிக்கைகளால் 1876-இல் ராஷ்ட்ரகுரு சுரேந்திரநாத பானர்ஜி துவக்கிய இந்தியச் சங்கமும் 1885-இல் இந்தியத் தேசிய காங்கிரசும் தோன்றக் கட்டியம் கூறியது.

1850 அல்லது 1851-ஆம் ஆண்டு வாக்கில் மகரிஷி 'ஆத்ம தத்துவ வித்யா' என்னும் தலைப்பில் ஒரு நூல் எழுதினார். அக்

காலத்தில் தாம் கொண்டிருந்த தத்துவச் சிந்தனைகளைக் குறிப்பிட்டிருந்தார். சங்கரர் மற்றும் வேதாந்தம் கூறும் அத்வைதக் கொள்கையை ஒரு புறத்தில் குறை கூறியும், இன்னொரு புறம் பிரபஞ்சக் கோட்பாடு பற்றித் தம் துவைதநிலையை வலியுறுத்தியும் எழுதினார். மாயை பற்றிய கொள்கைக்கு மாறாய் எழுதிய வகையில் சற்று நடு நிலை தவறியவராகக் கூட இருந்தார். அதனாலேயே அவருடைய கருத்துக்கள் ஒரு சார்புடையனவாகவே அமைந்திருக்கலாம். எனினும், இதை உணர்ந்தவுடன் மீண்டும் தம்முடைய பழைய நடுநிலைத் தன்மையைப் பெற்றார்.

தேவேந்திரர் இமயமலை நோக்கிச் சென்றதற்கான சூழ்நிலைகளையும் காரணங்களையும் முன்பே பார்த்தோம். காசிக்குச் செல்ல ஒருபடகை அமர்த்திக் கொண்டார். 3-10-1856-இல் கங்கையாற்றில் தம் பயணத்தைத் துவக்கினார். வழியில் நவதீபம், மாங்கிர், பாட்னா போன்ற இடங்களில் ஆங்காங்குத் தங்கிக் கொண்டு ஒன்றரை மாதத்திற்குப் பின்னால் காசியை அடைந்தார். காசியிலிருந்து ஆக்ராவிற்கு ஒரு வாடகை வண்டியில் சென்றார். தாஜ்மகாலைக் கண்டு அதன் அழகை வியந்தார். பின், சூழ்நிலைகளுக்குத் தக்கவாறு படகு, வண்டி, பல்லக்கு எனப் பயண முறைகளை மாற்றிக் கொண்டு மதுரை, பிருந்தாவனம், டெல்லி, அம்பாலா, லாகூர் முதலிய நகரங்கள் வழியாகப் பயணம் செய்து அமிர்தசரஸ் போய்ச் சேர்ந்தார். அவர் எங்குச் சென்றாலும் அந்த இடத்தின் முக்கியப் பகுதிகளைச் சுற்றிப் பார்த்தார்; துறவிகளுடனும் கற்றவர்களுடனும் ஆன்மீகத் தொடர்பான செய்திகள் பற்றிக் கலந்துரையாடினார். நாகேந்திர நாதர் தம்முடைய மூத்த அண்ணனைத் தேடி டெல்லிக்குப் போனார்; ஆனால் அவருடைய இருப்பிடம் பற்றிய அறிகுறி ஏதும் தெரியாது ஏமாற்றத்துடன் திரும்பினார். பின், இந்த இரண்டு உடன் பிறந்தாரிடையே எதிர்பார்த்த சந்திப்பு ஏற்படவேயில்லை; தேவேந்திரர் தம்முடைய பயணத்தை முடித்துக் கொண்டு வீட்டை நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தபோது, அவர் கல்கத்தாவை அடையும் முன்பே நாகேந்திரநாதர் இறந்து விட்டார்.

தேவேந்திரர் அமிர்தசரஸில் இரண்டு மாதம் தங்கினார். நாள் தோறும் அவர் பொற்கோயிலுக்குப் போனார்; அங்குக் கூடியிருந்த சீக்கியப் பக்தர்களுடன் தாமும் வழிபாட்டில் கலந்து கொண்டார். அவர், குருநானக்கையும், அவருடைய வழிபாட்டுப் பாடல்களையும் விரும்புவதைக் கண்டு சீக்கியர் தேவேந்திரர் மீது அன்பு கொண்டனர். அவரும் அவர்களுடைய சமய உறுதிப்பாடு கண்டு அவர்களுடன் கலந்து பழக விரும்பினார்.

28-4-1857-ஆம் நாள், சிம்லா மலைக்குச் சென்று சிம்லாவில் ஓராண்டும் எட்டு மாதமும் தங்கியிருந்தார். அங்கு அவர் தங்கி யிருந்தபோது சிப்பாய்க் கலகம் நடந்தது. ஒரு சமயத்தில் சிம்லா வைப் புரட்சிக்காரச் சீக்கியர்கள் கைப்பற்றி விடுவார்கள் போலத் தோன்றியது. அப்படி ஏதும் நடக்கவில்லை; தேவேந்திரருக்கு எந்த இடையூறும் ஏற்படவில்லை. அவர் ஓய்விலும் அமைதியிலும் இமயத்தின் கம்பீரமிக்க பேரழகில் மூழ்குவதிலுமாக நாட்களைக் கழித்தார். அவர் தியானம்—வழிபாடு—இடையிடையே குறிப்பிட்ட நேரங்களில் சமயமும் தத்துவமும் இணைந்த நூல்களை ஆழ்ந்து கற்றல் என்ற முறையில் வகுத்துக்கொண்டு காலத்தைச் செல விட்டார். மலை முகடுகளில் தனிமையில் அவர் வாழ்ந்த இந்தக் காலத்தில் உருதுக் கவிஞர் ஹாபிஸ் அவர்களின் எழுத்துக்கள் அவருக்குத் தோன்றாத் துணையாய் இருந்தன. 'திவான்' என்ற அவருடைய நூலில் வரும் பல பாடல்களை அவர் ஓயாது பாடிக் கொண்டிருந்தார்.

நீரூற்றென அருட்கிளர்ச்சி கொப்பளிக்கும் ஹாபிஸ் அவர்களின் நூல்களில் மீண்டும் மீண்டும் மூழ்குமாறு அவருடைய உள்ளுந்தல் அதனால் வற்புறுத்தியிருக்கலாம். பரம்பொருள் பற்றி உபநிஷத்துக் களில் புலப்படுத்தப் பட்டிருந்த அமைதியான, தெளிவான ஞான நிலைக் காட்சி தன்னளவில் நிறைவடைவதில்லை; அது இறை வனுடன் காதல் வெள்ளத்தில் தம் வயமிழக்கும் பரவச உணர்வால் ஒன்றும் போதுதான் நிறைவடையும். ஹாபிஸ் அவர்களின் அருட் பாடல்கள் இந்தப் பரவச நிலையைத் தோற்றுவித்தன. வங்காள அறிஞர்களுள், புகழ்பெற்ற இந்தப் பாரசீகக் கவிஞரின் பாடல்களைச் சுவைத்த தேவேந்திரரைவிடப் பெரிய ரசிகர் இன்னொருவரைக் காண இயலாது.

இமயமலையின் மீது இயற்கையின் மடியில் அவர் இருந்த காலத் தில் அவர் எப்படி வாழ்ந்தார் என்பது பற்றி விளக்கமாக ஒன்றும் சொல்ல இயலவில்லை. பனி மூடிய மலைச் சரிவுகளில், அமைதியும் அழகும் குடிகொண்ட இடங்களைத் தேடி அலைந்து கொண்டிருந்த போது, அவர் சென்ற இடங்கள் இவையிவை என ஒவ்வொன்றைப் பற்றி அறிவது தேவையில்லை எனினும், இயற்கை பற்றிய அவர் கருத்து என்ன — ஒரு கவிஞனின் அழகுணர்ச்சியோடு அவர் அதனுடைய காட்சி வனப்புகளைக் கண்டு துய்த்த அனுபவம் எது— தம்மைச் சுற்றியிருந்த நிலப்பரப்பின் கண்கவர் தோற்றத்தில் தாம் பெற்ற இன்ப உணர்வையும். விழுப்பத்தையும் மிக அழகாக அவர் வெளிப்படுத்தியிருக்கும் தன்மை உரைநடையே யாயினும் வடிவம், வண்ணம் வளமான கற்பனை இவற்றைக் கலந்து எழுதியிருக்கும்

அவருடைய மொழிவன்மை—ஆகியவற்றைப் பற்றிச் சொல்லாது விடின் அவருடைய இந்தப் பயணத்தைப் பற்றிய விளக்கம் முழுமையுருது.

அவர் ஒரு ஒப்புயர்வற்ற கலைஞர். தம்முடைய ஆளுமையில் இந்தத் தன்மை புற உலகிற்கு இன்னும் அதிகமாகத் தெரியுமளவு அவர் தம் வாழ்க்கையில் எழுதாமல் விட்டது இரக்கத்துக்குரிய ஒன்று. சமயம் மற்றும் தத்துவத்துடன் அவர் அதிகமாக ஒன்றிப் போயிருந்தமை அவருடைய கலையுணர்வுப் பகுதியை உணர்வின் பின்புறத்துக்கு அமுக்கித் தள்ளிவிட்ட்து ; இமயமலையில் போதிய ஓய்விலும் அமைதியிலும் தோய்ந்து நின்றபோதே, அவருள் உறங்கிக் கிடந்திருந்த கலை வடிவத்தைத் தம்முடைய கவனத்தின் மையத்திற்குக் கொண்டு வர முடிந்தது. அவரைச் சுற்றியிருந்த பேரழகும் சாந்த நிலையும் அவருடைய கலையுணர்வைக் கூர்மைப் படுத்துவதில் பங்கு பற்றின ; அதனாலேயே அக்கலை அவரிடம் தனக்குரிய புகழைக்கோரிப் பெற்றது.

அவருடைய சுயசரிதையில், தம்முடைய இமயமலைப் பயணம் பற்றிக் குறிப்பாகச் சிம்லாவுக்குச் சுமார் 64 மைல் தொலைவில் இருக்கும் செங்குத்தான சங்கரி மலைச் சிகரத்தில் ஏறிய தம் அனுபவம் குறித்து எழுதியுள்ள சில பகுதிகள் பின் வருவன. அவருடைய வருணனையில் வரும் அழகுமிக்க முருகியலுணர்வு முழுவதும் இந்த எளிய மொழி பெயர்ப்பில் வெளிப்படுமா என்பது ஐயமே.

"வெள்ளை, சிகப்பு, மஞ்சள், நீலம் மற்றும் பொன்னிறம் எனப் பல்வேறு வண்ணங்களில் அழகு மலர்கள் எல்லாத் திசையிலும் இருந்து என்னை ஈர்த்தன. அவற்றின் அழகும் மென்மையும், கலப்பில்லாத் தூய்மையும் தூய தனிப் பரம்பொருளின் இருப்பால் உயிரூட்டப்பட்டன என்னும் நினைவைத் தோற்றுவித்தன. அந்த மலர்களில் அழகிருந்த அளவிற்கு மணமில்லை ; எனினும் இன்னொரு வகைப்பூவும் அங்கிருந்தது. வெள்ளை ரோஜாவின் ஒரு வகை ; காடு முழுவதும் மலர்ந்து, சுற்றுப்புறப் பகுதிகள் எல்லாவற்றிலும் கிளைகளைப் பரப்பித் தன்னுடைய இனிய மணத்தால் கமழச் செய்தது. சில இடங்களில் மல்லிகைகள் பூத்துக் குலுங்கி மணத்தைப் பரப்பின. இங்குமங்குமாய்ச் சிறிய கருநாவற் பழங்கள் ரத்தச் சிவப்பான நிறத்தில் தாமரைத் துணுக்குகள் போலப் பரவியிருந்தன. என்னோடு வந்த வேலையாள் காட்டுக் கொடி ஒன்றிலிருந்து பறித்த பூக்களுள் ஒன்றை என் கையில் தந்தான். என் வாழ்நாளில் அது போன்ற அழகான மலர்க்கொடியைப் பார்த்ததே இல்லை. என் கண்கள் அவற்றின் அழகைப் பருக, என் நெஞ்சமோ விரிந்து

மலர்ந்தது. அந்த மிகச் சிறிய வெள்ளைப் பூக்குவியல்மீது இயற்கை அன்னையின் அருட்கரம் படர்ந்திருப்பது போலத் தோன்றிற்று. இந்தக் காடுகளில் இந்தப் பூக்களின் நறுமணத்தை யாரே நுகர்வார்? அவற்றின் அழகைத் தான் காண அங்கு யாரே உள்ளார்? எனினும், நறுமணத்தையும் அழகையும் குழைத்து, பனித்துளிகளால் மென்மைப்படுத்தி எவ்வளவு விழிப்பாகவும் பரிவுடனும் இறைவன் இந்தக் கொடிகளை அலங்கரிக்கிருன்! இது, என் நெஞ்சுள் இறைவனின் என்றுமுள பேரருளையும் அன்பையும் தூண்டிவிட்டன. ஓ என் இறைவா! இந்த மிகச் சிறிய பூக்களின்மீது நீ இவ்வளவு பரிவு கொண்டாயானுல், எங்கள்மீது இதைவிடப் பெரிய பரிவைக் கொண்டிருப்பாயே!"

அதே அத்தியாயத்தில் சங்கரி மலைச்சிகரத்திலிருந்து அவர் இறங்கி வந்ததைக் கீழ்வரும் பகுதியில் வருணித்துள்ளார். "இந்த மலைக் காட்டில் கூம்பு வடிவத் தேவதாரு மரங்களே நிறைந்துள்ளன. இல்லை-அதைக் காடு என்று சொல்லக்கூடாது; அது ஒரு பூந்தோட்டத்தைவிடவும் அழகாக உள்ளது. தேவதாரு மரம் பிர் மரத்தைப்போல உயரமாகவும் செங்குத்தாகவும் வளர்ந்துள்ளது. அதன் கிளைகள் மரத்தின் மேலுயரம் அளவிற்குப் பரந்துள்ளன. இலைகள், பிர் மரத்தில் இருப்பன போன்றே, அடர்த்தியாய் ஒவ்வொன்றும் ஒரு ஊசியைப்போன்ற நீளமேயுடையதாய் மரத்தை அலங்கரிக்கின்றன; இலைகளால் நிறைந்திருக்கும் கிளைகள் ஒரு பெரிய பறவையின் சிறகுகள்போல விரிந்து குளிர்காலத்தில் விழுகின்ற பனியின் பெருஞ்சுமையைத் தாங்குகின்றன; ஆனுலும், இதன் விளைவாய் அந்த இலைகள் சுருங்குவதோ வாடுவதோ இல்லை; மாருக இன்னும் புதுமை பெற்று தங்கள் பசுமையைக் கொஞ்சமும் இழக்காமல் இருக்கின்றன. இது ஒரு விந்தையில்லையா? இறைவனின் எந்தச் செயல்தான் விந்தையில்லை! இந்த மரங்கள் படைவீரர்களைப்போல வரிசையாக மலைச் சரிவின் கீழிருந்து அதன் உச்சி வரை பணிவுடன் இருபுடையும் நின்று கொண்டிருக்கின்றன. மனிதன் செயற்கையாக அமைக்கும் ஒரு பூந்தோட்டத்தில் அத்தகைய காட்சியின் பெருமிதமும் அழகும் இருக்க முடியுமா என்ன?"

மகரிஷியின் கவிதை நடையில் மிளிரும் உரை நடைக்கு இன்னும் ஒரே ஒரு சான்று பின் வருவது. இதுவும் அவருடைய சுயசரிதையில் உள்ளதே; எனினும் சமவெளியில் அமிர்தசரஸில் வாழ்ந்தபோது எழுதப்பட்ட பகுதி:

"அமிர்தசரஸில் ராம்பகனுக்கு அருகில் நான் எடுத்துக் கொண்ட வீடு இடிபாடுடையதாய் இருந்தது. அதன் தோட்டம்

நன்கு பேணப்படாததால் மரங்கள் தாறுமாருய் ஒழுங்கற்று ஒரு வகை மலைக்காடு போலவே இருந்தது. ஆனுல் என்னிடமிருந்த புத்துணர்வு, நான் பெற்ற புதுக் கண்கள், ஒவ்வொன்றிலும் புதுமையையும் அழகையும் காணத் தொடங்கின. விடியற்காலையில், கதிரவன் எழும்போது அந்தத் தோட்டத்தில் உலா வந்தேன். அப்போது வெள்ளை, மஞ்சள், இளஞ்சிவப்பு வண்ணங்களில் பூக்கள் கண்ணீரைப் பனித்துளிகளாகச் சிந்தின ; அப்போது வெள்ளிய பொன்னிறப் பசும்புல்லின் பூக்கள் தோட்ட மண்ணின் பரப்பில் பூவேலைப் பாடுகொண்ட பச்சை மெத்தைபோல, அழகை விரித்தன ; அப்போது சுவர்க்கத்தின் மென்காற்று பூந்தோட்டத்துத் தேனை எடுத்துச்சென்றது ; அப்போது தொலைவில் பஞ்சாபியர் பாடும் இனிய பாடல்களின் ஓசை தோட்டத்தில் நுழைந்து பரவியது ; அப்போது அந்தத் தோட்டம் கந்தர்வர்கள் நிரம்பிய தேவலோகம்போலவே எனக்குக்காட்சியளித்தது. சில நாட்களில் அருகிலிருக்கும் காடுகளில் மயில்கள் பறந்து வந்து, என்னுடைய கீழ்ப்பகுதியறையின் கூரைமேல் அமர்ந்து, பல்வேறு அழகு வண்ணங்களையுடைய நீண்ட தோகைகள் கதிரொளியால் பளிச்சிடுமாறும் நிலத்தில் படியுமாறும் தங்கியிருந்தன. சில சமயம் கூரையை விட்டிறங்கித் தோட்டத்தில் அவை சுற்றித்திரிந்தன. ஒரு நாள் வானத்தில் மேகங்கள் கூடின. ஓ! என்ன பேரெழில்! இந்த மயில்கள் தங்கள் தோகைகளைத் தலைக்கு மேலே விரித்து நடனமாடத்தொடங்கின. எத்தகைய வியப்புமிக்க காட்சி அது! யாழ் எடுத்து என்னுல் வாசிக்க முடிந்திருந்தால், அந்த ஆடலின் தாளத்திற்கு ஏற்ப அதன் நரம்புகளை மீட்டியிருப்பேன். வானில் மேகங்கள் திரண்டு வருவதைக் கண்டவுடன் மயில்கள் மகிழ்ச்சிப் பூரிப்பால் நடமாடும் என்று கவிஞர் சொன்னது மெய்தான் என்பதைக் கண்டேன். இது அவர்கள் அறிவால் செய்த கற்பனையன்று என்பதையுணர்ந்தேன் ''

7. பிரம்ம சமாஜ இயக்கத்தில் பிளவு

தேவேந்திரர் 15-11-1858-இல் இமயமலையிலிருந்து திரும்பி வந்தார். அவருடைய சுயசரிதை இத்துடன் முடிந்துவிடுகிறது. அப்போது அவருக்கு வயது நாற்பத்தொன்று மட்டுமே. அதற்குப் பின்னுல் அவர் இந்த மண்ணில் 47 ஆண்டுகள் வாழ்ந்திருந்தார்.

இந்தப் பிற்பகுதிக் காலம் முக்கியத்துவமற்றதன்று; எனினும் அவருடைய பின்பகுதி வாழ்வுபற்றி அவர் எதுவும் எழுதவில்லை. இமயமலையிலிருந்து திரும்பியவுடன் அவர் சுயசரிதை எழுதவில்லை. வாழ்வின் இறுதிக் காலத்தில் தான் எழுதினார். அவருடன் துணைவ ராக இறுதிவரை இருந்த பண்டிட் பிரியநாத சாஸ்திரி எழுத, தேவேந்திரர் பெரும்பான்மையான அத்தியாயங்களைச் சொல்லி யிருக்கிறார். பண்டிதர் அவர் சொன்னதுபோலவே எழுதியிருக்கிறார்.

எனின், அவருடைய வாழ்க்கை வரலாற்றில் ஒரு நீண்ட இடை வெளியை நிரப்பாமல் விட்டிருப்பதற்குக் காரணமென்ன ? நாம் சில யூகங்களைத் துணிந்து கூறலாம்.

இந்த அமைதிக்கு இரண்டு காரணங்களை யூகிக்கலாம். முதலில், தம்முடைய நீண்ட மலைப்பயணத்தை முடித்துக் கொண்டு கல்கத்தாவுககுத் திரும்பியவுடன், தாம் இல்லாதிருந்த காலத்தில் முற்றிலும் மாறிவிட்ட பிரம்ம சமாஜத்தைக் கண்டார். அதனுடைய நடவடிக்கைகள் புத்துயிர் பெற்றிருந்தன என்பதற்கான அறிகுறி களைத் தம் கூர்த்த மதியால் அறிந்தார். அதனுடைய இயக்கத்தில் புதியவர் பலர் சேர்ந்திருந்தனர். கேசவசந்திர சென் அவர்களின் தலைமையின் கீழ் ஆர்வமிக்க வலுவான இளைஞர் கூட்டமொன்று சமாஜத்தின் நிகழ்ச்சிகளில் மிக்க உற்சாகத்துடன் ஈடுபட்டிருந்தது. சமாஜத்தின் இயக்க காலம் முழுவதிலும் இதுவரை காணாத அளவு முன்னேற்ற உணர்வுடன் அவர்கள் தீவிரத் தொண்டாற்றினர்.

கேசவசந்திர சென் சமயத்தின் மீது பற்றுக் கொண்ட ஒரு சாதாரண இளைஞரல்லர். ஆனால் அவருக்கியைந்த சமயமும் சமூகமும் இணைந்த எத்தகைய சீர்திருத்தம் ஆயினும் அதை ஏற்றுத் திறம்பட நடத்தக் கூடிய அளப்பரிய ஆற்றலை இயற்கையாகவே பெற்றிருந்தவர். தேவேந்திரரைப் போலவே அவரும் தெய்வப் பித்தேறிய ஆன்மாவினர்: எனினும் இருவருக்குமிடையே ஒரு வேறுபாடு உண்டு. கிறித்துவ மதக் கோட்பாடுகளில் தீவிரப்பற்றுக் கொண்டு, ஏசு பெருமானைத் தம் வாழ்வின் பெரிய லட்சியமாகக் கொண்டவர் கேசவர். பாவம் பற்றிய கிறித்துவக் கொள்கையை ஐயமற நம்பிய அவர், அதைப் பிரம்ம சமாஜத்தைச் சேர்ந்த புதிய பழைய உறுப் பினர்களிடையே புகுத்த விரும்பினார். கேசவசந்திரர் பிறரைத் தம்பால் கவர்ந்தீர்க்கும் காந்த சக்தி ஆளுமை படைத்தவர். எனவே அவர்பால் இளைஞர்கள்—குறிப்பாகக் கல்லூரி மாணவர் பெருமள வில் சேர்ந்தனர். இந்தக் கவர்ச்சியுடன் அவருடைய அழகான பேச்சுத்திறமையும் கூடி வலிமையூட்டியது. 1850-1869 காலப் பகுதியில் வங்காளத்தில் அரசியலுலகில் புகழ்பெற்ற ராம்கோபால்

கோஷ் என்பாரைத் தவிர கேசவரைவிடச் சிறந்த பேச்சாளரைக் காண்பதற்கியலாது.

தேவேந்திரர், கேசவசந்திரரையும் அவருடைய புதிய இளம் பக்தர்கள் கூட்டத்தையும் நிறைந்த நெஞ்சுடன் பிரம்மசமாஜ இயக்கத்துக்குள் வரவேற்ருர். கேசவசந்திரரின் தலைமைப் பண்புகளின் மீது அவருக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது. எனவே அவருடைய திறன் வாய்ந்த வழிகாட்டுதலால், தாம் போற்றி வளர்த்த பிரம்மசமாஜம்—எதற்காகப் பல துன்பங்களை ஏற்ருரோ அந்த இயக்கம்—மிக விரைவாகப் பன்மடங்கு பெருகி வளர்ந்து குறைந்த காலத்திற்குள்ளேயே ஒரு வலிமைமிக்க நிறுவனமாக மாறும் என்று நம்பினுர். சமாஜத்தைப் பற்றிய எதிர்பார்ப்புகள் மட்டுமன்றிக் கேசவர்பால் அவருக்குத் தனிப்பட்ட அன்பும் தோன்றியிருந்தது; அதைப் பல வழிகளிலும் வெளிப்படுத்தியிருக்கிருர். பிரம்ம சமாஜத்தின் பெரும்பகுதிப் பணியை—குறிப்பாகப் பிரச்சாரப் பகுதியை—இளம் கேசவர் மற்றும் அவர் தொண்டர்கள் கையில் ஒப்படைத்தார். அதற்கு மேலும் நிறுவனத்தின் பல மூத்த உறுப்பினர்கள் கடுமையான எதிர்ப்புக்கிடையே இளைய வயதுடையராயிருந்த அவரைச் சமயப் பிரச்சார அமைச்சராகவும் ஆக்கினுர்.

பிரம்மசமாஜ வரலாற்றில் இந்தக் காலப் பகுதியில் தேவேந்திரர் கேசவசந்திரருக்கும் அவருடைய இளங்கூட்டத்துக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்திருந்தார் என்று சான்றுகளிலிருந்து அறிகிரும். சமூகத் தொண்டு புரிவதிலும் சமயச் சீர்திருத்தம் செய்வதிலும் புதுப்புதுக் கருத்துக்களால் துடிப்பு பெற்றிருந்த அந்த ஆர்வமிக்க இளைஞர் கூட்டத்தை அவர் அகமகிழ வரவேற்ருர். ஆனுல் இரண்டு குழுக்களுக்குமிடையே நிலவி வந்த தோழமை அன்புணர்வு நீண்ட நாட்களுக்கு நீடிக்கவில்லை. தவிர்க்கமுடியாத அந்த மோதல் நடந்தே விட்டது.

பல இடங்களில் நிகழ்வதுபோலவே, பழமைவாதிகளுக்கும் புதுமை விரும்பிகளுக்குமிடையே நடக்கும் மோதலாக இங்கும் நடந்தது. மாறுபட்ட இரு சாரருக்குமிடையே நடந்த பூசலில் வயதே தெளிவான காரணியாக (factor) இருந்தது. மூத்த வயதினர் மெதுவான இயக்கத்தை விரும்ப, இளைஞரோ மாற்றம் வேண்டுமெனத் துடித்தனர். உணர்ச்சி வேறுபாடுகள் அடிப்படையாக இதிலிருந்தே கிளம்பின. சமாஜத்தைச் சேர்ந்த ஆட்சிக்குழு உறுப்பினர்கள் பூணூல் அணிவது பற்றியதிலிருந்து பூசல் துவங்கியது. பின்பு ஒன்றின் பின் ஒன்ருக அவை தொடர்ந்தன. கூட்டு வழிபாடுகளில் பிரம்மசமாஜ உறுப்பினர்களின் குடும்பங்களைச் சேர்த்துக் கொள்ளலாம் என்ற தீர்மானத்தை ஏற்பதா வேண்டாமா,

பெண்கல்வி, கைம்பெண் திருமணம், கலப்புத்திருமணம், ' இந்தியன் மிர்ரர் ' என்னும் பத்திரிகைமீது உரிமைபற்றிய பிணக்கு எனப் பல சிக்கல்கள் வந்தன. வருந்தத்தக்க இந்தச் செய்திகளைப் பற்றிய விளக்கங்கள் இந்த நூலின் மையக் கருத்துக்குப் பொருந்தாதவை.

எனினும் 1864-ஆம் ஆண்டின்போது ஏற்கெனவே ஏற்பட்டிருந்த விரிசல்கள் பெரிதாகி வெளிப்படையாகவே புலப்பட்டன. நிறுவனத்தின் நற்பெயர் பெருமளவு பாதிக்கப்பட்டது. அதைப் பற்றிய கதை துயரமிக்கதொன்று. மூத்த வயதுடைய குழுவைச் சார்ந்து தேவேந்திரர், அயோத்யநாதர், பக்ரஷி, பசாரம் சட்டர்ஜி, ராஜ்நாராயணன் போஸ் ஆகியோரும் பிறரும் நின்றனர். இளைஞர்கள் குழுவைச் சார்ந்த பிடிவாத குணமிக்க தீவிரவாதிகளான கேசவசந்திரர், பாய் பிரதாப சந்திரமஜூம்தார், விஜய கிருஷ்ண கோஸ்வாமி, பாய் கௌர் கோவிந்த ராய் உபாத்யாயா, அகோரநாத குப்தா ஆகியோரும் பிறரும் இருந்தனர். இரு சாராருக்கும் இடையே இருந்த வேறுபாடுகளைத் தீர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்படாமல் இல்லை; ஆனாலும் இரு கட்சியும் இணையும் நம்பிக்கை கொஞ்சம் கொஞ்சமாக மங்கிக் கொண்டே வந்தது. முறைப்படி அவை இரண்டு கூறுகளாகப் பிரிந்து போகவில்லையென்றாலும், 1865-ஆம் ஆண்டில் ஒன்றின்மீது மற்றொன்று வன்மவுணர்வு கொண்டதாய் இரு சாராராலும் சமாஜம் பிளவுபட்டிருந்தது. இறுதியில் 1866-ஆம் ஆண்டிறுதியில், நீண்டகாலமாக அச்சுறுத்தி வந்த முறிவு – ஒன்று மாறி இன்னொன்று எனப் பல காரணங்களால் வேகம் தணிக்கப் பட்டு வந்த பிரிவு—நடந்தேவிட்டது. பிரம்ம சமாஜம் 1)ஆதி பிரம்மசமாஜம் 2) இந்தியப் பிரம்மசமாஜம் என இரண்டு பிரிவுகளாய்ப் பிளக்கப்பட்டது. இவ்வாறாக இந்தியாவில் பிரம்மசமாஜ இயக்கத்தின் ஒரு அத்தியாயம் முடிவுற இன்னொரு அத்தியாயம் துவங்கியது. இந்தச் சமயப் பிளவுபற்றி இன்னும் தெரிந்துகொள்ள விரும்புவோர், பண்டித சிவநாத சாஸ்திரி எழுதிய பிரம்மசமாஜத்தின் வரலாறு (முதல் தொகுதி) என்னும் நூலையும், அஜித்குமார் சக்கரவர்த்தி வங்காள மொழியில் எழுதிய மகரிஷி தேவேந்திரநாதரின் வாழ்க்கை வரலாற்று நூலையும் படிக்க வேண்டும். இந்நூலில் இதுபற்றி இதற்கு மேல் எழுதுவதற்கில்லை.

இரண்டு சாராருக்குமிடையே பூசல் நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்தில், இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட பத்திரிகைகளில் தேவேந்திரர் பழமைவாதி, சர்வாதிகாரி, உறவினருக்குத் தனிச் சலுகை காட்டியவர் என்றெல்லாம் கடுமையாகக் குற்றச் சாட்டுக்களைக் கூறி அவரை எதிர்க் கருத்தாளர்கள் வன்மையாகத் தாக்கினர். ஆனால் தேவேந்திரர் ஒரு முறை கூடப் பத்திரிகை

யாளரை அழைத்துத் தம்முடைய நிலையை விளக்கிக் குற்றச் சாட்டுக்களுக்குப் பதில் சொல்லியதில்லை.

பெருந்தன்மையுடனும் அமைதியுடனும் அவர் வாளாவிருந்தார். விருப்பு வெறுப்பற்ற ஒரு சமநிலைவாதிபோல அவர் தமக்கு வந்த துன்பங்களனைத்தையும் உள்ளத்துறுதியுடன் தாங்கிக் கொண்டார்; எல்லாருக்கும் நன்மையே விளையட்டும், தீமை யாருக்கும் வேண்டாம் என்பதே அவர் எண்ணமாயிருந்தது. துவக்கத்திலிருந்த தூய்மை நிலை மாரு மனிதராக அவர் இருந்ததை இது ஒன்றே காட்டும். இந்தியப் பிரம்ம சமாஜத்தாரால்—அவருக்கு எதிராகப் போர்க் கொடி உயர்த்தி எல்லா வகையான வெறுப்பையும் சிறிது காலம் முன்பு வெளிப்படையாகக் காட்டிய உறுப்பினர்களால் "மகரிஷி" என்ற பட்டம் அவருக்கு வறிதே வழங்கப்பட்டது அன்று; சமாஜத்தை விட்டுப் பிரிந்த ஓராண்டுக்குள்ளேயே (1867) எதிர்பாராத இந்நிகழ்ச்சி நடந்தது. கருத்துவேறுபாடுகளால் ஒருவர்க்கொருவரிடையே இருந்த அன்புணர்வில் பல நெருடல்கள், விரிசல்கள் (Stress and strain) ஏற்பட்டிருந்தபோதும். பிரம்ம சமாஜத்து இளஞ்சமயவாதிகள் தேவேந்திரர்பால் கொண்டிருந்த பயபக்திக்கும் மரியாதைக்கும் இது ஒரு நல்ல எடுத்துக்காட்டு ஆகும்.

தம்முடைய முந்தைய எதிர்க்கருத்தன்பர்கள் மீது தேவேந்திரர் கொண்டிருந்த அமைதி, ஆழ்ந்த பொருள் கொண்டது. தம்முடைய சுயசரிதையில் பிரம்மசமாஜத்தில் ஏற்பட்ட இந்தப் பிளவு பற்றி அவர் குறிப்பிடாது விட்டதற்கான காரணத்தை அவருடைய இந்த மௌன நோன்பிலிருந்தே அறியலாம். தம்முடைய சுயசரிதையை, பின்னல் எழுந்த பூசல் துவங்கும் கட்டத்திற்கு முன்பே நிறுத்தி விட்டார். தாம் பெற்ற பயிற்சியாலும், தம்மிடம் படிந்துவிட்ட இயற்கையாலும், தேவையற்ற விதத்தில் பிறரைக் குறைகூறுவதை அவர் வெறுத்தார்.

பிரம்மசமாஜத்தில் சமயப் பிளவு ஏற்பட்டதிலிருந்து மகரிஷி பொது வாழ்விலிருந்து விலகிவிட்டார் எனலாம். அவருடைய வாழ்வின் எஞ்சிய காலம்—முப்பது ஆண்டுகளுக்கும் மேலான நீண்ட காலம்—பயணங்கள் செல்லல், அமைதியான தியானம், நூல்களைக் கற்றல், எழுதுதல், பிரம்மசமாஜத்தினர் அழைத்தால் சென்று சொற்பொழிவாற்றல், ஓய்வு என இவ்வாறு கழிந்தது. அவருடைய வாழ்க்கையின் இறுதிப் பத்தாண்டுகளில் நோய்க்காளாகி இடைவிடாது வருந்தினர். அவருடைய வாழ்வு பற்றிச் சொல்ல இதற்கு மேல் ஏதுமில்லை. தம்முடைய சுய சரிதையில், தேவைக்கு அதிகமாகவே அவர், தம்முடைய உள்ளார்ந்த ஆன்மீக வாழ்வு பற்றியும்,

உள்மனப் போராட்டங்களின் ஐயங்கள், தயக்கங்கள் பற்றியும் இருளின் ஊடே துன்பப்பட்டு ஏறிய ஆன்மீகப் பயணத்தின் சுடர் விட்ட பல நிலைகளைப் பற்றியும், இறுதியில் பேரொளி ஒன்றே பகுதிக்குப் போய்ச் சேர்ந்தது பற்றியும் எழுதியிருக்கிறார். தன் னளவில் முழுமை பெற்றுவிட்ட ஒன்றுடன் இனி சேர்க்க ஒன்று மில்லை. ஓய்வு, அமைதி, ஓதல், தியானம், அடிக்கடி பயணங்கள் என நிறைவு பெற்ற ஒரு வாழ்வைப் பற்றி அதிகமாக விளக்கி எழுதுதல் இயலாததொன்று. எங்கு நின்றுவிட்டதோ அதோடு இனியும் தொடராமல் நிறுத்துவதே நல்லது.

8. இறுதி நாட்கள்

மகரிஷி தேவேந்திரரின் முப்பதாண்டுகளுக்கும் மேற்பட்ட இறுதிக் காலம் பயணம், தியானம், கல்வி, ஓய்வு எனும் வகைகளில் கழிந்தது என்பதை முன்பே கண்டோம். முதுமைக்கால ஓய்வை ஒவ்வொருவருந் தத்தம் சூழ்நிலைக்கேற்பவும், வசதிக்கேற்பவும் பல் வேறு வகைகளில் அமைத்துக்கொள்வர். மகரிஷியைப் பொறுத்த வரை, வாழ்வின் என்றுமழியாத நித்திய உண்மைகளைத் தம்முள்ளே தேடுவதிலும், தன்னுணர்வு ஞானம் பெறும் வேட்கையிலும் அப் பருவம் கழிந்தது. உள்ளே தொடர்ந்து இருந்த இந்த இயக்கத்தின் ஓரசைவுகூடப் புறத்தில் தென்படவில்லை. மகரிஷியின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய அஜித்குமார் சக்கரவர்த்தி எழுதியுள்ளதாவது: ‘‘அவருடைய இறுதி நாட்களின் வரலாற்றில் அவருடைய புற வாழ்வைப் பற்றிச் சொல்வது கடினம்; ஏனென்றால் அடிப்படையில் அது ஒரு உள்முக வரலாறு. அதில் சமுதாய வாழ்வின் ஒரு சிறு துளி கூட வருவதில்லை’’.

எனினும் முடிந்தவரை இந்தப் பிற்கால வரலாற்றையும் கணக் கில் கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் குறிக்கோளுடனும் பெருந்தன்மையுடனும் நீண்ட காலம் வாழ்ந்த ஒருவரின் பெருமித வாழ்வின் முழு வட்டம் நிறைவடையும். தோற்றப் பொலிவில் ஒரு கம்பீரமும், சித்திரப்பாட்டில் ஒரு எழிலுணர்வுமாக நிறைவுபெற்ற ஒரு ஓவியத்தின் இறுதிக் கீற்றுகளை யாரே தீட்ட முடியும்? இன்று வரை அது தீட்டப் பெறவில்லையே!

தேவேந்திரர் 1868-இல் முர்ரி குன்றுகளுக்குப் பயணம் செய்தார்; அங்கிருந்து காஷ்மீருக்குப் போனார். அந்தச் சமயத்தில் எழுதப்பட்ட பல கடிதங்களில் இந்தப் பயணம் பற்றிய விளக்கங்கள் அடங்கியுள்ளன. அங்கிருந்து திரும்பிக் கல்கத்தாவுக்கு வந்த ஓராண்டிற்குப் பின்னால், இமயமலைக்குச் சென்றார். இமயமலைச் சரிவுகளில் இடம் விட்டு இடம் ஒரு நாடோடிபோல் அவர் சென்று இறுதியில் தர்மசாலா எனும் இடத்தில் தங்கினார். சிறிது காலம் கழித்துத் திரும்பக் கல்கத்தா வந்தார். அந்தச் சமயத்தில் (1871-'72) ஏசுகிறிஸ்துவை வழிபாட்டுக்குரிய தெய்வமாக்க கேசவர் எடுத்துக் கொண்ட முயற்சி பற்றியும் 1872-ஆம் ஆண்டின் பிரம்மசமாஜத் திருமணச் சட்டம் பற்றியும் இந்தியப் பிரம்மசமாஜத்தைச் சேர்ந்த உறுப்பினர்களிடையே கடும் முரண்பாடுகள் நிலவின. தேவேந்திரர் பொது வாழ்விலிருந்து எல்லாவகையாகவும் ஒரு சிறிது தொடர்புமின்றி ஒதுங்கி இருந்தார். எனவே இந்தச் சிக்கல்கள் எதிலும் அகப்பட்டுக் கொள்ளாமல் இருக்கவும், சிக்கிக் கொண்டவற்றிலிருந்து எளிதில் விடுபடவும் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார்.

1873-இலிருந்து பத்துப் பன்னிரண்டாண்டுகளை மகரிஷி அண்மையிலும் தொலைவிலுமுள்ள இடங்களுக்குப் பயணம் செய்வதில் கழித்தார். 1873-இல் மூன்றும் முறையாக இமயமலை சென்றார். இந்தத் தடவை பன்னிரண்டு வயது நிரம்பிய தம் மகன் ரவீந்திரரையும் அழைத்துப் போனார். அதற்குச் சில நாட்கள் முன்தான் அச்சிறுவனுக்குப் பூணூல் சாற்றும் நோன்பு நடந்தது. மொட்டையடித்த தலையுடனும் காவி நிறத் துணியுடனும் அந்நிகழ்ச்சிக்காக ரவீந்திரர் இருந்த கோலம் காட்டில் முனிவர்கள் தவப்பள்ளியில் வாழும் ஒரு இளம் பிரம்மச்சாரியை நினைவூட்டியது. மகரிஷி தம் மகனிடம் அவனும் இமயமலைக்கு அவருடன் வரப்போகிறான் என்று சொல்லியவுடன் அவனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. ரவீந்திரர் தம்முடைய "நினைவுகள்" எனும் நூலில் தந்தையாருடன் சேர்ந்து தாம் சென்ற பயணம் பற்றியும், அப்போது பெருமைமிக்க தம் தந்தையாரிடம் தாம் கொண்டிருந்த அச்சம், மரியாதை பற்றியும் நகைச்சுவையுணர்வுடன் எழுதியுள்ளார்.

வழியில் அவர்கள் முதலில் போல்பூர் என்னுமிடத்தில் சில நாட்கள் தங்கினர். பின்பும் தாகூர் குடும்பத்தாருடன் அந்த இடம் மிக நெருங்கிய தொடர்புடையதாகையால், அதைப் பற்றி இங்கு கொஞ்சம் சிறப்பாகச் சொல்ல வேண்டும்.

கல்கத்தாவிலிருந்து 100 மைல் தொலைவிலிருந்து பிர்பம் மாவட்டத்தில் ஓரிடம் அந்த போல்பூர். 1863-இல் தேவேந்திரநாதர் இந்த இடத்தில் கொஞ்சம் நிலம் வாங்கினார்; இதுவே பின்னால் (1901)

ரவீந்திரநாத தாகூரால் புகழ் பெற்ற சாந்திநிகேதன் ஆசிரமமாக உருவாக்கப்பட்டது. நிலம் வாங்கிய பின்னணிக் கதை பின் வருமாறு :

தேவேந்திரர், பிர்பம் மாவட்டத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த ரெய்ப்பூர் ஜமீன்தார்களான சின்ஹாக்களின் வீட்டிற்கு அடிக்கடி போய் வருவதுண்டு. அப்படி ஒரு சமயத்தில், ரெய்ப்பூருக்குப் போல்பூர் வழியாகப் போய்க் கொண்டிருந்தபோது, போல்பூருக்கு அருகில் அங்குமிங்கும் மாந்தோப்புகள் உள்ள காடுகள் மண்டிய ஒரு பரந்த இடத்தைக் கண்டார். 'புவந்தங்கர் மடம்' என்று அந்த இடத்துக்குப் பெயர் ; இன்னும் அந்தப் பெயராலேயே அது வழங்கி வருகிறது. அக்காலத்தில் அங்குக் கொள்ளையடிப்போரும் கொலை காரர்களும் நிறைந்திருந்தனர். பகலில் கூட அதன் வழியாக மக்கள் பயணம் செய்ய அஞ்சினர். எனினும் நிலத்தின் அகன்ற பரப்பும், திறந்த வெளியும் மகரிஷியின் நெஞ்சை ஈர்த்தன ; 'சப்தர்பர்ணு' (chatim) மரம் ஒன்று தனியாக இருந்த இடத்துக்கு வந்தவுடன் பல்லக்கை நிறுத்தும்படி அவர் ஆணையிட்டார். அந்த மரத்தின் அடியில் அமர்ந்து தியானம் செய்தார். அவருடைய மனதுக்குப் பெரிய சாந்தியை நல்கியது. அந்த இடத்தை அவர் மிகவும் விரும்பினார் ; அந்த இடத்தை, சுமார் 20 பிகா (bighas) பரப்புடைய அந்த இடம் முழுதையும் அதன் உரிமையாளர்களான ரெய்ப்பூர் சின்ஹாக்களிடமிருந்து உடனே வாங்கிவிடுவதென அங்கேயே உறுதி பூண்டார்.

அதேபோல அந்த இடத்தை வாங்கி, அங்கு பிரம்மத்தைத் தனிமையில் வழிபட ஒரு கோயில் கட்டினார். இதற்கு 23 ஆண்டு களுக்குப் பிறகு 8-3-1886-இல் இந்த நிலம்பற்றிய ஒரு அறக்கட்டளை யைத் தேவேந்திரர் ஏற்படுத்தினார். அதை நடத்தும் பொறுப்பு மூன்று அறங்காவலரிடம் விடப்பட்டது. உருவற்ற பிரம்ம வழிபாடு செய்ய மட்டும் இந்த இடத்தில் ஒரு ஆசிரமம் கட்டுவதற்கு இதைப் பயன்படுத்த வேண்டும் என அந்தக் கட்டளையில் கூறியிருந்தார். அவருடைய அந்த ஆசை ஒரு குறையுமின்றி முழுதும் நிறை வேறியது. சாந்தம், சிவம், அத்வைதம் என்ற முப்பெரு நோக்குகளைக் கொண்டதாய் ரவீந்திரநாத தாகூரால் சாந்திநி கேதன், விசுவபாரதி, அனைத்து நாடுகள் பல்கலைக் கழகம் அங்கே பின்னாளில் எழும்பி மலர்ந்தது. பல்வேறு நாடுகளிலிருந்து வந்த மாணவர் கூட்டம் அங்குஒரே கூட்டில் தங்கியுள்ளது.

இதுவே போல்பூரில் சாந்திநிகேதன் ஆசிரமம் எழுந்த வரலா றுகும். மகரிஷி, ரவீந்திரநாதருடன் வடமேற்குப் பயணத்தைத் துவக்கி சாகேப் கஞ்ச், தான்பூர், அலகாபாத், கான்பூர் முதலிய

இடங்களில் தங்கிவிட்டு அமிர்தசரஸ் போய்ச் சேர்ந்தார். முந்தைய முறைகளில் நடந்தது போலவே, தேவேந்திரர் அடிக்கடி பொற் கோயிலுக்குச் சென்று, சீக்கியருடன் உடன் பிறந்தவர்போலப் பழகினர். அமிர்தசரஸிலிருந்து புறப்பட்டு டல்ஹௌசி சென்று, பக்ரோடா எனுமிடத்தில் தங்கினர். ரவீந்திரர் தம்முடைய 'நினைவுகள்' நூலில் இந்த இடம் பற்றி நிறையக் குறிப்பிட்டுள்ளார். பல மாதங்களுக்குப் பிறகு ரவீந்திரரை வீட்டிற்குத் திருப்பியனுப்பி விட்டு மகரிஷி மட்டும் பனி கவிந்த இமயமலைகளில் தம் பயணத் தைத் தொடர்ந்தார்.

1875 மார்ச்சில் தேவேந்திரரின் துணைவியார் திருமதி சாரதா தேவி காலமானர். மகரிஷி இமயமலையிலிருந்து திரும்பிய நேரம் அம்மையார் இறந்து கொண்டிருந்த காலமாகும். அவர் வருகை அவர் இறக்கும் நேரத்தில் அவரருகே இருக்க வாய்ப்பாயிற்று. பிரிவுத் துன்பம் அவரைப் பெரிதும் வாட்டியது; எனினும் புறத்தில் அதைக் காட்டிக் கொள்ளவில்லை. இறுதிச் சடங்குகள் முடிந்தவுடன் மறுபடியும் அவர் பக்ரோடா மலைமுடி சென்று இரண்டாண்டுகள் தங்கினர்; அவ்வப்போது கீழிறங்கி வந்ததுண்டு. 1877-இல், சாந்தி நிகேதனத்தில் சிறிது காலம் கழித்தபின்பு, தம் மருமகன் சாரதா பிரசாத் கங்கூலியுடன் சீனுவுக்குச் சென்றார். இந்தப் பயணம் பற்றிய குறிப்பு ஏதும் கிடைக்கவில்லை. அங்கிருந்து திரும்பியபோது நண்பர்க்கும் உறவினர்க்கும் நிறையப் பரிசுகள் வாங்கி வந்தார்.

இவ்வாருகக் கல்கத்தாவில் தொடர்ந்திராமல் அவருடைய பிற் காலம் இங்குச் சில நாள், அங்குச் சில நாள் என்று கழிந்தது. முசௌரியில் சிறிதுகாலம் இருந்தார். இந்தப் பயணத்தில் அவருடன் பண்டிட் பிரியநாத சாஸ்திரி சென்றிருந்தார். தியானம், வழிபாடு எனத் தம்முடைய நாளை முழுதும் கழித்த தேவேந்திரர் அடிக்கடி ஹாபிஸ் பாடல்களைப் பாடியதாக சாஸ்திரியார் குறிப்பிட் டிருக்கிருர்.

1880-க்கும் 1889-க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் தேவேந்திரர் உடல் நலம் வேகமாகக் குன்றியது. இழந்த நலத்தைப் பெறுவதற் காக அவர் சின்சுரா எனுமிடத்திற்குச் சென்று சிறிது காலம் தங்கி, பின் பம்பாய்க் கடற்கரைப் பகுதிக்குப்போய் சிறிது காலம் கழித்தார். பின்பு மீண்டும் சின்சுரா திரும்பி, அங்கிருந்து டார்ஜிலிங் சென்ருர். எனினும் அவர் உடல் நலத்தில் எத்தகைய முன்னேற்றமும் இல்லை.

அவர் வாழ்வின் இறுதிப் பத்தாண்டுகள், கல்கத்தாவில், பூங்கா வீதியில் ஒரு வாடகை வீட்டில் மெள்ளத் தேய்ந்து வந்த

உடல் நலத்துடன் கழிந்தன. அவருடைய பெரும்பகுதி நேரம் அமைதியான தியானத்திலும் வழிபாட்டிலும் செலவாயிற்று. அச் சமயத்தில் அவருடனிருந்து பேணிய அவருடைய மகள் திருமதி சௌதாமினி தேவி தம்முடைய நினைவிலிருந்து எழுதியவை பின் வருவன :

" தந்தையார் காலையிலிருந்து அந்தி சாயும் வரை சோபாவில் அமர்ந்த நிலையிலேயே இருந்து தியானத்தில் மூழ்கி விடுவார். குளிக்கும் நேரமும் உண்ணும் நேரமும் தவிர மற்ற நேரம் முழுதும் இறைவனைப் பற்றி எண்ணுவதிலேயே கழியும். தேவையான காரணங்களுக்காகச் சில சமயம் அவரை நெருங்கி நாங்கள் பேச்சுக் கொடுத்தபோது தூக்கிவாரிப் போட்டதுபோல " நான் எங்கிருந்தேன் ? என்னை எங்குக் கொண்டு போனீர்கள் ? " என்று கேட்பார். அவரைத் தொல்லைப் படுத்தி விட்டோமே என உள்ளத்தால் வருந்தினோம். "

அச்சமயத்தில் அவருடைய புதல்வர்களுள் ரவீந்திரநாதர் அவரிடம் அணுக்கமாக விருந்தார். தாம் செயலாளராக விருந்த ஆதிப் பிரம்ம சமாஜத்தை எப்படி நடத்துவது என்று தம் தந்தை யாரிடம் அடிக்கடி அறிவுரையும் வழிகாட்டுதலும் பெற்று வந்தார்.

பிரம்மசமாஜத்தின் தலைவர்கள்—அவர்கள் பிரம்ம சமாஜத்தின் மூன்று பிரிவுகளில் எப்பிரிவைச் சார்ந்தவராயினும்—(பிரம்மசமாஜம் அந்தச் சமயத்தில் ஆதிப் பிரம்மசமாஜம், சதாரன், நவவிதான் சமாஜம் எனப் பிரிந்திருந்தது.) அவ்வப்போது மதிப்புக்குரிய முது பெரும் சான்றோராகிய தேவேந்திரரைக் கண்டும், அவர் உடல் நலம் பற்றிக் கேட்டும், ஆசிகள் பெற்றும் சென்றார்கள். பிரம்ம சமாஜ இயக்கத்தின் தந்தை என்று எல்லாராலும் ஒப்புக்கொள்ளப் பட்டவரின் முன்னால், அவர்களுக்கிடையே இருந்து வந்த மனவேறு பாடுகளும், போட்டியுணர்வும் மங்கின. அவரைக் காண ராஜ் நாராயண் போஸ், சிவநாத சாஸ்திரி, உமேஷ் சந்திர தத்தர், விபின் சந்திரபால், சுரேந்திரநாத பானர்ஜி, ஆனந்தமோகன் போஸ் இன்னும் இவர்களைப் போன்றோர் வந்தனர். கேசவசந்திர சென் முன்பே காலமாகிவிட்டார்.

மகரிஷி தம் இறுதி நாட்களில் வீட்டிலிருந்து விலகி, தமக்கு மிகப் பிடித்தமான கோட்பாட்டோடு உலகப் பற்றுகளை நீத்து தனிமையான ஓரிடத்தில் வழிபாட்டிலும் தியானத்திலும் ஈடுபட்டு ஒரு முதிய துறவியாக வாழ்ந்தார். பிறப்பிலிருந்து இறப்புவரை, பழங்கால முனிவர்கள், இந்துக்களின் வாழ்வில் நான்கு படி நிலைகள் கொண்ட வருணாச்சிரம நெறியை வகுத்தனர். அந்நெறியில்

இறுதியான படி நிலையில் அவர் இருந்தார். ஆனால் அவருடைய உடல் நலம் மிகவும் சீர்கேடடைந்து வந்ததால், அவரைப் பிற இடங்களில் வைத்திராமல் பூர்விக வீடாகிய ஜொரசங்கோ தாகூர் பாடிக்குக் கொண்டு வந்தார்கள். இங்கு அவருடைய இறுதி மூச்சு 19-1-1905-அன்று நின்றுவிட்டது. எண்பது ஆண்டுகளுக்கு மேலும் நீடித்து இருந்த ஒரு பெருமகனாரின் வாழ்வு, வாழ்ந்த விதத்திலும் கொண்ட நோக்கிலும் செம்மாந்து நின்ற ஒரு வாழ்வு; தம் நாட்டு மக்களுக்குத் தொண்டு புரிந்ததன் மூலமே ஆண்டவன் அருளில் மூழ்கிய வாழ்வு இவ்வாறு முற்றுப் பெற்று முழுமை எய்தியது.

9. இலக்கிய மதிப்பீடு

தேவேந்திரருடைய எழுத்துக்களிலமைந்துள்ள இலக்கியப் பண்புகள் பற்றிப் போதுமான அளவு வலியுறுத்தப்படவில்லை. அவை பெற்றிருக்கும் வளமான சமய நோக்கு, கலையுணர்வு பூர்வமாய் அவற்றை மதிப்பிடுவதைத் தடை செய்கிறது. ஞானியாகிய தேவேந்திரர் உண்மையில் எழுத்தாளரான வேறுவகை தேவேந்திரரை மறைக்கிறார். வங்க மக்களின் நோக்கு அவரை இறையுணர்வாளர், சமய முனைவர் தத்துவவாதி என்றே பார்த்துக் பழக்கப் பட்டிருந்தது இந்த வகைளில் எல்லாம் அவர் தம் நாட்டு மக்களுக்குத் தம் மிகச் சிறந்தவற்றைத் தந்துள்ளார் என அறியப் பெற்றிருந்தார். பண்டிட் சிவநாத சாஸ்திரியார் கூற்றுப்படி, "இந்த நாட்டில் தோன்றிய மிகப் பெரிய சமய மேதைகளில் மகரிஷி தேவேந்திரநாத தாகூரும் ஒருவர். பழங்காலத்து ரிஷி பரம்பரையில் வந்தவர் என்றே அவரைச் சொல்லலாம்." இந்தக் கருத்து முற்றிலும் பொருத்தமானது. ஆனால், அவருடைய சமய ஆளுமையை வலியுறுத்திப் பேசும்போது அவருடைய இன்னொரு ஆளுமை போற்றப்படாமலே போகிறது என்பதே இரக்கத்துக்குரியது. அது அவருடைய இலக்கிய ஆளுமையாம்.

வங்காள இலக்கியத்தைப் படிப்பவர்க்கு வங்க மொழி உரை நடை முன்னோடிகளாக நினைவுக்கு வருபவர்கள் ராம்மோகன் ராய் ஈசுவர சந்திர வித்யாசாகர், அட்சயகுமார் தத்தர், பூதேவ

முகர்ஜி ஆகியோரும் இவர்களைப் போன்ற இன்னும் ஓரிருவரு மாவார். அவர்கள் வங்க உரைநடை தோன்றிய ஆதிப்பருவத்தின் படைப்பாளிகள் என்பதில் ஐயமில்லை. எனினும், கலைநோக்கில் நடையை அளவுகோலாக வைத்து மதிப்பிடின் வங்க மொழி உரைநடைக்குத் தேவேந்திரர் ஆற்றிய பணி மேற்சொன்னவர் களுடையதைவிடக் குறைந்ததன்று. ராம்மோகனின் உரைநடை இந்துதர்மம், வேதாந்தம் ஆகியவற்றின் அடிப்படைக் கருத்துக்களை, அவற்றைச் சரிவர அறிய விரும்புவோர் புரியும் வண்ணம் விளக்க மாகக் கூறுவது போல அமைந்தது. வித்யாசாகரரோ, அந்த நாள் வரை கிறித்துவப் பாதிரியார்கள் அவர்கள் இயக்கிய வங்க எழுத் தாளர்கள் ஆகிய இவர்களின் கைகளில் தவழ்ந்த மொழிக்கு அழகையும் மெருகையும் ஊட்டினுர். அட்சயகுமாரர் நேரான உரைநடைக்கு முதலிடம் கொடுத்தார்; நயமிக்க சொல்லழகு பற்றியோ, நடைக்கவின் பற்றியோ அவர் அதிகம் கவலைப்பட வில்லை. பூதேவர் இந்து சமூக, குடும்பம் பற்றிய தலைப்புகளில் பல அருமையான கட்டுரைகளை எழுதி அறிவுத் தெளிவில் தமக்கு ஒப்பாரில்லை எனக் காட்டினுர்; எனினும் அவரும் அட்சய குமாரரைப் போலச் சொல்லுவதைக் கலையழகுடன் சொல்ல வேண்டும் என்ற நோக்கம் இல்லாதவராயிருந்தார்.

இவர்களை விட்டுவிட்டால் மேற்சொன்ன எழுத்தாளர்களோடு சம காலத்தில் வாழ்ந்தவர்களில் இனி எஞ்சுவது தேவேந்திரநாதர் மட்டுமே. தேவேந்திரர் வங்க மொழிக்கு அழகையும் மெருகையும் ஊட்டினுர் என்பது மட்டுமல்ல; அந்நாள் வரை இருந்திராத கவிதைப் பண்பையும் புகுத்தினுர். ஏற்கெனவே கூறியபடி வடிவம், அழகு ஆகியவற்றின் மீது அவருள்ளத்தில் ஈடுபாடிருந்தது. எளிதில் விளங்காத சமயக் கருத்துக்கள் பற்றியும் அதையொட்டிய இன்னும் சில பொருள்கள் பற்றியும் அவர் ஆய்ந்தபோது தத்துவ நோக்கிலும், புலனுணர்விற்கப்பாற்பட்ட நிலையிலும் இருந்தார். அனுல் இயற்கை யையும் அதன் அழகையும் வருணித்தபோது அவருடைய எழுத்து நடையில் மற்றவற்றைவிடப் புலனுணர்வொன்றே மேம்பட்டிருந்தது. இயற்கையின் பலவகைக் கோலங்களை அவர் எவ்வாறு ஆழ்ந்து துய்த்தார் என்பதை மெய்ப்பிக்க, அவருடைய சுயசரிதையிலிருந்து மூன்று பகுதிகள் இதற்கு முந்தைய ஒரு அத்தியாயத்தில் கொடுக் கப்பட்டன. மூலத்தின் அழகை முற்றிலும் குறையாமல் தர மொழி பெயர்ப்பால் முடியாது; எனினும் குறைபாடுடைய மொழி பெயர்ப் பிலும் அவருடைய கவனத்தை ஈர்த்த பல்வகை நிலங்களின் வேறு பட்ட வளத்தை வண்ணமும் வடிவமுமாக அவர் வருணித்த கூர்த்த அழகுணர்வு ஒன்றும் குறைந்துவிடவில்லை. அவருடைய நூலில் அத்தகைய பகுதிகளைப் பல இடங்களில் காணலாம்;

குறிப்பாக இமயமலை மூர்ரி மலைகள், காஷ்மீர் ஆகிய இடங்களுக்குத் தாம் சென்றது பற்றி ராஜ்நாராயண்போஸ், பிரியநாத் சாஸ்திரி, கனேந்திரநாத தாகூர், ஸ்ரீகாந்த சின்உறா, இவர் போன்ற பிறருக்கு அவர் எழுதிய நீண்ட கடிதங்களில் அவருடைய அழகுணர்ச்சி வெளிப்பட்டது.

முன்பே கண்டதுபோல, அவர் புறத்திலும் அகத்திலும்—பரந்தும் ஆழ்ந்தும்— பழகுவதை மிகவும் விரும்பினுர். பிரம்மசமாஜ இயக்கம் உள்ளிட்ட பல சமூக நலத் திட்டங்களில் ஈடுபட்டு அவர் முன்னின்று தொண்டாற்றியதன் மூலம் அவருடைய புறவுலக நோக்கு— பரந்த நோக்கு வெளிப்பட்டது. ஆனுல், இறைவனை நேருக்கு நேர் குறியீட்டு உணர்வாகக் காணவேண்டி ஆழ்ந்த தியானத்தில் மூழ்கியிருந்ததன்மூலம் அவருடைய அகவுலக நோக்கு— ஆழ்ந்த நோக்கு வெளிப்பட்டது ஒப்பிட்டுப் பார்த்தால், ஆழ்ந்த நோக்கே அவருடைய உண்மையான தோற்றமாகும். இந்தப் பிரிக்க இயலா ஆழ்ந்த நோக்கில் அவர் இருந்தமையால், அவர் பேரொளி—இன்னும் பேரொளி எனத் தீரா வேட்கை கொண்டார். கெதேயைப் போன்று, மேனேக்கு வகையாய் அமைந்த அவருடைய இந்தப் பண்பு, அவருடைய எழுத்துக்களில் அங்குமிங்குமாய் எதிரொளித்தது. அந்த எதிரொளிப்பு ரவீந்திரர் மூலம் மரபுப் பண்பாக முழுமையுற்றது. தம் வாழ்நாள் முழுதும் தாம் போற்றிப் பரவிய உபநிஷத்துகளின் கருத்துப் பொழிவை உள்ளே பருகியதிலிருந்தே இந்தப் பேரொளி நாட்டத்தைக் காணலாம். கதிரவன் ஒளியும் நிலவின் ஒளியும் அவற்றின் கம்பீரத்துடன் அவருடைய கற்பனை முழுதையும் எல்லையற்றதாய்க் கவர்ந்தன. 'பிரம்மோதர்மம் பற்றிய விளக்கவுரை' என்னும் அவருடைய சிறந்த நூலில் வரும் கீழ்க் கண்ட இரண்டு பகுதிகள் சான்றுக்காகத் தரப்படுகின்றன;

கதிரவனைப் பற்றிய பகுதி: "உறங்கிக் கொண்டிருக்கும் உயிரினங்களின் உணர்வுகளை விழிப்பூட்ட, எழிலற்ற பொருள்களிடத்தும் அழகூட்ட வைகறையைப் பரப்பிக் கதிரவன் எழும்போது, ஒளி விடும் கதிரவன் உள்ளே எல்லாரும் வணங்கும் இறைவனை உறுதியான பக்தி கொண்டவர்கள் காணுகிறுர்கள். வைகறைப்போதில் நம்முடைய மனவெளியில் கதிர் விரிப்பது அவனுடைய பேரொளியே. கதிரவன் ஆன்மாவாகவும், நம்முடைய ஆன்மாக்களின் ஆன்மாவாகவும், உயிருள்ள எல்லாப் பொருள்களின் ஆன்மாவாகவும் இருக்கும் அந்த ஒன்று, இருளிலிருந்து உலகம் விழித்தெழும்போது தன்னைத் தானே வெளிப்படுத்துகிறது. கதிரவனுடைய புதிய ஒளிக் கீற்றுகளில் எல்லா ஒளிகளைக் கொண்ட பேரொளியை நாம் காண்கிறோம். வைகறை எழில், எல்லா அழகுகளின் பேரழகை நமக்குப் புலப்

படுத்துகிறது. கண்களைத் திறந்தவுடன் நம்மீது படிந்திருக்கும் இறைவனுடைய கண்களைப் பார்க்கிறோம். எங்கும் அவன் பெருமையே'' (2-ஆவது உரை)

திங்களைப் பற்றிய பகுதி : ''இன்றிரவு திங்களின் மேன்மையைப் பார். அமுதத்தையொத்த நிலவுக் கீற்றுகள் ஆயிரத்தொரு திசைகளில் கதிர் விரிக்கின்றன. இன்றிரவு மண்ணகம் நிலவின் வெண்ணிறத்தால் தோய்க்கப்பட்டிருக்கிறது; மரங்கள் கூடத் தம் பச்சை வண்ணத்தை ஒதுக்கிவிட்டு வெள்ளிய வண்ணம் பூசியுள்ளன. கங்கையாற்றின் வெண்மணல் படுகையிலமர்ந்து நிலவொளியைத் துய்த்த உங்களைக் கேட்கிறேன் :

கங்கை நதிக்கரையின்மீது தனியாகவோ, பல நண்பர்களின் கூட்டத்தோடோ நடந்து சென்றபோது உங்களுடைய உடம்பு கங்கையின் இனிய தென்றலால் குளிர்ச்சியடைந்த சமயம்—

அமைதியான இன்பத்தில் உலகம் முழுமையும் நிலவுக் கதிரான அமுதத்தை உண்ணுவதைக் கண்டு உங்கள் நெஞ்சம் மென்மையடைந்த சமயம்—அந்தச் சமயத்தில் உங்களில் சிலராவது அளப்பரிய இறைவனின் விழுமிய நிலையை உங்கள் மனதுள் உணரவில்லையா?'' (22—ஆவது உரை)

மூடிய விழிகளைவிட விழித்துள்ள கண்களுக்குத் தோன்றும் தணியாக் காதலின் அழகை எங்கும் காண்கிறோம். இங்கு ஒரு துறவியைக் காண்பதைவிட நாம் ஒரு கவிஞனையே காண்கிறோம்.

அவருடைய முருகியல்பு கொண்ட உரைநடை உணர்வுமயமாகவும் கூர்த்தநோக்குடையதாகவும் அமைவதைப்பற்றியதே இதுவாகும். ஆனால் அவருடைய சுயசரிதையில் முன் பகுதியில் வருவனபோன்று தத்துவம், சமயம், ஆன்மீகம் போன்ற நுண்பொருள் கோட்பாடுகள் பற்றி எழுதியனவும், பிரம்மோதர்மத்தில் வரும் விளக்கவுரைப் பகுதிகளும், '' தன்னறிவுக் கலை '' '' (ஆத்ம தத்துவ வித்யா) '' '' பிரம்மோ தர்மத்தைப் பற்றிய நம்பிக்கைகளும் கொள்கைகளும் '' என்னும் நூல்களும் கல்கத்தா பிரம்மசமாஜ சபையில் அவர் ஆற்றிய சொற்பொழிவுகளும், அவருடைய புகழ் பெற்ற நூலான '' பிரம்மோதர்ம விளக்க ''த்தில் பெரும்பகுதியும், அவருடைய சிந்தனையில் இன்னொரு வேறுபட்ட நிலையை முற்றிலும் நமக்குக் காட்டும். புலனுணர்வுமிக்க கற்பனை, அமைதியான சிந்தனையாக மாறுவதைக் காண்கிறோம். உணர்ச்சிக் கட்டுப்பாடு, பெருமிதம், வெளிப்பாட்டிலுள்ள நேர்த்தியும் நேர்மையும், மொழிநடையில் காணப்படும் ஆற்றொழுக்கு, நுட்பமும் சுருக்கமும் தாமே

அமையச் சொற்களைத் தக்க வகையில் தெரிந்தெடுக்கும் விதம், சொற்றொடர்களைச் சரியாக அளவிட்டமைத்தல் முதலிய எல்லாம் சேர்ந்த ஒரு உரைநடை—மாத்யூ ஆர்னால்டு கூறுவாரே '(Attic Prose)' என்று—அத்தகைய உரைநடையில் எல்லாப் பண்புகளையும் மேற்சொன்ன பகுதிகளில் பரக்கக் காணலாம். இவற்றை எழுதும் போது அவர் இங்கே வரையும் ஓவியக்கலைஞனைவிட வார்க்கும் சிற்பக்கலைஞனாகத் தென்படுகிறார். இந்த நடை, கண்டும் கேட்டும் துய்த்த இயற்கையின் பேரழகுகளை விளக்கியபோது அவர் கையாண்ட மொழி நடைக்கு முற்றிலும் மாறானது. வேகத்தையும் விறுவிறுப்பையும்விட அவர் நடையில் கனம் அமைந்திருந்தது. இந்த நடையின் போக்கில் துள்ளிக்குதிக்கும் விளையாட்டுப்போன்ற ஏற்ற இறக்கமோ, அவசரமோ கொஞ்சமும் இல்லை; ஆழ்ந்து, அமைதியாய் எவ்வித ஆரவாரமுமில்லாத முக்கியத்துவத்துடன் அது செல்கிறது. எதை வெளிப்படுத்த நினைக்கிறோமோ அதைப் பற்றிப் போதுமான தீவிரம் அல்லது சிந்தனை இல்லாதிருக்கிற தன்மையை நடையின் நேரியபண்புகள் தடுக்கின்றன. மாறாக, மொழியின் போக்கு தேவைக்கு மேலும் கடுமையாக இருக்கிறது.

அவருடைய நடையில் இரண்டாம் வகைக்குக் கீழ்வருவது ஒரு சான்றாம். 1860-ஆம் ஆண்டில் பிரம்ம வித்யாலயத்தில் அவர் ஆற்றிய சொற்பொழிவுகளின் தொகுப்பான "பிரம்மோதர்மம் பற்றிய கோட்பாடுகளும் நம்பிக்கைகளும்" என்னும் நூலிலிருந்து இப்பகுதி எடுக்கப்பட்டுள்ளது. இதிலுள்ள ஏழாவது சொற்பொழிவு 'இறப்புக்குப் பின் வரும் வாழ்வு' (the life beyond) பற்றியது. அதில் அவர் கூறியதாவது :

"உடம்பும் ஆன்மாவும் வெவ்வேறாக இருக்கும்போது இறப்பிற்குப் பின்னால் ஆன்மா, அழிக்கப்பட்டுவிடும் என்பது இயலுமா? எந்த ஒரு பொருளையும் அழிப்பது என்பதை நம்மால் நினைந்து பார்க்கக்கூடாது. தம்முடைய புத்தமைக்கும் பேரறிவால் இவற்றை எல்லாம் படைத்த பரம்பொருளே, தம் அழிக்கும் சக்தியால் இவற்றை அழிக்கவும் முடியும். ஒன்றைக் காக்க வேண்டும் என்ற இறைவனின் விருப்பம் நின்றுபோகும் வரை, படைப்பின் மிகச் சிறிய ஒரு இம்மியைக் கூட அழிக்க முடியாது. ஆனால், அந்த விருப்பத்தைச் செயல்படுத்துவதை இறைவன் நிறுத்திவிட்டானா இல்லையா என்ற வினாவுக்கு விடையைப் பொருள்களின் ஐம்பூதச் சேர்க்கையிலிருந்தே பெறலாம். இந்தப் பூதங்கள் ஏதும் அழிந்துபடுவதில்லை. தண்ணீர் வற்றி வடிவம் பெறுகிறது; அந்த ஆவி மீண்டும் நீராக மாறுகிறது. வாடி வதங்கிய இலைகள் மரத்திலிருந்து கீழே விழுந்து மறைகின்றன; ஆனாலும் இவை எருக்களாக மாற்றமடைந்து தாவர

வளர்ச்சிக்குத் துணைபுரிகின்றன. இறந்த உடம்பின் ஒவ்வொரு உறுப்பும், ஒவ்வொரு எலும்பும், ஒவ்வொரு இம்மியும் சிதறுகிறது : எனினும் இதில் ஏதும் அழிக்கப்படுவதில்லை. என்றால், இவற்றுக்கு மேலான ஆன்மா, இறப்புக்குப் பின்னால் அழிக்கப்படுகிறது என்பதை எவ்வகைத் தருக்கவாதத்தால் உறுதிப்படுத்த முடியும்? மிக மிகச் சிறிய அணுகூட அழியாதிருக்கும்போது ஆன்மாவின் அழிவை இறைவன் விரும்பக் கூடுமா ?''

கல்கத்தா பிரம்மசமாஜத்தில் அவர் ஆற்றிய சொற்பொழிவுகள் ஒன்றில் எடுக்கப்பட்ட பின்வரும் பகுதியையும் காணலாம்.

'' நாம் பெற்றிருக்கும் நற்பேறுகளில் எல்லாம் தலையானது, சிறிய உயிரினங்களாக இருப்பினும் இறைவனை அறிவதற்கு நாம் உரிமை பெற்றிருப்பதேயாகும். ஆனால் இந்தச் சிறப்புமிக்க உரிமை பெற்றுள்ளோம் என்பதை மெய்ப்பிக்கும் வகையாய், ஒவ்வொரு வழியிலும் நாம் நம் ஆன்மாவைத் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். ஒருவன் தன் ஆன்மாவைத் தூயதாக்கிக் கொண்டால் ஒழிய, அதனுள் இருக்கும் மாசிலாமணியை, எல்லாம் அறிந்தவனை, தலையற்ற பரம் பொருளை உணர முடியாது. நம் ஆன்மாவை எல்லா மாசுகளிலிருந்து கழுவுவதன் மூலம், 'தூய நறுஞ்சாரமாகிய' இறைவனுடைய சாதனமாக மாற்றிக் கொண்டால், அவன்மீது நாம் காட்டும் பக்தி தானாகவே வளரும். ஒருமுறை இந்தப் பக்தி தோற்றுவிக்கப்பட்டுவிட்டால், இறைவனுக்கு விருப்பமான பொருள்களை அடைய வேண்டும் என்ற அளவுக்கு மீறிய பேரார்வத்தை அது நம்முள் ஏற்படுத்தும் ; அவனுடைய மேம்பட்ட பேரின்ப ஞானங்களைப் பின்பற்ற வேண்டும் என்ற ஆவலையும் உண்டாக்கும். நம்முடைய குறிக்கோளென இறைவனுடைய கலப்பற்ற பேரின்ப நிலையை நம் முன் வைத்தால் பயங்கரமான இவ்வுலகில் கூட நாம் அச்சத்திலிருந்தும் மகிழ்ச்சியிலிருந்தும் விடுதலை பெறுவோம். ''

1864-இல் தேவேந்திரநாதர் பிரம்மோ பந்து சபையில் (கேசவ சந்திர சென் அவர்களின் சங்கத் சபையில் ஒரு கிளை) ஒரு சொற்பொழிவாற்றினார். அது பின்னால் அச்சிடப்பட்டு வெளியானது. அதில் பிரம்ம சமாஜத்தின் இருபத்தைந்தாண்டு அனுபவங்களை நினைவு கூர்ந்தார். இந்தச் சொற்பொழிவின் முன்னுரையாகக் கீழ் வரும் உயிர்நிலைப் பகுதி வருகிறது. ''பக்தியுணர்வில்லாத பிரம்மத்தைப் பற்றிய அறிவு உலர்ந்த வெற்றறிவே ஆகும்; அறிவால் நிரம்புதலுறாத பக்தியோ இருளுக்குச் சமம். அறிவேயாகட்டும், பக்தியேயாகட்டும், நடைமுறையில் கைக்கொள்ளப்படவில்லை என்றால் இரண்டும் பயனற்றவையே. மாறாக அறிவும் பக்தியும் இல்லாத நடைமுறையோ வெறும் போலி ஆரவாரமேயாகும்''.

“ அறிவு மற்றும் சமய முன்னேற்றம் ” என்னும் நூல் அவர் தனிப்பட்ட முறையில் நிகழ்த்திய பதினான்கு பேச்சுக்களின் தொகுப்பாகும். நாம் வாழும் பூமி மனித நாகரிகம் ஆகியவற்றின் அடிப்படை உண்மைகளை விளங்கும் வகையில் தம்முடைய கொள்ளுப் பேரக்குழந்தைகளுக்கு அவர் ஆற்றியவை இவை. 1890-’91-க்கும் இடைப்பட்ட காலத்தில் பேசி, அவருடைய ஒரு பேரராகிய சிதீந்தரநாத தாகூர் என்பவரால் பதிவு செய்யப் பட்டவை. 1893-இல் அந்நூல் வெளியாயிற்று.

மகரிஷி இந்தக் கட்டுரைகளில் மனிதனின் பரிணாமம் பற்றியும் சமயத்தின் பரிணாமம் பற்றியும் விரித்துரைத்துள்ளார். அண்ட வெளியில் பூமி எவ்வாறு தோன்றியது, அதில் உயிர் வாழ்க்கை எவ்விதம் துவங்கியது, உயிரினங்கள் வளர்ச்சியடைந்த விதம், ஒரு தொடர்ச்சியான மாற்ற வினைகளிலிருந்து மனிதன் எவ்வாறு தோன்றினான் என்பது பற்றியெல்லாம் குறிப்பிட்ட பின்பு தற்கால நிலைமை வரை அந்தக் கதையைக் கொண்டு வந்தார். குறிப்பாக இளைஞர்களுக்கு என அவர் கூறியனவேயாயினும், மண்ணியல், மானிடவியல், வானவியல், வரலாறு மற்றும் இவைபோன்ற துறைகளில் மகரிஷி பெற்றிருந்த ஆழ்ந்த அறிவை அக்கட்டுரைகள் வெளிப்படுத்துகின்றன. தேவேந்திரர் புவியியல், உயிரியல், வானவியல் ஆகியவற்றைத் தொடர்ந்து படித்து வந்தவர் ; அவருடைய இறுதி நாட்கள் வரை இந்த அறிவுலகத்தில் ஏற்பட்ட இறுதிக்கட்ட வளர்ச்சி வரை தெரிந்து கொள்ள முயற்சி செய்தவர். தம்முடைய சொந்தப் பயன்பாட்டுக்கு வைத்திருந்த நூல்களைப் பின்னால் சாந்தி நிகேதன் நூலகத்திற்கு அவர் தந்துவிட்டார். அவற்றின் பெருமளவு அறிவியற்றுறை சார்ந்த நூல்கள் ஆகும். அவற்றின் ஓரப் பகுதிகளில் அவர் எழுதி வைத்துள்ள குறிப்புக்கள் அந்நூல்களை அவர் ஆழ்ந்த கவனத்துடன் படித்துள்ளார் என்பதற்குச் சான்றுகளாகும்.

இறுதியாக அமைவது அவருடைய கடிதத் தொகுப்பு ஆகும். பல்வேறு காலங்களில் (1850—’87) ராஜ்நாராயண் போஸ், பசாராம் சட்டர்ஜி, கேசவசந்திர சென், பிரதாப் சந்திர மஜூம்தார், விஜய கிருஷ்ண கோஸ்வாமி, சௌதாமினி தேவி, நவகிருஷ்ண சட்டர்ஜி இவர்களுக்கும் மற்றவர்களுக்கும் அவர் எழுதிய கடிதங்கள் இதில் அடங்கும். கடிதங்களின் தொனி வெளிப்படையானதாகவும் நெருக்கத்தையும் நட்புணர்வையும் காட்டுவதாகவும் இருக்கிறது. இந்தத் தொகுப்பில் கேசவ சந்திரர் எழுதிய பத்து கடிதங்களும், துவாரகநாதர் எழுதிய ஒன்றும், பேராசிரியர் மாக்ஸ் முல்லர் எழுதிய ஒன்றும் ஆக ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இரு கடிதங்களும் அடங்கியுள்ளன.

சுயசரிதை மகிரிஷி சொல்ல, எழுதப்பட்ட நூல். பண்டித பிரியநாத சாஸ்திரி பெரும்பகுதியையும், பண்டித ஹேமசந்திரா வித்யாரத்னர் எஞ்சியவற்றையும் எழுதினார்கள். பிரியநாதர் 1898-இல் இந்நூலை வெளியிட்டார். தேவேந்திரரின் படைப்புக்கள் முழுவதிலும் மிகப்பெரும் நூலாக ஐயமின்றித் திகழ்ந்தது இந் நூலேயாம்.

1845—1895-க்கு இடைப்பட்ட ஐம்பது ஆண்டுக்கால நீண்ட பகுதியில் தேவேந்திரர் எழுதிய முதன்மையான நூல்கள் இவையே ஆகும். வேறு சிலவும் உள்ளன; எனினும் அவை முறையான நூல்கள் போலன்றித் துண்டு வெளியீடுகளாகவே அமைந்தன.

அவருடைய நூல்களில் பிரம்மோதர்மம், பிரம்மோதர்ம விளக்கம், அறிவு மற்றும் சமய முன்னேற்றம், சுயசரிதை இந்த நான்குமே ஐயமின்றி மிகவும் முக்கியமானவை; இவற்றுள்ளும் சுயசரிதையே தலையாயது. அந்நூல்களுள்ளே இறைவன்பால் கொண்ட ஆழ்ந்த பக்தியால் அகத்துள் வாழ்ந்த ஒரு மனிதரை, ஒரு தேர்ந்த சமயச் சிந்தனையாளரை, அறிவியல் உண்மைகளை நாடும் ஒரு ஆய்வாளரை, ஒரு கவிஞரைக் காணுகின்றோம். வாழ்க்கையைப் புறத்திலிருந்தும் அகத்திலிருந்தும் நோக்கி இரண்டு விதங்களிலுமே அவர் ஒரு ஞானத்துறவியாக இருந்தார். தேவேந்திரர் தாம் வெளியிட்ட மற்றவற்றை அழித்துவிட்டு இந்த நான்கு நூல்களை மட்டுமே எழுதியிருந்தால்கூட, 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வங்காள உரை நடைப் படைப்பாளிகளில் தலைசிறந்தவராக அப்போதும் அவரே கருதப்படுவார்.

உரைநடையில் அழுத்தமான முத்திரைகளைப் பதித்ததோடு நில்லாமல், தேவேந்திரர் பிரம்மத்தைப் புகழும் வகையில் பல பக்திப் பாடல்களையும் பாசுரங்களையும் இயற்றினார். பாசுரங்கள் பழைய சமஸ்கிருதப் பாக்களைத் தழுவி எழுதப்பட்டவை. பிரம்ம சங்கீதமாகிய பக்திப் பாடல்கள் இவரே சொந்தமாய் வங்க மொழியில் எழுதியவை. அவற்றுக்கு ஒரு சான்று, மொழி பெயர்ப்பின் மூலம் கீழ்வரும் பாடலாகும்:

தோன்றாத் துணைவனாய் வருபவனை நீ ஏன் மறக்கிறாய்?
அவனை மறவாதே.
வளமும் வாழ்வும் பெருமையும் — எல்லாமே யாரிடமிருந்து
தோன்றுகின்றனவோ அந்த 'எக்காலத்துமுள்ள' நண்பனை
ஏன் மறக்கிறாய்?
வேண்டாம்—ஓ ... வேண்டாம்—அவனை விட்டு விலக
வேண்டாம்.

அவனன்றி ஆறுதல் ஏது ? அமைதி தான் ஏது ?
ஓ ! வாழ்வு முழுதும் துணையாகும் நண்பனை —
எக்காலத்தும் நித்திய உதவி செய்பவனை —
கருணையே வடிவான அருளாளனை ஏன் மறக்கிறாய் ?

வங்க மொழியின் போற்றிப்பாடலின் உணர்வை முழுதுமாக இந்த மொழி பெயர்ப்பு வெளிப்படுத்தவில்லை ; எனினும் இந்த வரிகளிலிருந்து அந்த உணர்வின் நேர்மை தெளிவாகப் புலப்படுகிறது. இந்தப் பாடல் ' குகுப் ' (Kukubh) ராகத்திலும், ஆததேகா (Adatheka) தாளத்திலும் இசையமைக்கப்பட்டது. பிரம்ம சங்கீதங்கள் துருபடைகள் பாடப்படும் வகையில் பாடப்பட்டன. ராம் மோகனாலும் தேவேந்திரராலும் துவக்கி வைக்கப்பட்ட இந்த வழியைப் பின்பற்றி, பின்னாளில் ரவீந்திரர் சொல்லிலும் பண்ணமைப்பிலும் ஒப்பற்றதாய் விளங்கும் பல அரிய பாடல்களை இயற்றினார்.

இந்த ஆய்வின் முடிவினை இலக்கியப் போக்கிலும் சமய நோக்கிலும் தம்முடைய புகழ்வாய்ந்த தந்தையார் ஆற்றிய பணிகளைப் புகழ்ந்தும், அவனுடைய சாதனையின் உண்மையான இயல்பை வெளிப்படுத்தியும் ரவீந்திரநாதர் எழுதிய வரிகளைச் சொல்வது அழகுடையதாகும்.

'' சத்தியத்தை உணரவேண்டுமென்ற பற்றை—அறிவை மட்டும் தேடிப்பெறவேண்டும் என்ற ஆசையோ வெற்று ஆர்வமோ அன்று ; ஆனால் அதில் மனத்தின் தீவிரமான வேட்கை இருந்தது—அவர் பெற்றிருந்தார். சத்தியத்தை அறிவு பூர்வமாக மட்டுமல்லாமல் இன்ப அனுபவமாகவும் துய்க்க அவர் விரும்பினார். இங்குதான், அவருடைய இயற்கையான தன்மை முழுதும் ஒன்றுபட்டு தெளிவாகப் புலப்படுகிறது. மகரிஷி பிரம்மத்தை அறிவிலும் தேடினார் ; பக்தியாலும் தேடினார், தம்முடைய முழு வாழ்வாலும் தேடினார். பிரம்மத்தை அடையவேண்டும் என்னும் நல்வழியில் அவர் நெஞ்சம் சென்றதற்கான காரணம் இதுவே ; என்றுமுள பேரின்ப வடிவமாகிய பிரம்மத்தைத் தொடர்ந்து வந்த பல துன்பங்களுக்கும் முயற்சிகளுக்கும் புறக்கணிப்புகளுக்கும் இணைதல்களுக்குமிடையே அவர் தேடிச் சென்றார். தம்முடைய குறிக்கோளை அடையும் வரை ஒரு கணம் கூட அவர் ஓய்வு கொள்ளவில்லை '' (மகரிஷி தேவேந்திர நாதர் ; ரவீந்திரநாத தாகூர்—விசுவ பாரதி).

மகரிஷியின் வாழ்வில் சில முக்கிய நாட்களும் நிகழ்ச்சிகளும்

1817 — மே 15-இல் கல்கத்தாவில் பிறப்பு

1823 — 24-பர்கானு மாவட்டத்தில் ஆட்சியாளரும், உப்பு முகவருமான திரு ப்ளோடன் (Plowden) கீழ் துவாரக நாத தாகூர் ஒரு திவானாக நியமிக்கப்படுதல்.

1827 — ராஜாராம் மோகன் ராயின் ஆங்கில-இந்துப் பள்ளியில் சேர்தல்.

1828 — ஆகஸ்ட் 20-கல்கத்தா, சித்பூரில் கமலோசன் பாசு வீட்டில் ராம் மோகன் ராயின் பிரம்ம சபை நிறுவப்படல்.

1829 — ஆகஸ்ட் 1-யூனியன் வங்கி துவக்கம்.

1830 — நவம்பர் 19-ராம்மோகன் இங்கிலாந்துக்குப் பயணம்—புறப்படுவதற்கு முன்னர் தேவேந்திரநாதரிடம் அன்பு (பிரியா) விடை பெறல்.

1831 — இந்துக் கல்லூரியில் சேர்தல்.

1833 — சர்வதத்துவ பீடிகை சபை துவக்கம்—எல்லா நிகழ்ச்சிகளும் வங்காள மொழியில் நடத்தப்பெறல்.

1833 — செப்டம்பர் 27—ராம்மோகன்ராய் இங்கிலாந்தில் பிரிஸ்டலில் மறைவு.

1833 — இந்துக் கல்லூரியை விட்டு நீங்குதல்.

1834 — திருமணம்—அப்போது அவருக்கு வயது 17; மணமகள் சாரதாதேவியின் வயது 8—துவாரகநாதர் அரசுப் பணியிலிருந்து விலகி, கார், தாகூர் அன் கம்பெனி என்ற வாணிக நிறுவனத்தைத் தொடங்கல். யூனியன் வங்கியில் உதவிக்காசாளர் பணியில் சேரல்.

1838 — பாட்டியின் இறப்பு; அவர் மறைவின்போது அவருள்ளத்தில் விளக்க முடியாத புதிய உணர்வு தோன்றி, அவரைக் கிளர்ச்சியுறச் செய்தல்.

1839 — அக்டோபர் 6—‘தத்துவரஞ்சனி சபை’ தோற்றம்—ராமச்சந்திர வித்யா வாகீசர் கருத்துப்படி ‘தத்துவ

போதினி சபை' எனப் பெயர் மாற்றம்—உருவ வழி பாட்டைக் கைவிட முடிவு—ஈசோபநிஷத்தின் கிழிந்த தாள் ஒன்று காற்றில் பறந்து வரக்காணல்—அதன் கருத்தில் மனம் ஆழ்ந்து ஈடுபடல்—வித்யாவாகீசருடன் உப நிஷத்துக்களைக் கற்றல்.

1840 — ஜூன்—தத்துவ்போதினி பாடசாலை தோற்றுவித்தல்—அட்சயகுமார தத்தாரை அதன் ஆசிரியர்களுள் ஒருவர் ஆக்கல்.

1841 — செப்டம்பர் 14—தத்துவபோதினி சபையின் ஆண்டு விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடல்.

1842 — ஜனவரி 9—துவாரகநாதரின் இங்கிலாந்துக் கடற் பயணம்.

1843 — ஜனவரி—துவாரகநாதர் இங்கிலாந்திலிருந்து திரும்பி வரல். ஆகஸ்ட்—'தத்துவபோதினி பத்திரிகை' தோற்றுவித்தல் — அட்சயகுமார தத்தர் அதன் ஆசிரியராக்கல். தத்துவபோதினி பத்திரிகையில் உப நிஷத்துக்களை மொழிபெயர்த்து வெளியிடல்
டிசம்பர் 21—ராமச்சந்திர வித்யாவாகீசரின் கீழ் இருபது அன்பர்களுடன் முறைப்படி பிரம்மோதர்மத் தீக்கை பெறுதல்.

1845 — மார்ச்சு 8—துவாரகநாதரின் இரண்டாவது இங்கிலாந் துக் கடற்பயணம்—மே 25 கிறித்தவ மதப்பிரசாரத்தை எதிர்க்க 'இந்து இதார்த்தி வித்யாலயா' வைத் தோற்று வித்தல். இந்து மதத்திற்கு எதிராக அலெக்சாண்டர் டப் கூறிய குற்றச்சாட்டுகளை மறுத்து 'வேதாந்தக் கோட்பாடுகள் மெய்ப்பிக்கப்படல்' என்னும் நூலை வெளியிடல் — அட்சயகுமார தத்தர் வேதங்களின் குறையிலாத் தன்மை பற்றிய கருத்து வேறுபாடு கொள்ளல்—டிசம்பர் 20—காரிதி வீட்டுத் தோட்டத்தில் ஒரு நாள் விழாவைக் கொண்டாட 500 பிரம்மசபை அன்பர்கள் கூடியது.

1846 — மே 22 மண்ணுலகப் பொறுப்புகளில் தேவேந்திரர் பற்றற்று இருப்பது பற்றி வைது துவாரகநாதர் இங்கிலாந்திலிருந்து கடிதம் எழுதியது—
ஆகஸ்ட் 1—இங்கிலாந்தில் துவாரகநாதரின் இறப்பு—அக்டோபர் 15—உருவ வழிபாடற்ற சடங்குகள் மூலம் தந்தையாரின் ஈமக் கடன் செய்தல்—அதனால் உறவினர் புறக்கணிப்புக்குள்ளாதல்.

1847 — செப்டம்பர்—வேதபண்டிதருடன் உரையாடக் காசி செல்லல் — டிசம்பர் 27—31 யூனியன் வங்கி கலைக்கப்

1848 — படல். ஜனவரி 12—கார், தாகூர் கம்பெனி மூடப்படல்—வாழ்க்கைச் செலவுகளைக் குறைக்க எளிய வாழ்வு மேற்கொள்ளல்—முன்பைவிடத் தீவிரமாய் சாத்திரங்களைக்கற்றல்—இந்த ஆழ்ந்த படிப்பின் மூலம் உபநிஷத்துக்கள் பிரம்மோதர்மத்தின் அடிப்படையாய் அமைய முடியாது என்ற உறுதிக்கு வரல்.

மார்ச்—தத்துவபோதினி பத்திரிகையில் ரிக் வேதத்தை மொழிபெயர்த்து வெளியிடல்—24 ஆண்டுகள் இந்த மொழி பெயர்ப்பு தொடர்ந்தது—

ஏப்ரல் 4—கார், தாகூர் கம்பெனியின் கடன் தந்தோர் கூட்டத்தில் கம்பெனியின் சொத்து மற்றும் கடன்பற்றி மதிப்பிடல்—கம்பெனி கலைக்கப்பட்டதால் கடனைத் தீர்க்கத் துவாரகநாதர் மக்களுக்குப் போதுமான காலக்கெடு தர முடிவு— ‘பிரம்மோதர்மம்’ என்ற நூலின் முதற்படிவம் உருவாக்கல்.

1849 — ‘பிரம்மோதர்மம் (உரையில்லாமல்) வெளியிடுதல்—

1851 — அக்டோபர் 31—பிரிட்டிஷ் இந்தியச் சங்கத்தின் செயலாளராதல்

1856 — அக்டோபர் 3—இமயமலைப் பயணத்துவக்கம்

1857 — ஏப்ரல் 27—சிம்லா சேர்தல்—20 மாதங்களுக்கு மேலாகச் சிம்லா மலைகளின் பல இடங்களில் தங்கல்.

1858 — நவம்பர் 15—கல்கத்தா திரும்பல்

1859 — தத்துவபோதினி சபை கலைக்கப்படல்—அதன் பிரசாரப் பணி பிரம்ம சமாஜத்தால் மேற்கொள்ளப்படல்—சமாஜத்தின் செயலாளர் பதவியிலிருந்து ஈசுவர சந்திர வித்யாசாகர் விலகியதால் தேவேந்திரரும் கேசவசந்திரசென்னும் கூட்டுச் செயலாளர்களாதல் செப்டம்பர் 27—இரண்டாம் மகன் சத்யேந்திரநாத தாகூருடன் இலங்கை புறப்படல்—கேசவசந்திரர் பிரச்சாரப் பணி மேற்கொள்ளல்

1861 — இங்கிலாந்தின் கிறித்தவத் திருச்சபை போல கேசவசந்திரரால் சங்கத் சபை தோற்றுவிக்கப்படல்.

1862 — ஏப்ரல் 13—பிரம்மசமாஜத்தின் ஒரு ஆசாரியராகக் கேசவரை நியமித்தல்

1863 — போல்பூருக்கருகில் ஒரு பெரிய நிலப்பகுதியை வாங்கல்—அதுவே பின்னாளில் அவருடைய மகனார் ரவீந்திரநாத தாகூரால் சாந்திநிகேதன் பிரம்மசரிய ஆசிரமமாகப் புகழ்ப் பெற்றது.

1864 — சமூக, சமயச் சீர்திருத்தங்களில் கேசவருடன் கொண்ட கருத்துவேறுபாடுகள், முதன்முறையாக வெளிப்படல் அக்டோபர்—சமாஜ ஆசாரியர்கள் பூணூலை அணிவது பற்றிச் சமாஜத்தின் மூத்த தலைமையை எதிர்த்துக் கேசவரைப் பின்பற்றுவோர் வெளிப்படையாகக் கிளர்ச்சி செய்தல்.

1866 — கேசவர் தலைமையின் கீழ் புதிய குழு, பிரம்மசமாஜத்திலிருந்து பிரிந்து 'இந்தியப் பிரம்ம சமாஜம்' என்ற புதிய அமைப்பைத்தொடங்கல்

1867 — '70—பொது வாழ்விலிருந்து விலகிப் பயணங்கள் செய்தே பெரும்பாலும் காலத்தைச் செலவிடல்.

1872 — கேசவசந்திரரின் பிரம்மோ திருமணச் சட்டம் பற்றி, சபை உறுப்பினர்களிடையே பெரிய கிளர்ச்சி தோன்றல்—தேவேந்திரநாதரின் தலைமையின் கீழிருந்த ஆதிப் பிரம்ம சபை அதன் விதிகளை எதிர்த்தல்—

1873 — '75—பயணங்களில்—குறிப்பாக இமயமலையில்—பெரும் பகுதிக் காலத்தைக் கழித்தல்

1875 — மார்ச்சு—தேவேந்திரரின் துணைவியார் சாரதாதேவி கல்கத்தாவில் காலமாதல்.

1877 — '78—சீனாவிற்குப் பயணம் சென்று வரல்

1879 — '85—இழந்த உடல் நலத்தைத் தேற்ற நாட்டின் பல பகுதிகளுக்கும் பயணம் சென்று காலம் கழித்தல்.

1886 — போல்பூர் நிலங்களைப் பற்றிய ஒரு அறக்கட்டளை நிறுவல்—அப்பகுதியில் ஒரு ஆசிரமம் கட்ட வேண்டுமென்றும், அங்கு உருவமற்ற, அளவில்லாப் பரம்பொருளை மட்டும் வழிபடல் வேண்டுமெனவும் குறித்தல்—

1898 — சுயசரிதை வெளியிடப்படல்.

1905 — ஜனவரி 19— கல்கத்தாவில் இறப்பு.

துணை நூல்கள்

மகரிஷி தேவேந்திரநாத தாகூரும் அவரைப் பற்றிப் பிறரும் எழுதிய தெரிந்தெடுக்கப்பட்ட நூல்கள் கீழ் வருவன ஆகும். தேவேந்திரர் எழுதிய நூல்களை அட்டவணைப் படுத்துவதில் ஜோகேஷ் சந்திர பாகல் பல அரிய செய்திகளைத் தந்து உதவி செய்தமைக்கு இந்த நூலாசிரியர் மிகவும் கடப்பாடுடையர். இந்தச் செய்திகள் பாகல் எழுதிய 'தேவேந்திரநாத தாகூர்' என்னும் வரலாற்று நூலின் இறுதியில் பிற்சேர்க்கையில் காணப்படுகின்றன. வங்காள சாகித்ய பரிஷத் வெளியிட்ட சாகித்ய-சதக்-சரித்திரமாலை தொடர் வரிசையில் இந்த நூலும் வெளியானது.

தேவேந்திரர் எழுதியவை :

வங்காளம்

பங்ளா பாஷா சமஸ்கிருத வியாகரண் : 1838-ஆம் ஆண்டு வாக்கில் எழுதப்பட்டது. தேவேந்திரர் எழுதிய முதல் நூல் என நம்பப்படுவது. இது கிடைக்கவில்லை.

பிரம்மோதர்ம : முதல், இரண்டாம் பாகங்கள் 1849 வங்காள மொழி பெயர்ப்புடன் ஒரு புதிய பதிப்பு 1851-'52-இல் வெளியானது. முழுமையான விளக்கவுரைகளும் குறிப்புரைகளும் கொண்ட மொத்த தொகுதி 1869-இல் வெளியானது.

ஆத்மதத்துவவித்யா : 1852 'தத்துவபோதினி பத்திரிகை'யில் வெளியான கட்டுரைகளிலிருுது தொகுக்கப்பட்டது.

பிரம்மோதர்மேர் மத் ஒ பீஸ்வாஸ் : (1890) 1859-'60 ஆண்டுகளில் பிரம்ம வித்யாலயாவில் ஆற்றிய பத்துச் சொற்பொழிவுகளின் தொகுப்பு.

பஸ்சிம் பிரதேஷேர் துர்பித்ஷா உபசமே சஸாஜ்ய சங்ரஹர்தே பிரம்மோ ஸமாஜேர் பக்திரிதா : **(வடமேற்கு மாகாண பஞ்ச நிவாரண நிதியுதவி விண்ணப்பம் :)**
1861 பிரம்ம சமாஜத்தில் இறை வழிபாட்டுக்குப்பின், வடமேற்கு மாகாணத்தில் பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்யும்படி உறுப்பினர்களை வேண்டி ஆற்றிய சொற்பொழிவு.

காலிகடா பிரம்மோ ஸமாஜேர் பத்திரிகா-1862: **(கல்கத்தா பிரம்மசமாஜப் பத்திரிகை)** தேவேந்திரநாதர் இமயமலைக்கு முதன்முறை பயணம் சென்று வந்தபின், கல்கத்தா பிரம்ம சமாஜத்தில் ஆற்றிய சொற்பொழிவுகள். ஜாதுநாத் சட்டர்ஜியால் தொகுக்கப்பட்டு வெளியானது.

மாசிக் பிரம்மசமாஜேர் உபதேச்: 1860-'67 ஆண்டுகளில் பிரம்மசமாஜத்தில் ஆற்றிய பதினெட்டுச் சொற்பொழிவுகளின் தொகுப்பு.

பிரம்மோதர்மேர் பியாக்யான் **(பிரம்மோதர்ம விளக்கவுரை)**: முதற்பதிப்பு-1861. இரண்டாம் பதிப்பு-1866. இரண்டு பதிப்புகளுக்கும் ஒரு முகவுரை-1885 பிரம்மசமாஜப் பீடத்திலிருந்து முதன் முதலாகத் தேவேந்திரர் ஆற்றிய சொற்பொழிவுகள்.

பிரம்மோ பிபாஹபிரணளி **(பிரம்ம விவாக முறை)**: 1864, பிரம்மசமாஜத் திருமண முறை பற்றிய சிற்றறிக்கை.

பிரம்மோ ஸமாஜேர் பஞ்சபிங்சதி பத்சரேர் பரிக்ஷித பிருத்தாந்த **(பிரம்மசமாஜம் 25 ஆண்டுகள் வளர்ந்த வரலாறு**: 1864-இல் பிரம்மசமாஜம் தோன்றி வளர்ந்த இருபத்தைந்தாண்டுக் கால வளர்ச்சியை விளக்கிப் பிரம்ம பந்து சபையில் ஆற்றிய சொற்பொழிவு.

பிரம்மோதர்மேர் அனுஷ்டான் பத்ததி **(பிரம்மோதர்மச் சடங்குகள்)**: 1865 பிறப்பு, பெயரிடல், பூணூல் சூட்டல், தீக்கை பெறுதல், திருமணம் முதலிய சடங்குகளை எவ்வாறு பிரம்ம சமாஜத்தவர்கள் நடத்த வேண்டும் என்று விளக்கும் நூல்.
பவானிப்பூர் பிரம்மவித்யாலயேர் உபதேச் 1865-'66 பவானிப்பூர் பிரம்ம வித்யாலயத்தில் ஆற்றிய சொற்பொழிவுகளின் நூல்வடிவம்.

ஞான் ஓதர்மேர் உன்னதி **(உலகம் மற்றும் மனிதப் பரிணும வளர்ச்சி)** 1893. குறிப்பாக இளம் மாணவர்களுக்கு அறிவூட்ட என, உலகத் தோற்றம், மனிதனின் பரிணும வளர்ச்சி ஆகியவற்றைப்பற்றி நிகழ்த்திய பதினுன்கு சொற்பொழிவுகளின் தொகுப்பு. சிதீந்திரநாத தாகூர் அவர்கள் தொகுத்தது.

பரலோக் ஓ முக்தி **(இந்த உலகிற்கு அப்பால்)**: 1895. இவ்வுலக வாழ்விற்கு அப்பாலுள்ள வாழ்வு பற்றியும் அதனோடு தொடர்புள்ள பிற பொருள்கள் பற்றியும் எழுதியது.

பூஜ்யபாதஜீமன் மஹர்ஷி தேவேந்திரநாத தாகூரேர் ஸ்வரசித ஜீவன் சரிதீ **(அருள்திரு ஸ்ரீமன் மகரிஷி தேவேந்திர**

நாத தாகூரின் சுயசரிதை) : 1898. " ஆத்மஜீவினி " என்னும் தலைப்பில் பிரியநாத சாஸ்திரியால் வெளியிடப்பட்டது. நான்காம் பதிப்பு 1962. விஸ்வபாரதியில் சதீஸ்சந்திர சக்ர வர்த்தி பதிப்பித்தது.

'*பத்ராவளி*' 1850 - '87 ஆண்டுகளில் எழுதப்பட்ட கடிதங்கள். பிரியநாத சாஸ்திரியால் வெளியிடப்பட்டுள்ளது. உறிடபாடி அச்சகம், கல்கத்தா.

ஆங்கிலம்

வேதான்திக் டாக்டிரின்ஸ் விண்டிகேடட் (**வேதாங்கக் கோட்பாட்டின் மெய்ம்மை நிலைநிறுத்தம்**) : 1845. இந்து மதத்திற்கு எதிராக அலெக்சாண்டர், டப் கூறிய குற்றச் சாட்டுகளை மறுத்துத் 'தத்துவப் போதினிப் பத்திரிகையில் எழுதிய கட்டுரைகள்.

தி ஆடோபையாகிரபி ஆப் மஹர்ஷி தேவேந்திரநாத டாகூர் (**மகரிஷி தேவேந்திரநாத தாகூரின் சுயசரிதை**) **:** எஸ். கே. லகிர் அண்டு கம்பெனி, கல்கத்தா - 1909. வங்க மூலத்திலிருந்து சத்யேந்திரநாத தாகூரும் இந்திரா தேவியும் மொழி பெயர்த்தது-இரண்டாம் பதிப்பு, மேக்மில்லன் அண்டு கோ, லண்டன், 1914.

தேவேந்திரநாதரைப் பற்றிப் பிறர் எழுதியவை

வங்காளம்

பாகல், ஜோகேஷ்சந்திரர் : *தேவேந்திரநாத தாகூர்*'— மூன்றும் பதிப்பு. வங்காள சாகித்ய பரிஷத், கல்கத்தா—1957.

போஸ், ராஜ்நாராயண் : *சீகல் ஆர் ஏகல்* கல்கத்தா 1958.

பாகல், ஜோகேஷ்சந்திரர் : *சுயசரிதை* (*ஆத்மஜீவினி*) யின்

பர்மன், தேவஜோதி :

சக்கரவர்த்தி, சதீஷ்சந்திரர் : இறுதியில் மூவரும் கொடுத்துள்ள விரிவான குறிப்புகள். *சதீஷ் சந்திர சக்ரவர்த்தி* பதிப்பித்தது. நான்காம் பதிப்பு, விஸ்வபா*ரதி* 1962.

சக்கரவத்தி, அஜித்குமார் : '*மகரிஷி தேவேந்திரநாத தாகூர்*' இந்தியன் அச்சகம், அலகாபாத். 1916 புதிய பதிப்பு ஜிஜ்நாசா, கல்கத்தா 1971.

சட்டர்ஜி, நாகேந்திரநாத : '*மகாத்மா ராஜாராம் மோகன் ராயேர் ஜீவன் சரித்*'. ஐந்தாம் பதிப்பு. இந்தியன் அச்சகம், அலகாபாத் 1928. மறு பதிப்பு, டே புத்தக எல்போர்ஸ். கல்கத்தா 1971.

டட்டா, பவசிந்து : '*மகரிஷி தேவேந்திரநாத தாகூரேர் ஜீவன் சரித்*' கல்கத்தா 1914.

முகோபாத்யாய, பிரபாத்குமார் : '*ரவீந்தர ஜீவனி*' முதல் பாகம் விசுவபா*ரதி*.

தாகூர், சிதீந்திரநாத : '*துவாரகநாத தாகூரேர் ஜீவனி*' — ரவீந்திர — பாரதி பல்கலைக்கழகம், கல்கத்தா 1969.

தாகூர், ரவீந்திரநாத : '*மகரிஷி தேவேந்திரநாத்*' தந்தையார் பற்றிய நினைவுகள்—பித்ருஸ்மிருதி என்ற சௌதாமினி தேவியின் நூலும் அடங்கியது. புலின்விகாரிசென் தொகுத்தது. விஸ்வபா*ரதி*—1967

மகரிஷி தேவேந்திரநாத தாகூர்: மகரிஷியின் 150—ஆவது பிறந்த நாள் விழாவை ஒட்டி வெளியிடப் பட்டது — சாந்திநிகேதன் — 1967

ஆங்கிலம்

ஹல்டார், சுகுமார், பி ஏ.: '*எமிட் விக்டோரியன் ஹிந்து*' (விக்டோரியா இடைக்காலத்தில் ஒரு இந்து) ராகல் தாஸ் ஹல்டார் வாழ்க்கைச் சுருக்கங்கள் — 1921

மித்ரா கிஷோரி சந்த் : '*மெமாயிர் ஆப் துவாரகநாத டாகூர்*' (துவாரகநாத தாகூரின் நினைவுகள்) தாக்கர், ஸ்பிங்க் அண்டு கம்பெனி, 1870.

சாஸ்திரி, சிவநாத், எம் ஏ : '*ஹிஸ்டரி ஆப் தி பிரம்மோ ஸமாஜ்*' (பிரம்மசமாஜ வரலாறு) — தொகுதி 1 இரண்டாம் பதிப்பு - ஆர். சட்டர்ஜி 1919.

Indian Institute of Advanced Study
117387
14/12/04
SHIMLA

இந்திய இலக்கியச் சிற்பிகள்

தற்கால, பழம்பெரும் படைப்புக்களில், தலை சிறந்த இந்திய இலக்கியச் சிற்பிகளைப் பற்றி உணர இப்புத்தக வரிசை உதவும்.

இந்த வரிசையில் வெளியான நூல்கள் :
(எல்லாம் ஆங்கிலத்தில் கிடைக்கும்).

* லட்சுமிநாத பெஸ்பருவா —H. பருவா
* ராஜாராம் மோகன்ராய் —சௌ. டாகூர்
* கேசவஸுதர் —பிரபாகர் மாச்வே
இளங்கோ அடிகள் —மு. வரதராசன்
* பிரேம் சந்த் —பிரகாஷ் சந்திரகுப்தா
* ஈசுவர சந்திர வித்யாசாகர் H. டானர்ஜி
* கபீர் —பிரபாகர் மாச்வே
* தாருதத் —பத்மினி ஸென்குப்தா
* வேமனா —வி. ஆர். நார்லா
* வீரேசலிங்கம் —வி. ஆர். நார்லா
காலீப் எம். முஜீப்
* மீராபாய் —உஷா நில்ஸன்
ஷா லதீப் —K. B. அத்வானி
சண்டிதாஸ் —சுகுமார் ஸென்
பிரமதா சௌதுரி —அ. முகோபாத்யாய
பாரதேந்து ஹரிச்சந்திரா —மதன்கோபால்
சசால் சர்மாஸ்த் —K. B. அத்வானி
ஜீவனனந்த தாஸ் —சி. தாஸ் குப்தா
* ஸ்ரீ அரவிந்தர் —மனோஜ் தாஸ்
போதனா —D. வேங்கடாவதானி
சி. ஆர். ரெட்டி —D. ஆஞ்சநேயலு
ஞானதேவ —பி. ஒய். தேஷ்பாண்டே
ஜெயதேவ —சுநீதிகுமார் சாட்டர்ஜி
* மகரிஷி தேவேந்திரநாத் தாகூர் —நா. சௌதுரி
சரோஜினி நாயுடு —ப. ஸென்குப்தா
* B. M. ஸ்ரீகண்டய்யா —A. N. மூர்த்தி ராவ்
* குமாரன் ஆசான் K. M. ஜார்ஜ்
* வள்ளத்தோள் —ஹிருதயகுமாரி
கம்பன் —எஸ். மகராஜன்
நம்மாழ்வார் —அ. சீனிவாசராகவன்
* சந்துமேனன் T. C. S. மேனன்
மாணிக்கவாசகர் —G. வன்மீகநாதன்
வேதம் வெங்கடராய சாஸ்திரி— V. V. சாஸ்திரி (ஜுனியர்)
வித்யாபதி —ரமாநாத் ஜா
மகாகவி உள்ளூர் —சுகுமார் அழிகோட்
* காஸி நஸ்ருல் இஸ்லாம் —கோபால் ஹால்டார்
* பாணபட்டர்—கே. கிருஷ்ணமூர்த்தி
* பங்கிம்சந்திர சாட்டர்ஜி—சு. ச. ஸென்குப்தா
* பசவேஸ்வரர் —H. திப்பெருத்ரசுவாமி

சாகித்திய அக்காதெமி
ரவீந்திர பவன், புது தில்லி—1.
சென்னை-18, பம்பாய்-14, கல்கத்தா-29.

இந்திய இலக்கியச் சிற்பிகள்

இந்த வரிசையில் இதுவரை தமிழில் வெளிவந்துள்ள நூல்கள் :

1. லட்சுமிநாத பெஸ்பருவா—ஹேம்பருவா
   தமிழ் : க. த. திருநாவுக்கரசு
2. கபீர்—பிரபாகர் மாச்வே
   தமிழ் : தி. வேங்கடகிருஷ்ணய்யங்கார்
3. கேசவஸுதர்—பிரபாகர் மாச்வே
   தமிழ் : ராம கோபிநாதன்
4. ஈசுவர் சந்திர வித்யாசாகர்—ஹிரண்மய் பானர்ஜி
   தமிழ் : ராம கோபிநாதன்
5. ராஜா ராம் மோகன் ராய்—சௌமியேந்திர நாத தாகூர்
   தமிழ் : க. த. திருநாவுக்கரசு
6. பிரேம்சந்த்—பிரகாஷ் சந்திர குப்தா
   தமிழ் : சரஸ்வதி ராமநாத்
7. குமாரன் ஆசான்—கே. எம். ஜார்ஜ்
   தமிழ் : கே. சி. சங்கரநாராயணன்
8. தாரு தத்—பத்மினி ஸென்குப்தா
   தமிழ் : அ. சீனிவாச ராகவன்
9. வீரேசலிங்கம்—வி. ஆர். நார்லா
   தமிழ் : நா. பார்த்தசாரதி
10. ஸ்ரீ அரவிந்தர்—மனோஜ்தாஸ்
    தமிழ் : பி. கோதண்டராமன்
11. மீராபாய்—உஷா நில்சன்
    தமிழ் : எஸ். கந்தசாமி 'துறைவன்'
12. வேமனர்—வி. ஆர். நார்லா
    தமிழ் : ந. சுப்பு ரெட்டியார்
13. B. M. ஸ்ரீகண்டய்யா—A. N. மூர்த்தி ராவ்
    தமிழ் : இரா. மதிவாணன்
14. சந்துமேனன்—டி. சி. சங்கரமேனன்
    தமிழ் : கு. இராஜவேலு
15. காஸி நஸ்ருல் இஸ்லாம்—கோபால் ஹால்டார்
    தமிழ் : K. P. S ஹமீத்
16. வள்ளத்தோள்—ஹிருதயகுமாரி
    தமிழ் : மா. இளையபெருமாள்
17. பசவேஸ்வரர்—H. திப்பேருத்ரசுவாமி
    தமிழ் : T.K. நாகாம்பாள்
18. பாணபட்டர்—கே. கிருஷ்ணமூர்த்தி
    தமிழ் : பெ. திருஞானசம்பந்தன்
19. பங்கிம்சந்திர சாட்டர்ஜி—சு. ச. செ
    தமிழ் : அசோகமித்திரன்
20. மகரிஷி தேவேந்திரநாத தாகூர்—ந
    தமிழ்: கா. மீனுட்சி சுந்தரம்

Library IIAS, Shimla
T 923.654 T 129 C
00117387

ஒவ்வொரு நூலும் SAHITYA AKADEMI
REVISED PRICE Rs. 15.00